விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 03 வியாழக்கிழமை (16.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## பயிற்சிபெற்ற புலிகளுடன் மோதுவதற்காக அமைதிப்படையை அனுப்பியது பெரிய தவறு



### பிரபாகரனை கொல்ல சந்தர்ப்பம் கிடைத்தும் தவறவிட்டோம் – சிங்

(புதுடில்லி)

இந்திய இராணுவத்தால் பயிற்சி வழங்கப்பட்ட விடுதலைப்புலிகளுடன் மோதுவதற்காக இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பியது மிக உயர் மட்டத்தில் எடுக்கப்பட்ட தவறான முடிவு என்று இந்திய இராணுவத்தின் முன்னாள் தலைமைத் தளபதியும், தற்போதைய இந்திய வெளியுறவுத்துறை துணை அமைச்சருமான வி.கே. சிங் விமர்சித்துள்ளார்.

இலங்கைக்கு இராணுவத்தை அனுப்புவது என்ற முடிவு இராணுவ மட்டத்தில் எடுக்கப்படவில்லை என்றும், இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும்இடையே இலங்கையில்சண்டை நடந்துகொண்டிருந்த சமயத்தில் இந்திய அரசு இலங்கை அரசுடன் மட்டும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதை குறிப்பிட்டுக் காட்டிய அவர், இந்திய இராணுவம் தான் பயிற்சியளித்த நபர்களுடன் மோத வேண்டிய சூழல் 24ஆம் பக்கம் பார்க்க....

# உள் விசாரணையில் நம்பிக்கை இல்லை

## ஐ.நா. சிறப்பு பிரதிநிதி மீளவும் சுட்டிக்காட்டு

(ஜெனிவா)

இலங்கை அரசால் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களை ஆராயும் பொருட்டு அமைக்கப்பட்ட பல ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் சமூகத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உரிமையை பாதுகாக்கவோ அல்லது அவ்வாறான சூழல் மீண்டும் ஏற்படாது என்பதை அரசு உறுதி செய்யும் வகையிலோ காத்திரமான பங்களிப்பைச் செய்யவில்லை என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் சிறப்பு பிரதிநிதி பாப்லோ டி கிராப் மீண்டும் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



### தேர்தல் மாற்றம் சு.கட்சி இணக்கம்

(கொழும்பு)

தேர்தல் முறைமை மாற்றத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணக்கம் வெளியிட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தொகுதிவாரி மற்றும் விகிதாசார முறைமையில் தேர்தல் நடத்தப்படுவதற்கு சுதந்திரக் கட்சி சம்மதம் வெளியிட்டுள்ளது. இதன் மூலம் தொகுதி வாரி 24ஆம் பக்கம் பார்க்க....

### முல்லையில் நாளை புதுவருட விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டிசுட்டான் பிரதேச செயலக கற்சிலைமடு பிரிவில் நாளை 17-ம் திகதி புதுவருட விழா கொண்டாடப்படவுள்ளது.

கற்சிலைமடு அ.த.க பாடசாலை மைதானத்தில் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை பல்வேறு வகையான நிகழ்வுகள் வெகு விமர்சையாக ஏற்பாடு செய்யப்பட 24ஆம் பக்கம் பார்க்க....

### கணவர் குறித்து அரசாங்கத்தின் விசாரணையில் திருப்தியில்லை

#### பிரகீத்தின் மனைவி சந்தியா கவலை

(கொழும்பு)

தனது கணவர் காணாமல் போனமை சம்பந்தமாக புதிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் விசாரணைகள் குறித்து திருப்தியடைய முடியாது என ஊடகவியலாளர் பிரகீத் எக்நேலியகொடவின் மனைவியான சந்தியா தெரிவித்துள்ளார்.

கணவர் காணாமல் போன சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைப்பதாக அரசாங்கம் அறிவித்த போதிலும் அந்த விசாரணைகளின் முன்னேற்றம் பற்றி தனக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் சந்தியா கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த வருட இறுதிக்குள் பிரகீத்திற்கு என்ன நடந்தது என்பதை கண்டறிந்து கூறுவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இலங்கையில் எந்த இரகசிய முகாம்களும் இல்லை என பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளமை குறித்து ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ள சந்தியா, காணாமல் போயுள்ள 24ஆம் பக்கம் பார்க்க....

### நிலையான வைப்புகள் மற்றும் கடன் வட்டி அலகுகள் குறைப்பு

#### இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை

(கொழும்பு)

வங்கி வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதில் தாக்கம் செலுத்தும் கொள்கை வட்டி வீதத்தை தொடர்ந்தும் வீழ்ச்சியுறச் செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் மத்திய வங்கியுடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின்போது தாக்கம் செலுத்தும் நிலையான வைப்புகள் மற்றும் கடன் வட்டி அலகுகள் 50 வீதமாகக் குறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஏப்ரல் மாதத்திற்கான தனது நிதிக்கொள்கையை பிரகடனப்படுத்தியுள்ள இலங்கை மத்திய வங்கி, பணவீக்கம் குறைந்துள்ள போதிலும், அதற்கேற்றவாறு சந்தை வட்டிவீதம் நிலையான மட்டத்தை எட்டவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

0.1 வீதமாக தற்போது வீழ்ச்சியடைந்துள்ள 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தைக் கொட்டி ஆடம்பரத் திருமணம்



புருனே சுல்தான் ஹசன் அல் போல்கியாவின் இளைய மகனும் பட்டத்து இளவரசருமான அப்துல் மாலிக்கின் திருமணம் உலகமே திரும்பி பார்க்கும் வகையில் ஆடம்பரமாக அண்மையில் நடைபெற்றது.

மணமக்கள் இருவரும் தங்கம், வைர நகைகளில் ஜொலித்தனர்.

புதுமணத் தம்பதிகளைக் காண தலைநகர் பண்டர் செரி பெகவனில் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டனர்.

இந்த ஆடம்பரத் திருமண வைபவத்திற்காக பல கோடி ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரர்களில் புருனே சுல்தான் ஹசன் அல் போல்கியாவும் ஒருவர்.

அவருக்கு மூன்று மனைவிகள், 12 பிள்ளைகள். இதில் 5 பேர் ஆண்கள், 7 பேர் பெண்கள்.

தற்போது திருமணம் நடைபெற்ற இளவரசர் அப்துல் மாலிக், சுல்தானின் தற்போதைய மனைவி ராணி சேலாஹாவுக்குப் பிறந்தவர்.

இவர் சுல்தானின் 6 ஆவது மகன். அப்துல் மாலிக்கிற்கும் சொப்ட்வெயார் இன்ஜினியர் தயாங்கு ரபி. அதுல் என்பவருக்கும் கடந்த 12 ஆம் திகதி வெகுவிமரிசையாக திருமணம் நடைபெற்றது.

அவர்கள் அணிந்திருந்த ஆடை முழுவதும தங்கம், வைரங்கள் பதிக்கப்பட்டிருந்தன.

மணமகள் ரபி கையில் வைத்திருந்த பூங்கொத்தில் மலர்களுக்குப் பதிலாக வைரங்கள் கோர்க்கப்பட்டிருந்தன.

அவர் அணிந்திருந்த வைர நெக்லஸ் கண்களைப் பறித்தன. வைர காதணிகள் எட்டு திக்கும் மின்னின. தலையில் அணிந்திருந்த தங்க கிரீடம் வைரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

காலணிகளைக் கூட முழுவதும் தங்கத்தால் வடிவமைத்திருந்தார்கள்.

ஒட்டுமொத்தமாக உச்சி முதல் உள்ளங்கால் வரை மணமகள் தங்கத்தில் இழைக்கப்பட்டிருந்ததைக் கண்டு பலரும் வியந்திருந்தனர். (செ-11)

## கடமை நிறைவேற்று அதிபர்களின் கலந்துரையாடல்

வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று 16ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மீசாலை பழைய புகையிரத நிலையம் முன்பாக உள்ள ஏசியன் கல்வி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றும் சகலரையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தின் ஏற்பாட்டுக் குழு கேட்டுள்ளது. (ந)

## 4 நாட்களில் போதையில் வாகனம் செலுத்திய 792 சாரதிகள் கைது

(கொழும்பு)

குடி போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 792 வாகனச் சாரதிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுவருட கொண்டாட்டங்களின் போது எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படாமலிருக்க பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட முன் எச்சரிக்கை நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடந்த 4 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 402 மோட்டார் வாகனச் சாரதிகளும், 307 ஓட்டோ சாரதிகளும், 26 கார் சாரதிகளும், 20 லொறி சாரதிகளும், 08 வான் சாரதிகளும் உள்ள டங்குகின்றனர். அவற்றுள் 04 தனியார் சேவை பஸ் சாரதிகளும், இலங்கை போக்கு வரத்து சேவையைச் சார்ந்த பஸ் சாரதி ஒருவரும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழ், சிங்கள புதுவருடத்தினை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நடவடிக்கை எதிர் வரும் 20 ஆம் திகதி வரை தொடருமெனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-11)

## ‘என் கனா உன் காதல்’ குறுந்திரைப்படம்




(யாழ்ப்பாணம்)

ஈழத்துக் கலைஞர்களான ஆகாஷின் இயக்கத்தில், விஸ்ணுகாந் மற்றும் நிரோசாவின் நடிப்பில் **என் கனா உன் காதல்** குறுந் திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

யாழினை தளமாக கொண்டு தயாரிக்கப்பட்ட இக்குறுந்திரைப்படம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.செல்லா திரையரங்கில் பி.ப 1.00 மணிக்கு திரையிடப்படவுள்ளது.

மேற்படி குறுந்திரைப்படத்திற்கான இசையை சுதர்சன் வழங்க, ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பினை சசிகரன்.யோ மேற்கொண்டுள்ளார்.

திரைப்பட பார்வையிடலுக்கான நுழைவு அனுமதிச் சீட்டு ரூபாய் 150 ஆகும். (செ)

## மகிந்த-எம்.பிகள் விசேட சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் இந்த விசேட சந்திப்பு தங்காலையில் நடைபெறவுள்ளது. புத்தாண்டு காலத்தில் சிங்கள மரபுகளின் அடிப்படையில் புத்தாண்டின் பின்னர் உறவினர் வீடுகளுக்கு செல்வது மரபாகும்.

அந்த வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மகிந்தவின் வீட்டுக்கு இன்று செல்லவுள்ளனர். எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ எந்தக் கட்சியின் கீழ் போட்டியிடுகின்றார் என்பது குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட உள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால், பொதுஜன முன்னணியின் கீழ் போட்டியிடுவது குறித்து மகிந்த திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு சுதந்திரக் கட்சியின் ஒரு தொகுதி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் ஆதரவளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## சித்திரை வருட சிறப்புப் பூஜை


(யாழ்ப்பாணம்)

யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின் அருள் ஒளி தர்சன மாலையும் சித்திரைப் புதுவருட சிறப்புப் பூஜையும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வவுனியா சாந்தசோலை வீதி, பூந்தோட்டம் என் னும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன.

அதேவேளை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பிற்பகல் 4.30 மணிக்கு இலங்கை வானொலி தமிழ்ச் சேவை யில் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ஜனாதிபதி மைத்திரி தலைமையில் புத்தரிசி பொங்கல் திருவிழா



(கொழும்பு)

பொலநறுவை-சோமாவதி நகரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் புத்தரிசி பொங்கல் திருவிழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில், அறுவடை செய்யப்பட்ட புது அரிசியின் முதற்பகுதி புத்தபெருமானுக்கு பூஜை செய்யப்பட்டது. அத்துடன், இனிவரும் காலங்களில் விளைச்சல் சிறந்து காணப்படவேண்டுமென வேண்டிக் கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் விவசாயிகளுடன் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரி, சோமாவதி விஹாரைக்கு பாற்சோறு வைத்து பூஜை செய்தார். இதனையடுத்து சோமாவதி விஹாரையின் விஹாராதிபதி சங்கைக்குரிய பகமுனே சுமங்கல தேரரை சந்தித்து உரையாடினார்.

அதேவேளை முன்னதாக, தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தலைக்கு எண்ணெய் தேய்க்கும் தேசிய நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது. சுகாதார மற்றும் சுதேச மருத்துவ திணைக்களத்தினால் வடமத்திய மாகாண கதுருவெல விகாராதிபதி கதுருவெல தம்மபால தேரர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

எண்ணெய் தேய்க்கும் வைபவத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டதுடன், 09.06 மணி சுப நேரத்தில் தலைக்கு எண்ணெய்த் தேய்த்துக்கொண்டார். இந்நிகழ்வில் யானைகளுக்கும் தலைக்கு எண்ணெய் பூசும் நிகழ்வு நடைபெற்றது. இந் நிகழவில் சுகாதார மற்றும் சுதேச வைத்திய துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட பலர்கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

அம்பாந்தோட்டை மாவட்டம் திஸ்ஸ மஹாராமவில் நேற்று கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பெரலிஹெல பாடசாலைக்கு அருகாமையில் இரண்டு தரப்பிற்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் 35 வயதுடைய நபர் ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான நபர் கடுமையான காயங்களுடன் தெபரவெல வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (செ-11)

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(இ-664) (C-8284)

வாழ்க்கையில் வெறுப்பா?
பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
மதச் சார்பற்றது.
காலை 9.00 – பி.ப 1.00
கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776
(C-632)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நுளம்பு குறித்து அவதானமாக இருங்கள்

## யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழில் தற்போது பெய்து வரும் மழையினால் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புண்டு என சுட்டிக்காட்டியுள்ள யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவினர் இது தொடர்பில் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.**

கடந்த சில நாட்களாக பெய்து வரம் திடீர் மழையினால் கழிவிடங்களில் நீர் தேங்கி டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

ஆகவே டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை இனங் கண்டு அழிப்பதற்கு பொதுமக்கள் தாமாகவே முன்வரல் வேண்டும் என தெரிவித்தனர்.

இதேவேளை யாழில் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு இந்த மாதத்தில் மட்டும் 5 பேர் வரையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்திய சாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக நல்லூர் பிரதேச சபை, சண்டிலிப்பாய் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட இடங்களிலேயே இந்நோயின் தாக்கம் தற்போதும் அதிகரித்து காணப்படுகின்றது என மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-4)

# நெல்தானமளிப்பு நிகழ்வு முதன்முறையாக யாழில்



(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு தமிழர் பாரம்பரிய நிகழ்வுகளில் ஒன்றான நெல் தானமளிப்பு விழா முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்று நடைபெற்றது. உணவு பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உழவர்களால் வழங்கப்பட்ட 2 மூட்டை நெல், ஒரு மூட்டை அரிசி மூன்று அர்ச்சர்களுக்கு தானமாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.விக்கேஸ்வரன், யாழ். மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், யாழ்ப்பாண பிரதேச செயலர் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (இ)

27 ஆண்டுகள்

# இந்திய சாமியாருக்கு அமெரிக்காவில் சிறை

அமெரிக்காவில் பொதுமக்களின் கடவுள் நம்பிக்கையை தனது சுய லாபத்திற்காகப் பயன்படுத்தி, வங்கி மற்றும் வரி மோசடி உட்பட பல்வேறு நிதி மோசடிக் குற்றங்களில் ஈடுபட்ட, இந்திய சாமியாருக்கு 27 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தில் இந்து கோவிலில் சாமியாராக இருந்தவர் "அண்ணாமலை. சுவாமி ஸ்ரீ செல்வம் சித்தர் என்றும் அங்குள்ளவர்களால் அழைக்கப்பட்டு வந்த இவர், கோவிலுக்கு கடவுளை தரிசிக்கவும், பூஜை தொடர்பாகவும்வரும்பக்தர்களின்கடவுள நம்பிக்கையை, தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண் டுள்ளார்.

இவருக்கு நெருக்கமான பக்தர்கள், தேவையான பணத்தை வழங்க தங்களது கிரெடிட் கார்ட்டு நம்பரையும் கொடுத்துள்ளனர். கோவிலுக்கு செலவு செய்வதாக பக்தர்களிடம்பொய்சொன்ன அண்ணாமலை அதனை பலமுறை உபயோகித்து உள்ளார். இதனால், பக்தர்கள் தங்களது கிரெடிட் கார்டுக்கு பணம் கட்டும்போது சந்தேகமடைந்தனர். அப்போது, கிரெடிட் கார்டு செலவு குறித்து அவர் போலியான ஆவணங்களை தாக்கல் செய்து வந்தது அவர்களுக்கு தெரியவந்தது. இதனையடுத்து சாமியார் அண்ணாமலை மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.



கோவில் மூலமாகவும், கிரெடிட் கார்ட்டு மூலமாகவும் கிடைத்த பணம் அனைத்தையும் அண்ணாமலை தனது சொந்த செலவுக்காக பயன்படுத்திக் கொண்டு ஆடம்பரமான வீடுகள், நிலங்கள் மற்றும் பல சொகுசு கார்களை வாங்கிக் குவித்துள்ளார். மேலும் இந்தியாவில் உள்ள வங்கியிலும் இந்தப் பணத்தை சேமித்து வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கி மற்றும் வரி மோசடி தொடர்பான இந்த வழக்கை தீவிரமாக விசாரித்து வந்த நீதிபதி, சாமியார் அண்ணாமலையை குற்றவாளி என்று அறிவித்தார். இதனை தொடர்ந்து அவருக்கு 27 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# களஞ்சியறை உடைக்கப்பட்டு திருடப்பட்ட பொருட்கள் மீட்பு

(கரணவாய்)

கரவெட்டி கப்பூது நுணுப்பாவளை கந்தசாமி கோவில் களஞ்சியறை உடைக்கப்பட்டு திருடப்பட்ட பொருட்கள் வரணிப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 12 ஆம் திகதி மேற்படி கோவில் களஞ்சிய அறை மற்றும் மடப்பள்ளிஎன்பனஉடைக்கப்பட்டுபெருமளவான பொருட்கள் வாகனம் ஒன்றில் ஏற்றிச்செல்லப்பட்டிருந்தன.

இந்நிலையில் மறுநாள் இரவு வரணி தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் வழியில் பரந்தகுழி ஒன்றினுள் மேற்படி பொருட்கள் அனைத்தும் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளன.

அப்பகுதியால் சென்ற இளைஞர் ஒருவர் இதுபற்றி ஆலய குருக்களுக்கு அறிவித்துள்ளார்.

பின்னர் இதுபற்றி நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு ஆலய குருக்களுடன் சென்று பொருட்களை உறுதிப்படுத்தியதுடன் அவை மீண்டும் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டன.

திருடர்கள் தாம் திருடிய பொருட்களுடன் வாகனத்தில் இரவு நேரம் சென்றபோது வாகனம் நிலத்தில் புதையுண்டதாலேயே பொருட்கள் அனைத்தையும் இறக்கிவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (இ-3-60)

# கும்பாபிஷேகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இத்தியடி ஸ்ரீ நடன முத்துமாரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட பூசைகளுடன் கிரியைகள் ஆரம்பமாகி எதிர் வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-272)

# இராசி பலன்

16.04.2015
(சித்திரை 03, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துவாதசி காலை 7.56 மணிவரை
திரயோதசி பின்னிரவு 5.30 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 8.36 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

**மேடம்:** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**இடபம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சுழ்நிலை உருவாகும், வருமானம் உயர்வடையும் நாள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** தொட்ட காரியங்கள் எளிதில் கைகூடும், அரசு வழியில் அனுகூலமான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**கடகம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சியெடுக்கும் நாள், மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பீர்கள், விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகலாம்.

**கன்னி:** நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, தன்னம்பிக்கையோடு செற்படுவீர்கள்.

**துலாம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வியாபார விருத்தியுண்டு, மறைமுக எதிர்ப்புகள் மாறும், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** பொதுவாழ்வில் புகழ்கூடும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும் மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தொலை பேசித் தகவல்கள் மகிழ்ச்சிதரும்

**மகரம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், குடும்பத்தினர் பெருமைப் படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்

**மீனம்:** திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆன் மீக சிந்தனை மேலோங்கும் நாள் போசன சுகமுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 180**

## பயத்தை எதிர்கொள்ளல்

...அவர்கள் கடவுள் மற்றும் பிரபஞ்ச இருப்புத் தன்மை நோக்கிய ஒரு அன்பான மனோபாவத்துடன் வளர உதவுகள். இந்த விதத்தில் சாதாரணமாக வளர்வதைப் போல் அதிக பயத்துடன் வளர மாட்டார்கள்.

ஸ்வாமிஜி, நாங்கள் அவ்வப்பொழுது ஆச்சரியப் படுகிறோம்- எங்களுக்கு நிகழும் எதுவும் விதியா அல்லது எங்களுடைய தேர்வா?

(பரமஹம்ஸர் சிரிக்கிறார்!) மிகவும் வழக்கமாகக் கேட்கப்படும் ஒரு கேள்வி!

புரிந்து கொள்ளுங்கள்.... உங்களுடைய இந்தக் கணம், உங்களுடைய எல்லா கடந்த காலத் தீர்மானிங்களின் மொத்தத் தொகுப்பு. நீங்கள் இப்பொழுது இந்த இடத்தில் இருக்கிறீர்கள். அதிகாலையில் எழுந்து சரியான பாதையில் இங்கு வந்து, அமர்ந்து மேலும் தொடர்ந்து அமர்வதாகத் தீர்மானித்தீர்கள்...? சரிதானே!

இதேபோல், உங்களுடைய கடந்த காலத் தீர்மானங்கள் அனைத்தும் உங்களுடைய நிகழ்காலத்தை உருவாக்குகின்றன- இப்பொழுது இங்கு இருப்பது போல, அதேபோல், உங்களுடைய எதிர்காலம், உங்களுடைய எல்லா நிகழ்கால



தீர்மானங்களின் விளைவாக இருக்கும். இப்பொழுது அதை நாம் ஏன் விதி என்று நினைக்கிறோம்? ஏனெனில், நாம் நமது தீர்மானங்களை விழிப்பின்றி செய்கிறோம்; விளைவுக் நமது வழியில் வருவதை நாம் எதிர்பார்ப்பதில்லை. எதிர்பார்க்காத அல்லது சாதகமற்ற விளைவுகள் நிகழும்பொழுது அதை நாம் விதி என்று அழைக்கிறோம்.

விழிப்புடன் தீர்மானங்களை எடுக்கும்பொழுது நாம் அதன் பக்க விளைவுகளையும் பின் விளைவுகளையும் அறிவோம். நாம் பக்க விளைவுகளையும் பின் விளைவுகளையும் அறியாத போது அதை விதி என்று சொல்கிறோம். உண்மையில் வாழ்க்கையே உங்களுடைய தேர்வுதான். நாம்தான் தீர்மானங்களை எடுக்கிறோம்; ஒரு போதும் நமக்காக வேறு யாரும் எடுப்ப தில்லை.

கடவுள் மிகவும் கருணையுள்ளவர். இந்த உலகம் அவருடையதாக இருப்பினும், அவர் நம்மை நம் விருப்பப்படி இருப்பதற்கு அனுமதிக்கிறார்! விழிப்புணர்வை உங்கள் சுவாசத்திலேயே புகுத்துவதுதான், சரியான தீர்மானங்களை எடுப்பதற்கான ஒரே வழி. அதனால் உங்களுடைய எல்லாச் செயலுமே, எல்லாத் தீர்மானங்களுமே விழிப்புணர்வுடனேயே நிகழும்;

நீங்கள் விழிப்பற்ற அல்லது ஆழமன நிலையில் தீர்மானம் எடுக்கும் நிலைக்கு ஒருபோதும் நழுவி விழுந்து விட மாட்டீர்கள். அவ்வளவே பிறகு நீங்கள் உங்கள் ஊழ்வினை பற்றியும், விதி பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




### தோலையே கரும்பலகையாக பயன்படுத்தும் அதிசய ஆசிரியர்: பாடம் படிக்க வரிசையில் நிற்கும் மாணவர்கள்

பிரித்தானியாவில் பேராசிரியர் ஒருவர் தனது உடலின் தோலையே கரும்பலகையாக பயன்படுத்தி பாடம் எடுத்தி வருவது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.


மாணவர்களுக்கு வகுப்பு எடுக்கும்போது பாடம் தொடர்பான விளக்கங்களை எழுத்து வடிவில் கற்பிக்க வெள்ளை அல்லது கரும்பலகைகளை ஆசிரியர்கள் பயன்படுத்துவது வழக்கம்.

ஆனால் பிரித்தானியாவில் உள்ள East Anglia பல்கலைக்கழகத்தில் வேதியியல் பேராசிரியராக பணியாற்றி வரும் Zoe Waller(31) என்பவர் இதில் சற்று வித்தியாசமானவர்.

மாணவர்களுக்கு பாடம் எடுப்பதற்கு வெள்ளை அல்லது கரும்பலகை என எதையும் பயன்படுத்தாமல், தனது கையில் உள்ள தோலையே கரும்பலகையாக பயன்படுத்தி வருகிறார்.

வெள்ளைப் பலகையில் என்ன வரைய வேண்டுமோ அதை, ஒரு பென்சில் எடுத்து தனது கைத் தோலை கீறிப் படமாக வரைந்து, மாணவர்களுக்குப் பாடம் நடத்துகிறார்.






பென்சில் அல்லது பிற கூர்மையான குச்சியை எடுத்து கைத் தோலில் கீறும்போது, அதே வடிவில் தோலில் வீக்கம் ஏற்பட்டு அது ஒரு வரைபடமாக மாறுகிறது.

பேராசிரியர் எந்த அளவிற்கு அழுத்தம் கொடுக்கிறாரோ அந்த அளவிற்கு அவரது தோலும் ஈடுகொடுத்து செயற்படுகிறது.

இந்தச் செயலால் பல்கலைக்கழகத்தில் உள்ள ஒட்டுமொத்த மாணவர்களையும் வியப்பில் ஆழ்த்தியிருப்பதற்கு ஒரே காரணம் அவருக்கு urticaria (அரிக்கும் தடிப்புகள் கொண்ட தோல் வியாதி) என்ற வியாதி உள்ளது. இந்த வியாதியால் பாதிக்கப்பட்டால், அவரது எந்த உறுப்பில் உள்ள தோல் மீது கீறினாலும் தடிப்புகள் ஏற்பட்டு சிறிது நேரத்திலேயே மறைந்து விடும்.

இது பற்றி பேராசிரியர் Zoe Waller கூறுகையில், இந்த அபூர்வமான அம்சம் எனது தோலில் இருப்பது எனக்கு வித்தியாசமான அனுபவத்தைத் தருவதுடன், அவ்வாறு செய்யும்போது சிறிதளவு வலியும் ஏற்படாது என மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார். பல்கலைக்கழகத்தில் வித்தியாசமான முறையில் பாடம் எடுப்பதால், இவரிடம் பாடம் பயில அதே துறையைச் சேர்ந்த பெருமளவிலான மாணவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




## ஓட்ஸ் வடை

**தே.பொருட்கள்:**

ஓட்ஸ் - 1 கப்

கடலைப்பருப்பு - 1 கப்

மிளகாய் - 3

சோம்பு - 1 டீஸ்பூன்

வெங்காயம் - 1

கறிவேப்பிலை - சிறிது

உப்பு - தேவையான அளவு

எண்ணெய் - பொரிக்க



**செய்முறை:**

கடலைப் பருப்பை ஊற வைத்து மிளகாய், சோம்பு சேர்த்து அரைத்துக் கொள்ளவும். ஓட்ஸை கரகரப்பாக மிக்ஸியில் சும்மா அரைத்துக்கொள்ளவும். வெங்காயம், கறிவேப்பிலை, கொத்தமல்லியை பொடியாக நறுக்கவும்.

அரைத்து வைத்துள்ள மாவில் நறுக்கிய வெங்காயம், கொத்தமல்லி, கறிவேப்பிலை, ஓட்ஸ், தேவையான அளவு உப்பு சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் சூடாக்கி இந்த மாவை சிறு சிறு வடைகளாக தட்டிப் போட்டு பொன்னிறமாக பொரித்தெடுத்து பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# அவல நிலை தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

**யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் அதிகரிப்பினால் நோயாளர்கள் கட்டில்கள் அற்ற நிலை யில் வெறுந்தரைகளில் பாய் விரித்து தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதென யாழ். போதனா வைத்திய சாலை யின் பிரதிப் பணிப்பாளர் வைத் திய கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.**

கடந்த சில நாட்களாக பெய்து வருகின்ற மழையினால் யாழ். போதனா வைத்தியசாலையில் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவோரில் 10 வீதமானோர் கட்டில்கள் அற்ற நிலையில் வெறுந்தரையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலை ஒவ்வொரு வருடமும் தொடர்கின்ற போதிலும் சரியானதொரு தீர்வு எட்டப்படாத நிலையே காணப்படுகின்றது. இது தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளரிடம் நேற்றைய தினம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் காணப்படுகின்ற கட்டில்கள் பற்றாக்குறை களினால் நோயாளர்களில் சிலர் சரியான வசதியின்மை காரணமாக வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கு தெரியாமல் வீடுகளிற்குச் சென்று விடுகின்றனர்.

கட்டில்கள் இன்மையினால் நடைபாதைகளில் பாய் போட்டு தங்குவதனால் மழை காலங்களில் நடைபாதைகளில் மழை நீர் தெறிப்பதோடு இவ் விடங்கள் சேறும் சகதியுமா கவும் காணப்படுகின்றன. இத னால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக இந்நிலைமை யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் காணப்படுவதனால் காயமடைந்து சிகிச்சைக்காக வருகின்ற நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் நோயா ளர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலையில் கட்டில்கள் பற்றாக்குறை காணப்படுவது உண்மையே. இதற்கு அதிகரித்த நோயாளர் எண்ணிக்கைதான் காரணம்.

இங்குள்ள நோயாளர் விடுதிகளில் ஆயிரத்து 300 கட்டில்களே காணப்படுகின்ற போதிலும் ஆயிரத்து 700 நோயாளர்கள் விடுதிகளில் தங்கியுள்ளனர். கட்டில்கள் பற்றாக் குறையாக காணப்படுகின்றது என்பதனால் வருகின்ற நோயாளர்களினை திருப்பியனுப்ப முடியாது.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட நோயர்களும் சிகிச்சைக்கு வருகின்றனர்.

இந்நோயாளர் அதிகரிப்பிற்கு ஏற்ப யாழ். போதனா வைத்தியசாலையினை விஸ்தரிப்புச் செய்தல் வேண்டும். அல்லது மாவட்டங்களில் உள்ள ஏனைய வைத்திய சா லைகளுக்கு நோயாளர்களினை பகிர்ந்தளிப்புச் செய்தல் வேண்டும். இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் தொடர்ந்தும் இப்பிரச்சினை இருக்கும் என பதில் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பெண்களுக்கு மலாலா மடல்!



தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பெண்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் அவர்,

நைஜீரியாவின் போர்னோ மாகாணத்தில் கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் சிபோக்கில் 270க்கும் மேற்பட்ட மாணவிகளை போகோ ஹராம் தீவிரவாதிகள் கடத்தி ஒரு வருடம் பூர்த்தியாகியுள் ளது.

இந்நிலையில், அமைதிக்கான நோபல் பரிசு வென்ற பாகிஸ்தான் சிறுமி மலாலா யூசூப்சாயி போகோஹராம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பெண்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் அவர், "உங்களை மீட்பதில் நைஜீரிய தலைவர்களும், சர்வதேச சமூகமும் போதிய உதவி செய்யவில்லை. உங்களை மீட்பதற்கு அவர்கள் அதிகம் அக்கறை செலுத்தியிருக்க வேண்டும்.

நீங்கள் பத்திரமாக விடுதலையாக வேண்டும் என்பதற்காக குரல் கொடுக்கும் பலரில் நானும் ஒருவர்.

நீங்கள் இதுநாள் வரை தீவிரவாதிகள் பிடியில் சிக்கிக் கொண்டு படும் வேதனைகளை யூகித்துப் பார்க்கக் கூட முடியவில்லை. ஆனால், நாங்கள் உங்களை மறந்துவிடவில்லை. இதை மட்டும் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் அனைவரையும் ஆரத் தழுவி, உங்களுடன் சேர்ந்து இறைவணைத் தொழுது, உங்கள் குடும்பத்தினர் உங்கள் விடுதலையை கொண்டாடும் போது நானும் அதில் பங்கேற்க வேண்டும். அந்த நாளை நான் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். நீங்கள் அனைவரும் எனது சகோதரிகள். அதுவும் துணிச்சலான சகோதரிகள்" என குறிப்பிட்டுள்ளார்.

போகோஹராம் தீவிரவாதிகளால் நைஜீரிய மாணவிகள் கடத்தப்பட்ட ஓராண்டு கடந்ததை நினைவுகூரும் வகையில் ('Bring Back Our Girls') பிரிங் பேக் அவர் கேர்ள்ஸ் என்ற பிரசாரக் குழு சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

## பொலிஸாருக்கு எதிராக கடந்த 3 மாதங்களில் பொலிஸ் ஆணைக்குழுவில் 8 முறைப்பாடுகள்

வடமாகாணத்தில் உள்ள பொலிஸாருக்கு எதிராக கடந்த மூன்று மாதங்களில் 8 முறைப்பாடுகள் பொதுமக்களால் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வட மாகாண பணிப்பாளர் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளுக்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காமை, சட்டத்துக்கு முரணான வகையில் நடந்து கொள்ளுதல், பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு தாமதித்தல், அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் மேற்கொள்ளுதல் போன்ற குற்றங்களுக்காக பொதுமக்களால் பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள் ளன.

யாழ்ப்பாண பொலிஸாருக்கு எதிராக இரண்டு முறைப்பாடுகளும் மன்னார், சுன்னாகம், பளை, தெல்லிப்பழை, அச்சுவேலி, வட்டுக்கோட்டை ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக தலா ஒரு முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட எட்டு முறைப்பாடுகளில் மூன்று முறைப்பாடுகள் தீர்க்கப் பட்டு ஐந்து முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடம் பொலிஸாருக்கு எதிராக 16 முறைப்பாடுகள் பொதுமக்களால் பொலிஸ் ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டு தீர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)


KANDY HOMES
& Construction

நவீன வடிவமைப்புகளில் உங்களது விருப்பத்திற்கு அமைய எண்ணம் போல அழகிய வீட்டினை வாஸ்துசாஸ்திரமுறைப்படி நாம் அமைத்துக் கொடுக்கின்றோம்.



15 வருடகால அனுபவம் வாய்ந்த சேவைத்துறையில்...

தற்பொழுது எமது நிறுவனத்தால் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளினையும் கட்டிக்கொண்டிருக்கும் வீடுகளையும் நேரில் பார்வையிடலாம்.

81, Palaly Road
Illupaiyadi Junction,
Jaffna.
T.P : 0777 462 889
0777 463 469
021 791 7623
E-mail : kandyhomes11@gmail.com

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 75
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: 10 தரம்/ தனியார் தொழில்
தொ.இ: B/525

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 12
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L/ அரச தொழில்
தொ.இ: B/527

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 112 சூரிசெவ் 7 இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்: O/L பிரான்ஸ் PR
தொ.இ: B/528

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 36
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/535

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 78
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்
தொ.இ: G/940

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 29
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/944

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 5 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
தொ.இ: G/948

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 43 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/949

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் கிணற்று நீரில் எண்ணெய் கலப்பது பற்றி அறிய சுயாதீன ஆணைக்குழு அமைப்பதற்கான வேண்டுகோள்

## ஜனாதிபதியிடம் விடுத்தது மார்க்சிச லெனினிச கட்சி

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் கிணற்று நீரில் எண்ணெய் கலப்பது பற்றி சுயாதீன ஆணைக்குழு அமைப்பதற்கான வேண்டுகோளை விடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.**

அந்த மகஜரில் 2014 ஆம் ஆண்டு பிற்பகுதியில் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திற்கு அருகாமையிலுள்ள பல கிணறுகளில் காணப்பட்ட எண்ணெய்ப் படிமம் தற்போது முதலில் காணப்பட்ட இடத்திலிருந்து சில மைல்களுக்கு அப்பால் உள்ள பல கிணறுகளுக்கும் பரவியுள்ளது.

இதுவரை கண்டறியப்பட்ட உண்மைகள் இந்த எண்ணெய்ப் படிமம் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்துதான் ஆரம்பித்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றன. குடிநீர் மற்றும் அன்றாடத் தேவைகளுக்காகக் கிணற்று நீரிலேயே தங்கியுள்ள மக்களின் சுகாதாரம், பாதுகாப்பு ஆகியவை கடுமையாகப் பாதிப்படைந்துள்ளன.

முதலாவதாகத் தண்ணீர்த் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தேவையான நடவடிக்கை உடனடித் தேவையாகும். பவுசர்கள் மூலம் விநியோகிக்கப்படும் நீர், குடிநீர்த் தேவையை மட்டும் ஓரளவு நிவர்த்தி செய்தாலும் நீர்த்தேவையைப் பூரணமாகத் தீர்த்து வைக்க முடியாது. குளிப்பதற்கும் உடுபுடைவைகள் கழுவுவதற்கும் மாசடைந்த நீரைப் பாவிப்பதன் மூலம் ஆரோக்கியத்திற்கு ஆபத்து ஏற்படலாம் என்ற மக்களின் கவலை நியாயமானதே. எனவே கிணற்று நீர் மாசின்றி இருக்க வேண்டியது மிக மிக அவசியமான தாகும்.

இரண்டாவதாக நீர் மாசடைந்ததன் மூலம் ஏற்பட்ட பாதிப்பின் அளவு மற்றும் மேலும் நீர் மாசடைந்து கொண்டு செல்லும் ஆபத்து ஆகியவை தொடர்பாக மதிப்பீடு செய்ய வேண்டும். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் தொடர்ந்து நீர்மாசடைவதைத் தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இம் மதிப்பீடு மிகவும் அவசியமானதாகும்.

மூன்றாவதாக இப்பிரச்சினையின் அடிவேரை கண்டறிதல் வேண்டும். அதன் மூலம் இப்பிரச்சினையின் காரணத்தையும் அதன் தாக்கத்தின் அளவையும் அறிந்துகொள்வதன் மூலம் மீண்டும் இப்படியான பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கக் கூடிய நடவடிக்கைகளையும் எடுக்க முடியும். பாதிக்கப்பட்ட மக்களின் நீர்த்தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு ஏற்படும் செலவுகள், துப்புரவு செய்வதற்கான செலவீனங்கள் மண்ணை நாசமாக்கி அம்மண்ணில் மாசடைந்த நீர் பாய்ச்சி விளைவிக்கப்பட்ட பயிர் வகைகளை கால்நடைகளுக்கும் காய்கறி வகைகளை மனிதருக்கும் வழங்கியதன் மூலம் மனிதர், கால்நடைகளின் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிப்பதற்கு காரணமாக இருந்தவர்களை அடையாளம் கண்டு அவர்களைப் பொறுப்புகள் கூற அல்லது பொறுப்பேற்க வைக்க வேண்டும்.

வடக்குமாகாண சபை இதுவரை இப் பிரச்சினைகள் தொடர்பாகத் தீவிர கவனம் எடுக்காமலும் இப் பிரச்சினைக்கான காரணங்கள் மற்றும் ஏற்பட்ட பாதிப்புக்கள் சம்பந்தமாக விசாரித்தறிவதற்கும் தமது விருப்பமின்மையைக் காட்டி வந்துள்ளது.

எமது கட்சி எப்பொழுதும் மக்களைப் பாதிக்கும் விடயங்களில் தீவிர அக்கறை காட்டி வரும் கட்சியாகும். எனவே பின்வரும் காரணங்களைக் கண்டறியும் பொருட்டு இப்பிரச்சினைகளில் நிபுணத்துவம் கொண்டவர்கள் அடங்கிய சுயாதீன விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

மாசடைதலுக்கான அடிப்படை, மாசடைதலுக்கான காரணம், இம் மாசடைதலுக்கு பொறுப்பானவர்/ பொறுப்பானவர்கள், பாதிப்பின் அளவு அரசிற்கும் சமூகத்திற்கும் ஏற்பட்ட நட்டம், மேலும் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள், தகவல்களைவேண்டும்என்றே மறைத்ததன் ஊடாகவும் புறக்கணித்ததன் மூலமாகவும் மக்களின் ஆரோக்கியத்திற்கு ஆபத்தை விளைவித்தது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம், பாதிப்புக்கு காரணமானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தல்

இவ் விசாரணை ஆணைக்குழுவிற்கு உதவும் பொருட்டு தொழில்நுட்ப ரீதியாக நிபுணத்துவம் பெற்றவர்களையும் சுயநலம் அற்றவர்களையும் சிபார்சு செய்வதிலும் எமது கட்சி முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வங்குமென அக்கட்சியின் செயலாளர் சி.க.செந்தில்வேல் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# சான்றிதழ் வழங்கும் வைபவம் சனியன்று

(யாழ்ப்பாணம்)

New Era Academy (London) நிறுவனத்தின் கடந்த டிசெம்பர் மாதம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை மறுதினம் சனிக்கிழமை நல்லூர் துர்க்கா தேவஸ்தான மணிமண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.




நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர்விவகார அமைச்சர் த.குருகுலராசாவும் கௌரவ விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கே.தெய்வேந்திரராஜா, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-8)



நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அண்மையில் ஒரு தொகுதி பிளாஸ்ரிக் கதிரைகளை வழங்கியபோது...

யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில்

## முறைப்பாட்டையடுத்து நாளை கலந்துரையாடல்

கொழும்புத்துறை ஜே-61 நெடுங்குளம் கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட இந்தியன் வீட்டுத்திட்டம் தொடர்பில் யாழ். மனிதவுரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குயாழ்.மனிதவுரிமைஆணைக்குழு காரியாலயத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு யாழ். மாவட்ட அரசதிபர், யாழ்.பிரதேச செயலர் மற்றும் முறைப்பாட்டாளர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக யாழ். மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (இ-3)

# புவிராஜின் ஓலை கவிதை நூல்வெளியீடு 18ம் திகதி

(யாழ்ப்பாணம்)

நோர்வேயில் வசிக்கும் கைதையூர் கவிஞர் வே.புவிராஜின் ஓலை கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் அனுசரணையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு வடமாகாண கல்வி அமைச்சின் உத்தியோகத்தர் சி. நிசாகரன் தலைமை தாங்கவுள்ளார்.

நிகழ்வில் வரவேற்புரையை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அ.கயுந்தனும், ஆசியுரையை ஓய்வுநிலை கோட்டக்கல்வி அலுவலர் நா.சத்தியநாதனும், வாழ்த்துரைகளை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரனும் , கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரனும் நிகழ்த்தவுள்ளனர்.

வெளியீட்டுரையை ஓய்வுநிலை அதிபர் லயன்.ப.செல்லத்துரை நிகழ்த்தவுள்ளார். நூலின் முதல் பிரதியை மக்கள் வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் க.சிறிதரன் பெறவுள்ளார்.

சிறப்புரையை ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கமும், நூல் மதிப்பீட்டுரையை கவிஞர் கை.சரவணனும் நிகழ்த்தவுள்ளனர். நூலாசிரியர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது.

ஏற்புரையை நூலாசிரியர் வே.புவிராஜூம், நன்றியுரையை கு.சுரேஸ் குமாரும் நிகழ்த்தவுள்ளனர். (இ-254)

# மக்களின் துயர்துடைக்க மக்கள் ஒன்றியம் உதவி

(பொற்பதி)

அடிப்படை வைத்திய வசதிகளின்றி நாளாந்தம் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வரும் நாகர் கோவில் பகுதி மக்களின் துயர்துடைக்க நாகர்கோவில் மக்கள் ஒன்றியம் முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் கிழமையில் இரண்டுதினங்கள் மருத்துவ முகாமை நடத்துவதற்கு பல்வேறு வசதிகளை மக்கள் ஒன்றியம் செய்து வருகின்றது.

நாகர்கோவில் பகுதி மக்கள் தமது வைத்திய சேவைக்காக 15 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மருதங்கேணி வைத்தியசாலைக்கோ அல்லது 16 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பருத்தித்துறை வைத்தியசாலைக்கோ நாளாந்தம் செல்ல வேண்டியுள்ளது

அரைமணி நேரத்தில் செல்லக் கூடிய மேற்படி வைத்தியசாலைக [illegible] வரத்தில் செலவிட நேரிடுகிறது.

இந்நிலையில் 2013 ஒக்டோபர் மாதம் முதல் நாகர் கோவிலில் மருத்துவமுகாமை ஆரம்பிக்க நாகர் கோவில் மக்கள் ஒன்றியம் முன் வந்தது. அத்துடன் இதற்கான மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை மேற்படி மக்கள் ஒன்றியமும் நெல்லியடி லயன்ஸ் கழகமும் இணைந்து வழங்கி வருகின்றன.

மேற்படி மருத்துவ முகாமுக்கு வைத்திய சேவையை இலவசமாக வழங்குவதற்கு முள்ளியான் வைத்தியசாலை டாக்டர் உமாபதி சிவம் முன்வந்தார்.

தனது கடமையை முடித்த பின்னர் பேருந்தில் பயணம் செய்து சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று கிழமைகளில் இரண்டு நாட்கள் தனது சேவையை [illegible] உமாபதி சிவம் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக வழங்கி வருகின்றார்.

வைத்தியரின் அர்ப்பணிப்பை கௌரவிக்கும் பொருட்டும் அவரது வைத்திய சேவையை இலகுபடுத்தும் பொருட்டும் நாகர்கோவில் மக்கள் ஒன்றியம் மோட்டார் சைக்கிள் ஒன்றை அவருக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சுமார் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் கடந்த 8.3.2015 அன்று டாக்டருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

டாக்டரின் அர்ப்பணிப்பு மிகுந்த சேவையை அப்பகுதி மக்கள் மிகவும் பாராட்டுவதுடன் தமது வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்ய நிரந்தர ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அரசியலமைப்பு-ஆக்கத்திற்கா? அழிவிற்கா?

**அரசியல்வாதிகள் அரசியலமைப்பை உருவாக்குவது டன் அதனைச் சீரழித்துவிடவும் முடிவதுபோலவே அரசியலமைப்பும் அரசியல்வாதிகளை உருவாக்கவோ உருத்தெரியாமல் ஆக்கிவிடவோ முடியும்.**

**சண்டே லீடர் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது**



அரசியல்வாதிகள் அரசியலமைப்பை உருவாக்குகிறார்களா அல்லது அரசியல்வாதிகளை அரசியலமைப்பே உருவாக்குகிறதா? கோழியா முட்டையா முதலில் வந்தது? என்ற கேள்விக்கு விடைதேடுவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினமானதே இதற்கான பதிலுமாகும்.

நாம் விரும்புகிறோமோ இல்லையோ இலங்கையின் அரசியலமைப்பானது பிரித்தானிய குடியேற்றவாத சட்டத்திலிருந்தே தோற்றம் பெற்று பரிணமித்து தற்போதைய வடிவம் பெற்றதென்பதே உண்மையாகும். பிரித்தானிய ஆளுநர்களின் சட்டங்களில் உருவாகி பிரித்தானிய பேரரசின் கீழ் சுயாதீனம்கொண்ட ஒரு சுதந்திர நாடாக இலங்கை (அப்போதைய சிலோன்) பிரகடனப்படுத்தப்பட்ட சட்டவாக்க சபை (Legilative Council) அரசவை (State Council) மற்றும் சோல்பரி அரசியலமைப்பு (Soulburry Constilation) போன்ற அமைப்புக்களூடாக நாம் அன்று கடந்து வந்துள்ளோம்.

ஆனாலும்மாக்சியகருத்தியலாளர்கள் அதனைப் போலியான சுதந்திரமென்றே குற்றஞ்சாட்டினர். பிரித்தானிய முடிக்குரிய ஓர் சுயாதீன- சுதந்திர நாடா? எனக் கேள்வியெழுப்பிய அவர்கள் பிரித்தானியாவுடனான பாதுகாப்பு உடன்படிக்கை மற்றும் நாட்டிலிருந்த பிரித்தானிய இராணுவத் தளங்கள் போன்றவற்றையும் அப்போது சுட்டிக்காட்டியிருந்தனர். ஆனாலும் அவர்களது முதன்மையான சிந்தனையாளர் கொல்வின் ஆர்.டீ. சில்வா என்பவர் எவ்வித சிரமமும் இல்லாமலேயே இலங்கையுடனான பிரித்தானியத் தொடர்புகளனைத்தையும் துண்டித்துக்கொண்டமையானது அவரது ஏனைய மாக்ஸியவாதிகளை வாயடைத்துப் போகச் செய்திருந்தது. இலங்கையை உண்மையான தொரு சுதந்திர நாடாக மாற்றிய பெருமை அவருக்கே உரியதாகும்.

சுதந்திரத்திற்குப் பின்னர் சோல்பரி அரசியலமைப்பின் கீழ் நாடு இருந்து வந்த அந்த 8 வருடகாலம் அநேகமாக எது வித பிரச்சினையுமில்லாத ஒரு பொற்காலமேயாகும். அந்த அரசியலமைப்பு சிறந்த விதமாக செயற்பட்ட காரணத்தால் நாட்டின் குடிகள் சமூகங்களனைத்தும் சமாதானத்துடன் அமைதியாக வாழ்ந்து வந்தன. அதிலிருந்த விசேட பிரிவு 29 (2) நாட்டின் சிறுபான்மைச் சமூகங்கள் மற்றும் பல்வேறு மதப் பிரிவுகளது உரிமைகளை நன்கு பாதுகாத்து வந்தது.

"சட்டப்படி மக்களுக்கான அதிகாரம் பாராளுமன்றத்திடம் பாரப்படுத்தப்படுகிறது" என்ற சுலோகத்துடன் 1956 இல் எழுந்த முதலாவது அரசியல் பேரலையானது சிறுபான்மை மக்களது அனைத்து உரிமைகளையும் அடித்துச் சென்றிருந்தது. மக்களனைவரினதும் உரிமைகளுக்கான பாதுகாப்பு பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கும் படியாக உருவாக்கப்பட்ட 1972 இன் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த சிறுபான்மையினர் பாதுகாப்புச் சரத்துகளுக்கு உத்தரவாதமெதுவும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு சிறு கையெழுத்துக் கிறுக்கலுடன் "சிங்களம் மட்டும் சட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் தமிழ் மக்களது எஞ்சிய உரிமைகளும் பறித்தெடுக்கப்பட்டதாயிற்று.


1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு வெஸ்ற்மினிஸ்டர் (West Minister Model) பாணியிலான ஒன்றாக இருந்ததுடன் அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய முன்னணி (United Front) 2/3 பெரும்பான்மைப் பலத்துடன் எந்த விதமான சட்டத்தையும் மாற்றியமைக்கக்கூடியதாகவேயிருந்தது. இம்மாற்றம் ஆளுங்கட்சியினது அல்லது அதன் தலைவரது விருப்பு வெறுப்புக்களுக்கேற்பவே இடம்பெற்றது. அரசியல் ரீதியில் எதிர்க்கட்சிக்கும் ஆளுங்கட்சியால் வஞ்சிக்கப்படுகின்ற அனைவருக்கும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியதே இதன் விளைவாயிற்று. அதாவது ஜனநாயக ரீதியில் 2/3 பெரும்பான்மைப்பலத்துடன் தெரிந்து கொள்ளப்பட்ட கட்சியின் இரக்கத்திலேயே சிறுபான்மையினரது தனித்துவமான உரிமைகள் மட்டுமல்லாது ஆளும் கும்பலைத் திருப்திப்படுத்தாத அனைவரதும் தனிப்பட்ட உரிமைகளுங்கூட தங்கியிருக்க வேண்டிய ஜனநாயக சர்வாதிகாரம் (Democratice Dictatorship) என்ற நிலையொன்று உருவாகிற்று அன்று.


தற்போதைய நிலையில் இன்று அரசியலமைப்பு சீர்திருத்த வழிமுறைகளில் சம்பந்தப்பட்டவர்களும் நிறைவேற்று ஜனாதிபதி ஒருவரால் மேற்கொள்ளப்படும் அதிகார துஷ்பிரயோகங்களைத் தடுப்பது பற்றி பேசிக்கொண்டிருப்பவர்களுமான சகல தரப்பினருமே மேற்கூறிய இந்த அம்சம் பற்றி அவசியம் மனதிற் கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

பாராளுமன்றத்தைத்தமது 2/3 பெரும்பான்மைப் பலத்தின் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கும் ஆளும்கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்களதும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு இடமளித்துவரும் பாராளுமன்ற முறைமையுடன் கூடவே அதற்கும் மேலாக தற்போதைய அரசியலமைப்பு முறையின்கீழ் கட்டுப்பாடற்ற விதமான அதிகாரங்களையுங்கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி ஒருவரால் துணிச்சலாகவே மேற்கொள்ளப்பட்டுவரும் அதிகார துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருவதுமான கசப்பான அனுபவங்களைக் கொண்ட ஒரு நாடாகவே இலங்கை இருந்து வருகிறது.

அதிகார துஷ்பிரயோகத்தின் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகிய ஒருவர் அதிலிருந்து தன்னை விடுவித்து தப்பிக் கொள்வதற்கு உச்சநீதிமன்றத்தை நாட வழி விடக்கூடிய சரத்துக்களுங்கூடவே அரசியலமைப்பில் உட்புகுத்தப்படுவதே இவ்வித அதிகாரதுஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு உதவும். பாதிக்கப்பட்டவருக்கும் அதன்மூலம் நிவாரணம் கிடைக்கும். சுதந்திரமான நீதிவிசாரணை உறுதிப்படுத்தப்பட்ட அநேக நாடுகளில் இந்த வழிமுறை பெருமளவில் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுவதாகவே தெரிகிறது. இவ்விதம் நடைபெறவேண்டுமானால் நீதி நடைமுறைகள், பொதுச்சேவைகள்,பொலிஸ் மற்றும் தேர்தல் இலாகா நடைமுறைக்களை அனுமதிப்பதற்கென சுதந்திரமான ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கான செயற்பாடுகளை மீளமைப்பதற்கு 17 ஆவது திருத்தச்சட்டம் மீளவும் அமுல்படுத்தப்படுவது அத்தியாவசியமாகிறது. நூறுநாள் வேலைத்திட்டத்திற்குள் கொண்டுவரப்படுவதற்கென கணிப்பிடப்பட்ட அரசியலமைப்பு மாற்றங்களுக்கான காலவரையறை மட்டுப்படுத்தப்பட்டதாயிருப்பதால் அடுத்த அரசாங்கமுங்கூட மேலதிகதிருத்தங்களை அவை தேசிய ரீதியானவையோ அல்லது ஏனைய எந்த வடிவங்களாக இருந்தாலும் அவ ற்றை அரசியலமைப்பில் உட்படுத்த வேண்டியிருக்குமென்பதில் சந்தேகத்திற்கிடமில்லை. குறிப்பாக 3ஆம் உலகநாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது அதிகாரத்தைப் கைப்பற் றிய அநேகமான கட்சிகளோ குழுக்களோ அரசியலமைப்புக்களை உருவாக்குவதென்பது சர்வசாதாரணமான நடைமுறை என்ற ரீதியில் அவை தமக்கான புதிய அரசியலமைப் புக்களைஉருவாக்கிக் கொள்கின்றன. சிலவேளைகளில் இவற்றை அதிகார பூர்வமாக நடைமுறைப்படுத்திய அரசுகளே கூட அவற்றைத் தக்கவைத்துக்கொள்ள முடியாத நிலையில் புதிதாயுருவாக்கப்பட்ட அவையுங்கூட நிலையற்று போயிருப்பதற்கானகாரணமும் வெளிப் படையானதேயாகும். நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திலும் பார்க்க தம்மையும் தமது சொந்த நலன்களையுமே முதன்மையாகக் கருதி அவர்கள் செயற்பட்டதே காரணமாகும். உண்மையில் ஆட்சியாளர்கள் தமது சொந்த நலன்களையல் லாது முடிந்தவரையில் நாட்டினது நலன்களை உத்வேகமாக முன்னெடுத்துச்செல்வதையே முக்கியமானதாக கருதிச் செயற்பட்டிருக்கவேண்டும்.

சிங்கப்பூரை உருவாக்கிய அதன் பிதாமகரான லீ க்வான் யூ நாட்டிற்கென உருவாக்கியிருந்த அரசியலமைப்பு நாட்டு மக்களது விசேடித்தவிதமான புத்திக்கூர்மையையும் விவேகிகளின் சிந்தனைகளையும் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டதேயாகும். இது கருத்திற்கொள்ளப்பட வேண்டியஓர் எடுத்துக்காட்டாக இருப்பதுலுங்கூட இதையேதான் பின்பற்ற வேண்டுமென்ற அவசியமில்லை. நாடுகளும் மக்களும் தமக்கான தேவைகளில் வேறுபடுகின்றவர்களாகவே இருக்கின்றனர். இருக்கும் அரசியலமைப்புக்களில் பழைமை வாய்ந்ததும் மிகவும் சிறந் தவிதமானதுமான அரசிய லமைப்பொன்றாகவும் ஒரு வேளை இந்தப் பிரித்தானிய அரசியலமைப்பே இருக்கும் எனலாம். காலத்திற்குக் காலம் இடம்பெற்று வந்த நாட்டின் பல்வேறு தரப்புச் சந்திப்புக்கள் ஒன்றுகூடல்கள் பாரம்பரியமற்றும் மரபுவழிமுறை நடைமுறைகள் மற்றும் நீதிபரிபாலன தீர்மானங்கள் போன்ற முன்னேற்றகர மான வழிகளினூடு நீடித்த பரிணாம வளர்ச்சிகண்ட இந்த அரசியலமைப்பானது இயல்பாக பிரித்தானியாவுக்கே உரித்தானதாக இருந்துங்கூட 800 வருடங்களின் பின் னரும் ஸ்கொட்லாந்தின் பிரிவினை அச்சுறுத்தல் போன்ற ஏனைய அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கும் நிலையே உள்ளது. மூன்றாம் உலக நாடுகள் சிலவற்றின் அரசியலமைப்புக்கள் போல் நிபுணர்கள் மற்றும் அரசியல் பாண்டித்தியம் பெற்றவர்கள் என அழைக்கப்படுவோரினால் அவசர நோக்கங்களின் அடிப்படையில் குறுகியகாலத்திற்குள் வரையப்பட்டதாக இல்லாமல் படிப்படியானதும் முன்னேற்றகரமான துணை ஏற்பாடுகளுடன் காலமெடுத்து மெதுவான முறையில் ஒப்பேற்றப்பட்டதாக இருப்பதே இந்த பிரித்தானிய அரசியலமைப்பின் புதுமையான அம்சமாகும். இந்த பிரித்தானிய அரசியலமைப்பின் வரலாறானது பிரித்தானிய அரசர் ஜோன் என்பவரது 1215 ஆம்வருடகாலத்து ஆவண வெளியீட்டுரிமை என்ற மெக்னா காட்டர் உரிமையின் அடிப்படையில் எழுந்த ஒன்றாக அந்தளவு பழைமைவாய்ந்த புதுமையான ஒன்றேயாகும். பிரித்தானிய அரசியல் மற்றும் அரசியல்வாதி களதும் அனுபவ அடிப்படையிலான நிபுணத்துவ வளர்ச்சி இதிலிருந்தே ஆரம்பித்து தற் போதைய உலகளாவிய ஜனநாயக தரத்திற்கு உதாரணமாக மிளிர் கிறது.





தற்போது புதிய அரசியலமைப்பு திருத்தங்கள் பற்றி ஆவேசமான கருத்தியல் விவாதங்கள் நிகழ்ந்துவரும் எமது இலங்கை நாட்டவர்கள் அனைவரும் இதுமட்டில் ஒருவிடயத்தை மனதிற்கொள்வது அவசியம். அதாவது ஏற்படக்கூடிய எந்தவித திருத்தங்களும் எவ்வளவுதான் சிறப்பானதாக இருந்தா லும் அநாகரிகமான முறையில் அதிகாரவேட்கை கொண்டு அலையும் அரசியல் வாதிகளின் கைகளில் அவை எவ்வித துஷ்பிர யோகத்திற்கும் சீரழிவுக்கும் உள்ளாகிவிடக்கூடும் என்பதே அதுவாகும்.

**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்று நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினமிரவு கனடா சென்றார். கனடா சென்ற அவருக்கு கனடா வாழ் இந்தியர்கள் சிறப்பான வர வேற்பளித்தனர். 43 ஆண்டுகளின் பின் கனடா செல்லும் முதல் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி என்பது குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதிகளை தனிமைப்படுத்துமாறு உலக நாடுகளுக்கு பிரதமர் அட்வைஸ்

தீவிரவாதிகளையும், அவர்களின் ஆதரவாளர்களையும் தனிமைப்படுத்த வேண்டுமென்று உலக நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

பெர்லினில் நேற்று முன்தினம் ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கலுடன் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தபோது அவர் இதைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியது, முன்பு நாம் தீவிரவாதத்தைப் பற்றி பேசியபோது அதை சட்டம் - ஒழுங்கு பிரச்சினையாகவே பொதுவாக மக்கள் கருதி னர். ஆனால், இப்போது அது மனித சமுதாயத்துக்கு எவ்வளவு பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத் துள்ளது என்பதை உணர்ந்து கொண்டுள்ளோம். எனவே, தீவிரவாதத்துக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். தீவிரவாதிகளையும், அவர்களை ஆதரிப்பவர்களையும் முற்றிலுமாக தனிமைப்படுத்த வேண்டும் என்றார்.

மும்பை தாக்குதல் தீவிரவாதி லக்வியை சமீபத்தில் பிணையில் விடுவித்த பாகிஸ்தானை பெயர் குறிப்பிடாமல் சுட்டிக்காட்டிப் பேசிய மோடி, தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகளுக்கு நாம் நெருக்கடி அளிக்க வேண்டும். அணு ஆயுதங்கள் தயாரிப்பு கூடாது என்பதில் உலக நாடுகள் எவ்வளவு தீவிரமாக உள்ளனவோ, அதேபோன்ற தவிரத்தை தீவிரவாத இயக்கங்களை ஒழிப்பதிலும் காட்ட வேண்டும். தீவிரவாதிகள் வளர்வது என்பது அணு ஆயுத உற்பத்தி போன்று உலகுக்கே பெரிய கேடுகளை விளைவிக்கும்.

தீவிரவாதம் என்பது என்ன என பதை வரையறை செய்யும் நடவடிக்கை நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளது. தீவிரவாதம் என்பது என்ன என்பதை வரையறை செய்து ஐ.நா. தீர்மானம் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் நாம் தீவிரவாதத்துக்கு எதிராக மக்களை எளிதாக ஒன்று திரட்ட முடியும். தீவிரவாதம் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டைதான் ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலும் கொண்டுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சட்டத்தரணி பவானிசிங்கை நீக்கக்கோரிய தி.மு.க.மனு அரசியல் அமர்வுக்கு மாற்றம்!

**தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு மேல்முறையீட்டில் ஆஜராகி வரும் அரசு சட்டத்தரணி பவானிசிங்கை நீக்க கோரும் திமுக பொதுச் செயலாளர் அன்பழகனின் மனுவை, அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா, அவரது தோழி சசிக லா மற்றும் சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கின மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை கர்நாடக உயர் நீதிமன்றத்தில் கடந்த மார்ச் 11ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து நீதிபதி சி.ஆர். குமாரசாமி திகதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்தி வைத்தார்.

இந்நிலையில், "ஜெயலலிதா வழக்கில் அரசு சட்டத்தரணியாக ஆஜரான பவானிசிங்கின் நியமனத்தில் குளறுபடி நடந்துள்ளது. இவ் வழக்கில் பவானிசிங் ஆஜரானது சட்டப்படி செல்லாது. எனவே அவரை நீக்க வேண்டும்" என திமுக பொதுச் செயலாளர் அன்பழகன் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், தீர்ப்பை ஏப்ரல் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

மேலும் பவானிசிங் நியமனம் தொடர்பான மனுவில் தீர்ப்பு வெளியாகும் வரை கர்நாடக உயர் நீதிமன்றம் ஜெயலலிதாவின் வழக்கில் தீர்ப்பு வழங்க தடை விதித்து உத்தரவிட்டது. இதனால் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு எழுதும் பணிகள் நிறைவடைந்தும், தீர்ப்பு திகதி அறிவிக்கப்படாமல் உள்ளது. இதனிடையே கர்நாடக உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி டி. ஹெச். வகேலா சில நாட்களுக்கு முன்னர் திடீரென பணியிட மாற்றம் செய்யப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில் பவானிசிங்கை நீக்கக்கோரும் திமுகவின் மனு மீது உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மதன் பி.லோகுர் மற்றும் ஆர்.பானுமதி ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்போது, பவானி சிங்கை நீக்கக் கோருமஅன்பழகனின்கோரிக்கையை ஏற்ற நீதிபதி லோகுர், அன்பழகனை மனுதாரராக ஏற்க மறுத்து விட்டார்.

ஆனால், நீதிபதி பானுமதியோ, பவானி சிங் இந்த வழக்கில் அரசு சட்டத்தரணியாக தொடர முழு அதிகாரமும் இருக்கிறது என்றார். அதே நேரத்தில், அன்பழகனை மனுதாரராக ஏற்றுக் கொள்ள சம்மதித்தார்.

நீதிபதிகளின் மாறுபட்ட கருத்தால் இந்த வழக்கை 3 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-5)




# மன்மோகன்சிங்கை தவறாக வழிநடத்தியது ராசாவே என சி.பி.ஐ. குற்றஞ்சாட்டியுள்ளது

(சென்னை)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பாக கொள்கை முடிவுகளில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கை, முன்னாள் தொலைத் தொடர்பு அமைச்சர் ஆ.ராசா தவறாக வழிநடத்தியதாக சிபிஐ குற்றம் சாட்டியுள்ளது.

டில்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெறும் 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கின் இறுதி விசாரணையின்போது சிபிஐ இவ்வாறு தெரிவித்துள்ளது.

மேலும், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள தனியார் நிறுவனங்கள் ஆதாயம் பெற வேண்டும் என்பதற்காகவே 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டுக்கான காலக்கெடுவை ஆ.ராசா குறைத்ததாகவும் சிபிஐ தெரிவித்துள்ளது.


அந்த அறிக்கையில், 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ஸ்வான் டெலிகாம், யுனிடெக் ஒயர்லெஸ் (தமிழ்நாடு) நிறுவனங்கள் ஆதாயமடைந்தன என சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரம் தொடர்பான அனைத்து வழக்குகளையும் டில்லி சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி. சைனி விசாரித்து வருகிறார். இந்த வழக்குகளில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. ராசா, கனிமொழி எம்.பி. உள்ளிட்டோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2012 பெப்ரவரி 2இல் சிபிஐ தாக்கல் செய்த குற்றப் பத்திரிகையில் 2ஜி ஸ்பெக்ட்ரம் தொடர பாக 122 உரிமங்கள் வழங்கப்பட்டதில் அரசுக்கு ரூ.30,984 கோடி இழப்பு ஏற்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சிபிஐ தரப்பில் 154 சாட்சிகள் வாக்குமூலம் அளித்துள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் 29 பேர் சாட்சியம் அளித்துள்ளனர். இந்நிலையில் இந்த வழக்கின் இறுதி விசாரணை நேற்று முதல் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அத்வானியை காணவில்லை



குஜராத் மாநிலம் காந்தி நகர் தொகுதியில் அத்வானியைக் காணவில்லை என சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அத்வானி கடந்த நாடாளுமன்ற தேர்தலில் காந்திநகர் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். இந்நிலையில் தங்கள் எம்.பி அத்வானியை காணவில்லை என போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அதில், 'கடந்த சில ஆண்டுகளாக அத்வானியை காணவில்லை தொகுதி மக்களாகிய நாங்கள் அவரிடம் தொகுதியின் பிரச்சினைகளை தெரிவிக்க விரும்புகிறோம். காந்தி நகரில் அவரை யாராவது பார்த்தால் எங்களிடம் தெரிவியுங்கள்' என்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தன.

அந்த போஸ்டரில், ஆம் ஆத்மி என, குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், "அந்த போஸ்டருக்கும், தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என, ஆம் ஆத்மி கட்சி தெரிவித்துள்ளது.

சமீபத்தில் ராகுல்காந்தி யைக் காணவில்லை என அவரது அமேதி தொகுதியில் போஸ்டர் ஒட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# செல்வாக்குமிக்க தலைவர்கள் பட்டியலில் மோடி, கெஜ்ரிவால்


அமெரிக்காவிலிருந்து வெளிவரும் டைம் பத்திரிகை வெளியிட்டுள்ள உலகின் செல்வாக்கு மிக்க 100 தலைவர்கள் பட்டியலில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி மற்றும் டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

உலகின் செல்வாக்கு மிக்க மனிதர்கள் குறித்து டைம் பத்திரிகை தனது வாசகர்களிடம் கருத்து கணிப்பு நடத்தியது. இந்த பட்டியலில் முதல் 100 இடம் பிடித்த உத்தேச பட்டியல் தற்போது வெளியாகியுள்ளது. இதன்படி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முதல் இடத்தை பிடித்துள்ளார். இவருக்கு அடுத்த இடத்தில் தென்கொ ரியாவை சேர்ந்த ராப் பாடகி இருக்கிறார்.

லேடி காகா 3ஆவது இடத்திலும், ரியான்னா 4 ஆவது இடத்திலும், டெய்லர் ஸ்விபட் 5 ஆவது இடத்திலும் உள்ளனர். இந்த பட்டியலில் இந்திய பிரதமர் நரேந்திரமோடியும் இடம் பிடித்துள்ளார். அவருக்கு 0.6 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன.

டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் 0.5 சதவீத வாக்குகளுடன் மோடிக்கு அடுத்த இடத்தில் இருக்கிறார். பாஜக தலைவர் அமித்ஷாவும் இந்த பட்டியலில் உள்ளார்.

ஆனால் முதல் 100 இடத்துக்கு அவரால் முன்னேற முடியவில்லை. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, அவரது மனைவி மிச்செல், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ள ஹிலாரி கிளின்டன், சீன ஜனாதிபதி ஜின்பிங், தலாய் லாமா, ஹாரிபொட்டர் படங்களில் நடித்துள்ள எம்மா வாட்சன், பாகிஸ்தான் சிறுமி மலாலா, போப் பிரான்சிஸ், பேஸ்புக் நிறுவனர் மார்க் சுக்காபொக் ஆகியோரும் இந்த பட்டியலில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)



இந்தியாவின் மெகாலயா பிராந்தியத்தில் ஆற்றைக் கடப்பதற்கு ஆற்றோரத்தில் வளர்ந்த மரத்தின் வேர்களை இணைத்து அமைக்கப்பட்ட நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த தொங்கு பாலத்தை படத்தில் காணலாம். பாலத்தை அமைப்பதில் பண மோசடியும் இல்லை பராமரிப்பு செலவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி இயங்கி வரும் பொது மயானங்கள், பொது நூலகங்கள்

## முல்லை. கரைதுறைப்பற்று பிரதேச சபை புள்ளிவிபரத் தகவலில் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

**முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக் குட்பட்ட பொதுநூலகங்கள், ஆயுள்வேத வைத்தியசாலைகள், பொதுமயானங்கள், சனசமூக நிலையங்கள், கொல்களங்கள் என்பன அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருவதாக கரைதுறைப் பற்று பிரதேச சபையின் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கரைதுறைப்பற்று பிரதேச சபையானது 728.6 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பளவைக் கொண்டதுடன் 46 கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசமாகும்.

இங்கு 12 ஆயிரத்து 894 குடும்பங்களைச் சேர்ந்த 41 ஆயிரத்து 128 அங்கத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு, முள்ளியவளை, கொக்கிளாய், செம்மலை ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள பொதுநூலகங்கள் அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருகின்றன.

இவற்றுக்கான நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படவில்லை. அத்துடன் போதியளவு தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றன.

இங்குள்ள ஒரேயொரு ஆயுள்வேத வைத்தியசாலையும் வன்னி யுத்தத்தை அடுத்து அழிவடைந்துள்ளது. இதற்கான புதிய கட்டடம் இதுவரை அமைக்கப்படவில்லை.

மயானங்கள் 23 இருக்கின்ற போதிலும் சடலங்கள் எரியூட்டும் மண்டபங்கள், இறுதிக் கிரியைகள் செய்யும் மண்டபங்கள், கிணறு வசதிகள் என்பனவற்றுடன் சுற்றுவேலிகள் பல மயானங்களில் அமைக்கப்படவில்லை. சனசமூக நிலையங்கள்40உள்ள நிலையில் கட்டடங்கள் யுத்தத்தினால் அழிவடைந்துள்ளன.

இவை தற்காலிக புனரமைப்புடன் அரைநிரந்தர கட்டடங்களாகக் காணப்படுகின்றன. இவற்றுக்கான புதிய கட்டடங்கள் அமைக்கப்படவேண்டியுள்ளது.

கொல்களங்கள் இரண்டு காணப்படுகின்ற நிலையில் தற்காலிக கட்டடத்தில் ஒன்றும் மற்றையது இயங்குவதற்கானஅனுமதி வழங்கப்படாமை காரணமாக செயலிழந்துள்ளது.

எனவே மேற்படி குறைபாடுகளுடன் இயங்கி வருகின்ற கரைதுறைப்பற்று பிரதேச சபையினுடைய பொதுப்பணிகளுக்கான கட்டடங்களையும் மற்றும் ஏனைய பௌதீக வளங்களையும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு ஏற்படுத்தித்தர வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)



**வவுனியா வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**ஆதிவிநாயகர் பெருமான் தேரில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். ஆயிரக்கணக்கான சிதறு தேங்காய்களை அடித்தும் அங்கபிரதிஷ்டை செய்தும் கர்ப்பூரச் சட்டிகள் ஏந்தியும் பக்த அடியார்கள் மன்மத வருடத்தின் முதல் நாளில் தரிசனம் செய்து வழிபட்டனர். அதனை தொடர்ந்து புதுவருட பூஜைகளும் சிறப்பாக நடைபெற்றன.**

# குளத்தில் நீராடச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி பரிதாபமாக மரணம்

(மல்லாவி)

நண்பர்களுடன் குளத்தில் நீராடச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பி.ப. ஒரு மணியளவில் நெடுங்கேணியிலுள்ள இறம்பைக்குளத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த யோகராசா யதுர்சன் (வயது-17) என்ற சிறுவனே மரணமடைந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

தனது பெற்றோரை இழந்த நிலையில் அம்மம்மாவுடன் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் வசித்து வந்துள்ளார்.

பிரஸ்தாப சிறுவன் புத்தாண்டை கொண்டாடுவதற்காக நெடுங்கேணியிலுள்ள உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தார்.

இந்நிலையில் அவ்வூரைச் சேர்ந்த நண்பர்களுடன் கூடி நெடுங்கேணியிலுள்ள இறம் பைக்குளத்திற்கு நீராடச் சென்றுள்ளார்.

நண்பர்களுடன் நீராடியவேளை நீரில் மூழ்கியுள்ளார்.

இதனை அடுத்து நெடுங்கேணி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் சிறுவனை மீட்டு நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்த வேளை அவர் மரணமடைந்தது உறுதிப்படுத்தப்பட்டது. இவரது சடலம் வவுனியா மாவட்ட வைத்தி யசாலையில் வைக்கப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-15)




## முதியோர்களுக்கு புத்தாடை பொதிகள்

(மல்லாவி)

கிளிநொச்சி மலையாளபுர கிராமத்திலுள்ள எஸ்.கே.முதியோர் இல்லத்தின் ஏற்பாட்டில் தமிழ்-சிங்களப்புத்தாண்டை முன்னிட்டு முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்,முதியோர்களுக்கான புத்தாடைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

புலம்பெயர் நாட்டில் வசித்துவரும் அன்பர் ஒருவரினால் நடத்தப்படுகின்ற எஸ்.கே. முதியோர் இல்லத்தின் ஊடாக மலையாளபுரம் கற்பகபுரி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று மன்தினம் காலை 300இற்கு மேற்பட்ட முதியோர்களுடன் ஆலய வழிபாடு நடைபெற்று அவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இந்நிகழ்வில் வைத்து ஆண்,பெண் இருபாலாருக்குமான புத்தாடை பொதிகள் வழங்கப்பட் டுள்ளன. (2-15)

# காணிகள் வழங்கப்பட்டபோது கூறப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை

## பயனாளிகள் குற்றச்சாட்டு

(பனிக்கன்குளம்)

பனிக்கன்குளம் கிராமத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் கடமையாற்றி வருகின்ற 50 உத்தியோகத்தர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் உதவிகள் வழங்கப்பட்டன.

இதற்கமைய ஒவ்வொரு பயனாளிக்கும் அரை ஏக்கர் காணி , மானிய அடிப்படையில் ஒரு இலட்சம் ரூபா பணம், கடனாக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி என்பன வழங்கப்பட்டன.

அத்துடன் முத்தையா முரளிதரன் விளையாட்டு மைதானம்,பொதுவீதிகள்,வர்த்தக நிலையங்கள்,நூல் நிலையம் என்பன உள்ளடக்கிய அனைத்து வசதிகளும் கொண்ட கிராமமாக அமைத்துத் தரப்படுமென காணி வழங்கும் போது உறுதிமொழி வழங்கப்பட்டது.

இவ்வாறு அனைத்து வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படுமென உறுதிமொழி வழங்கப்பட்டதன் காரணத்தால் கடன்பட்டு வீடுகளை அமைத்ததாக பயனாளிகள் கூறுகின்றனர்.

தற்போது வீதிகள் சிறந்த முறையில் செப்பனிடப்பட்டு தரப்படவில்லை. காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகம். கூறப்பட்டதைப் போல் எந்தவிதமான அபிவிருத்தியும் செய்து தரப்படவில்லையென பயனாளிகள் கூறி இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் 50 குடும்பங்களும் கட்டிய வீட்டில் வசிக்கவில்லையென சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகளுக்கும் 50 பயனாளிகளுக்கும் இடையில் அண்மையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அங்கு குழுமியிருந்த பயனாளிகள் தெரிவிக்கையில்,எமக்கு பொய் வாக்குறுதிகள் வழங்கப்பட்டு இத் திட்டத்திற்கு சம்மதம் தெரிவிக்க வைத்துள்ளார்கள்.

இதேவேளை இங்கு காணிகளைப் பெற்ற சிலர் செல்வாக்கினடிப்படையில் தாங்கள் தற்போது வசிக்கின்ற பிரதேசத்தில் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை பெற்றுள்ளனர். ஆனால் அனைவரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். கடன்பட்டே இங்கு வீடுகளை அமைத்திருக்கிறோம். அவைகளும் முற்றுப்பெறவில்லை எமக்கும் அந்த வீட்டுத்திட்டங்கள் தரப்பட வேண்டுமெனவும் நாங்கள் இங்கு நிரந்தரமாக வசிப்பதற்கு ஏற்ற அடிப்படை வசதிவாய்ப்புக்கள் ஏற்படுத்தி தரப்படவேண்டுமெனவும் கூறப்பட்டது.

எனவே உரிய அதிகாரிகள் உடனடியாக தமது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமெனவும் இந்த காணிகள் துப்புரவாக்கப்படாமையால் பற்றைகள் சூழ்ந்து காணப்படுகின்றன. அத்துடன் காணிகளில் மக்கள் குடியிருக்காமையால் கலாசார சீர்கேட்டு சம்பவங்களுக்காக இந்த வீடுகள் பயன்படுத்தப்படுவதால் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே கட்டப்பட்டுள்ள வீடுகளில் உத்தியோகத்தர்கள் வசிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

1118

## பாகப்பிரிவினை

...தொடர்ந்து, "உன் தந்தையும் என்னைப்போல் வயதானவர். அவர் இதை உண்பதால் பயனில்லை. ஆகவே, அவருடைய மூத்த மகனான உனக்கு



இதை அளிக்கிறேன். பெற்றுக்கொள்வாய!" என்று அதை அவனிடம் கொடுத்தார். அவனும் பழத்தைப் பெற்றுக்கொண்டு அங்கேயே தின்று விட்டு சென்றுவிட்டான.

அதன் பிறகு, குமரன் இரண்டாவது மகன் ராகவனை அழைத்து, தான் முன்பு ரகுபதியிடம் கூறியதை அப்படியே அவனிடமும் சொல்லி விட்டு, மற்றொரு பழத்தை அளித்தார்.

உடனே ராகவன், "இத்தனை அபூர்வ சக்தி வாய்ந்த பழத்தை நான் ஒருவன் மட்டும் உண்டால் அது நன்றல்ல! இதை என்னுடைய சகோதரர்கள், அவர்களது மனைவிமார்கள், என் தந்தை ஆகிய அனைவருடனும் பகிர்ந்துகொண்டு உண்பதே நல்லது! அதற்கு அனுமதி தந்தீர்களானால நான் மகிழ்ச்சி அடைவேன்!" என்றான்.

அவ்வாறே அவனை செய்ய அனுமதியளித்த பிறகு, கடைசிப் பிள்ளை ராஜாராமனை அழைத்தார். அவனிடமும் மற்றவர்களிடம் கூறியதை அப்படியே சொன்னார்.

அதற்கு ராஜாராமன், "என் மனைவியும், மகனும் இதை உண்டு நீண்ட ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வர்யம் ஆகியவற்றைப் பெற்றால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி தருவது வேறு ஒன்றுமிலலை. அதனால், இதை அவர்களுக் குத்தர விரும்புகிறேன்!" என்றான்.

பிறகு, குமரன் ஜெயராமனை சந்தித்து, "உன் பிள்ளைகளில் இரண்டாவது மகன் ராகவனிடம் உன்னுடைய வீட்டை அளித்து விடு. அவன் ஒருவன் மட்டுமே உன் விருபபத்தை நிறைவு செய்யக் கூடியவன்.

இந்த வீடு அவனிடம் இருந்தால், அது அன்னபூரணி வாசம் செய்யுமிடமாக இருக்கும்!" என்றார்.

"இந்த முடிவிற்குக் காரணம் என்ன?" என்று ஜெயராமன் கேட்க, குமரன் நடந்ததை விவரமாக விளக்கினார்.

பறகு, "உன்னுடைய பிள்ளைகள் மூவருமே நல்லவர்கள். ஆயினும், உன்னுடைய மூத்த மகன் ரகுபதி சுயநலக்காரன்.

மூன்றாவது மகன் ராஜாராமன் தன்னுடைய மனைவ, மகன் மீது மட்டுமே அன்பு செலுத்துகிறான். ராகவன் ஒருவன் மட்டுமே தான், தன் குடும்பம் என்று நின்று விடாமல், தன் தந்தை, தன் சகோதரர்கள், மீதும் ஈடுபாடு கொண்டவன்.

நீ செய்து வரும் தான தருமங்கள் தொடர வேண்டுமெனில், நீ அவனுக்கு உன்னுடைய வீட்டை அளிப்பதே நல்லது! அவர்களுடைய குணத்தை அறிந்து கொள்வதற்காக, இமயமலை யோகி அளித்த அபூர்வ சக்திவாய்ந்த பழங்கள் என்று சொன்னேன். உண்மையில், அந்தப் பழங்கள் என் தோட்டத்தில் விளைந்த சாதாரண பழங்கள்!" என்றார்.

"நண்பனே! மிகவும் புத்திசாலித்தனமாக செயறபட்டு, என்னுடைய பிரச்சினையைத் தீர்த்து வைத்ததற்கு மிகவும் நன்றி" என்று ஜெயராமன் குமரனிடமிருந்து விடைபெற்றார்.

சிலநாட்கள் கழித்து ஜெயராமன் தன் சொத்துகளை முறையாக பாகப்பிரிவினை செய்தார். மூன்று பிள்ளைகளுக்கும் அவரவர்கள் செய்து வந்த வியாபாரங்களை அவர்களுக்கே உரிமையாக்கினார்.



சொத்துகளை இரண்டாகப் பரித்து மூத்த மகனுக்கும், கடைசி மகனுக்கும் அளித்தார். அவனும் தன் தந்தையைப் போல் நடக்கலானான்.... (முற்றும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

04.2015 16

- 1346 - தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதியை உள்ளடக்கிய சேர்பியப் பேரரசு டுசான் சில்னி என்பவனால் உருவாக்கப்பட்டது.
- 1444 - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் ஐந்து ஆண்டுகள் போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.
- 1582 - ஸ்பானிய ஆக்கிரமிப்பாளன் ஹெர்னாண்டோ டி லேர்மா என்பவன் ஆர்ஜெண்டீனாவின் சால்ட்டா என்ற குடியேற்றத் திட்டத்தை கண்டுபிடித்தான்.
- 1853 - இந்தியாவின் முதலாவது பயணிகள் தொடரூந்து சேவை பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1876 - பல்கேரியாவில் ஒட்டோமான் பேரரசுக்கெதிராக புரட்சி வெடித்தது.
- 1885 - இலங்கையில் அஞ்சல் அலுவலக சேமிப்புத் திட்ட முறை அறிமுகமானது.
- 1912 - ஹரியெட் குயிம்பி என்னும் பெண் ஆங்கிலக் கால்வாயைவிமானத்தில் கடந்த முதல் பெண ஆனார்.
- 1917 - நாடு கடந்த நிலையில் பின்லாந்தில் இருந்த விளாடிமிர் லெனின் சென் பீட்டர்ஸ்பேர்க் திரும்பினார்.
- 1919 - அம்ரித்சர் படுகொலையைக் கண்டித்து மகாத்மா காந்தி ஒருநாள் உண்ணாநோனபு இருந்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: செம்படையினர் ஜேர்மனியப் படைகளுக்கெதிரான தமது கடைசிப் போரை பெர்லினைச் சுற்றி ஆரம்பித்தனர்
- 1947 - சோவியத்- ஐக்கிய அமெரிக்கா இடையேயான உறவுகளை பனிப்போர் என அமெரிக்க பொருளாதார ஆலோசகர் பேர்னார்ட்பரெக் என்பவர் முதன் முதலாக வர்ணித்தார்.
- 1966 - முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் ஆரம்பமானது.
- 1972 - நாசாவின் அப்போலோ 16 விண்ணுக்கு ஏவப் பட்டது.

பிறப்புகள்

- 1844 - அனத்தோலி பிரான்ஸ், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1924)
- **1851 - சேர் பொன்னம்பலம் இராமநாதன், இலங்கையின் தேசியத் தலைவர் (இ. 1930)**
- 1867 - வில்பர் ரைட், முதன்முதலில் எஞ்சின் உந்தும ஊர்தியில் பறந்து சாதனை படைத்தவர் (இ. 1912)
- 1889 - சார்லி சாப்ளின், நடிகர் (இ. 1977)
- 1927 - திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், கத்தோலிக்க திருச்சபையின் 265ஆவது திருத் தந்தை
- 1935 - சுபத்திரன், ஈழத்து முற்போக்கு இலக்கியக் கவிஞர் (இ. 1979)
- 1957 - பெரியசாமி சந்திரசேகரன், இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களின் அரசியல் தலைவர், தொழிற்சங்கவாதி

**இறப்புகள்**

- 1908 - அப்புக்குட்டி கிங்ஸ்பரி, யாழ்ப்பாணக் கல்லூரியின் கணிதவியல் பேராசிரியர்.
- 1972 - [illegible] நோபல் பரிசு பெற்ற [illegible] னிய எழுத்தாளர் (பி. 1899)

### சேர் பொன்னம்பலம் இராமநாதன்



சேர்பொன்னம்பலம் இராமநாதன்1851 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி, யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த இராசவால் முதலியார் (கேட் முதலியார்) அருணாசலம் பொன்னம்பலம் என்பவரின் இரண்டாவது புதல்வராக கொழும்பில் பிறந்தார். இவர் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர். சிங்களவரும், தமிழரும் இன வேறுபாடு பாராது அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டனர்.

குமாரசாமி முதலியார், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரது சகோதரர். ஆரம்பக் கல்வியை கொழும்பு இராணிக் கல்விக்கழகத்தில் (கொழும்பு வேத்தியர் கல்லூரி) கற்றார். 13 ஆவது வயதில், பிரெசிடென்சி கல்லூரியில் கல்வி கற்பதற்காக சென்னைக்கு அனுப்பப்பட் டார். சேர் றிச்சட் மோர்கனின் கீழ் சட்டக் கல்வி பயின்று 1873 இலே உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆனார். பின்னர் சொலிசிட்டர் ஜெனரலாகப் பதவி வகித்து 1906 ஆம் ஆண்டு, பணி ஓய்வு பெற்றார்.

1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் சட்டசபைக்கான முதலாவது தேர்தலில் முழு இலங்கையரையும் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரே உறுப்பினராக இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

1879 ஆம் ஆண்டு இலங்கையின் சட்டசபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.1897ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணியாரின் 50ஆவது ஆண்டு விழாவிற்கான இலங்கையின் பிரதிநிதியாக செல்ல பொன்னம் பலம் இராமநாதன் அவர்களே தெரிவுசெய்யப்பட்டார்.

அந்த விழாவின் போது அவருக்கு பிரித்தானிய அரசினால் இலங்கையின் முழுமையான தேசியவாதி எனும் தங்கப்பதக்கம் வழங்கி கௌர விக்கப்பட்டது.

1921 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் பிரபுப் பட்டம் (Sir) வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மிகுந்த சொல்வன்மையும் வாதத் திறமையும் வாய்க்கப்பெற்ற இவர், இலங்கையில் பிரித்தானியரின் பல நடவடிக்கை களுக்கு எதிராக வாதாடி இலங்கையரின் நலன்களைப் பாதுகாத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

### புதிய டைரக்டர்

இந்த சமயத்தில் ஏவி.எம்.மின் 'ராஜா சின்ன ரோஜா' படப்பிடிப்பு முடிந்தது.

அதுவரை, ரஜினி நடித்த ஏவி.எம். படங்கள் அனைத்தையும் எஸ்.பி.முத்துராமன்தான் டைரக்ட் செய்தார். அடுத்த படத்துக்கு, ஒரு மாறுதலுக்காக புது டைரக்டரை போடலாம் என்று சிலர் சரவணனுக்கு யோசனை தெரிவித்தார்கள்.

இதை சரவணன் ஏற்கவில்லை. 'ரஜினியை வைத்து முத்துராமன் டைரக்ஷனில் நாம் எடுத்த எல்லா படங்களும் வெற்றிகரமாக ஓடியிருக்கின்றன. அப்படியிருக்க, ஏன் மாற்றவேண்டும்' என்று கேட்டார்.

எனினும், மாறுதல் தேவை என்ற கருத்து ஏவி.எம். ஸ்டியோவில் பலருக்கும் தொடர்ந்து இருந்து வந்தது.

ரஜினி கண்ட தீர்வு

இந்த விடயம் ரஜினியின் காதுக்கு எட்டியது. அவர் இதுபற்றி சரவணனிடம் பேசினார்.

'ரசிகர்கள் மாறுதலை விரும்புவது இயற்கை. முத்துராமன் யதார்த்தவாதி. மிக நல்ல மனிதர். இதுபோன்ற யோசனையை மகிழ்ச்சியுடன் ஏற்பார். நான் அவரிடம் பேசுகிறேன்' என்றார், ரஜினி.

அப்போது சரவணன் ஒரு யோசனை சொன்னார். 'முத்துராமன யூனிட்டுக்காக ஒரு படம் செய்து கொடுப்பதாக ஏற்கனவே நீங்கள் தெரிவித்து இருக்கிறீர்கள். அந்தப் படத்தை முதலில் செய்து கொடுத்து விடுங்கள். அதன் பிறகு ஏவி.எம். படத்தில் நடிக்கலாம். அதுதான் நியாயமானதாக இருக்கும்' என்பதே சரவணன் தெரிவித்த யோசனை.

'ஓ.கே. இதுதான்நல்ல யோசனை' என்றார், ரஜினி.

### பாண்டியன்

இதன் பிறகு ரஜினியும், எஸ்.பி. முத்துராமனும் சந்தித்துப் பேசியதில், முத்துராமனின் யூனிட்டுக்காக 'பாண்டியன்' என்ற படத்தைத் தயாரிப்பது என்று முடிவாயிற்று.




'என்ன பேனரில் படத்தை தயாரிக்கலாம்?' என்று முத்துராமன் கேட்டபோது, 'உங்கள் தாயார் பெயரையே வையுங்கள்' என்று ரஜினி கூறினார். அதன்படி 'விசாலம் புரொடக்ஷன்ஸ்' என்ற பெயரில் படக் கம்பெனி தொடங்கப்பட்டது.

பொதுவாக, முத்துராமன் டைரக்ஷன் பணியை தவிர வேறு எந்த பணியிலும் தலையிடுவதில்லை. ஆனால தன் யூனிட்டுக்காக 'பாண்டியன்' படத்தைத் தயாரித்ததால், அதன் தயாரிப்பாளராகவும் செயற்பட வேண்டியிருந்தது.

இந்தப் பொறுப்பை சேர்த்து கவனிப்பதில் உள்ள சிரமங்களை ரஜினியிடமும், சரவணனிடமும் முத்துராமன் கூறினார். 'நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் டைரக்ஷனில் கவனம் செலுத்துங்கள். மற்ற வேலைகளை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்' என்று ரஜினியும், சரவணனும் கூறினார்கள்.

அதன்படி தயாரிப்பு பணிகளின் பளுவை அவர்கள் ஏற்றார்கள். குறித்த காலத்தில் படத்தை எடுத்து முடிப்பதற்கான ஏற்பாடுகளை ரஜினி செய்தார். படச்செலவுகள், பட விற்பனை போன்ற விடயங்களை சரவணன் கவனித்துக் கொண்டார்.

இதனால், எஸ்.பி.முத்துராமன் வேறு கவலைகள் இன்றி படத்தின் டைரக்ஷனில் மட்டும் கவனம் செலுத்த முடிந்தது.

### குஷ்பு

இந்தப் படத்தில், ரஜினிக்கு ஜோடியாக குஷ்பு நடித்தார். முத்துராமன் டைரக்ட் செய்த படத்தில் அறிமுகம் ஆனவர் என்பதால், அவரிடம் குஷ்பு மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார். எனவே, குறைந்த சம்பளத்தில் நடிக்க முன்வந்தார்.

படம் வேகமாக வளர்ந்தது. 1992 தீபாவளிக்கு (அக்டோபர் 25) படம் வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டது.

படம் கிட்டத்தட்ட தயாராகி முடிந்துவிட்டது. ஒரு சில வேலைகளே பாக்கி.


இந்த நிலையில் யாரும் எதிர்பாராத அதிர்ச்சியான சம்பவம் நடந்தது. படம் வருவதற்கு 10 நாட்களே இருந்த நிலையில், டைரக்டர் எஸ்.பி.முத்துராமனின் மனைவி கமலா திடீரென்று காலமானார்.

மனைவியின் மரணம் முத்துராமனை வெகுவாக பாதித்தது.

படத்தின் ரிலீஸ் திகதி அறிவிக்கப்பட்டு விட்டதால், படத்தை திரையிட எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்த விநியோகஸ்தர்களும், தியேட்டர்காரர்களும் கையைப் பிசைந்தனர்.

'படத்தின் ரிலீஸ் திகதியை தள்ளிப்போடலாம்' என்று ரஜினியும் கூறினார்.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து–117

...வாங்க கைய நீட்டிட்டு அன்னக்கொடிய ஒரு பார்வை ஆத்தாள ஒரு பார்வை மாத்திமாத்திப் பாத்தான் அழகுசிங்கம்.

நாங்க அசலாள் இல்லப்பா. ஒன் சித்தப்பன்தான்; வாங்கிக்கடா ராசா வாங்கிக்க.

காசை அவன் சட்டைப் பையில போட்டுவிட்டுக் கண்ணையும் தொடச்சுவிட்டான்.

அழுகப் பெறந்த வம்ச மாடா, நீயும் ஒங்க ஆத்தாளும்? ஆம்பள இல்லாத வீடுன்னுதானடா ஆட்டப்புலி அடிச்சுப்புடுச்சு. ஒன் சித்தப்பன் ஒன்கூடவே இருக்கேன்னு வச்சுக்க... இது நடந்திருக்குமா? ஒங்க வீட்டுச் சாணியிலயாச்சும் ஈ ஒட்டியிருக்குமா?

கதவுல முதுகுசாச்சுக் கால்நீட்டி உள்வீட்டுல ஒக்காந்திருந்த கருவாச்சிக்குத் துணுக்குன்னுச்சு.

அவன் இன்னும் சத்தம் கூட்டிப் பேசுறான் காதுகேக்கட்டும் கருவாச்சிக் குன்னு.

எச்சிபட்டுப் பண்டம் பழுதாகிப் போச்சுன்னு நான் நெனைக்கலப்பா; பொதைச்சு வச்சு எடுத்தாலும் தங்கம் தங்கந்தானடா மகனே. ஏங்கூடவே இருந்திர்றியா?

பையில போட்ட துட்ட எடுத்துத் தொட்டுத் தொட்டுப் பாத்துக்கிட்டு ஆகட்டும்ன்னு தலையாட்டினான் அழகுசிங்கம்.

உள்ளயிருந்து கத்திச் சொன்னா கருவாச்சி, துட்டத் திருப்பிச் சித்தப்பன் பையிலயே போட்டுர்றா செல்லம்.

அவன் போடல; கையில வச்சுக்கிட்டுக் கனாக் கண்டுக்கிட்டேயிருக்கான்.

நீ வெவரமாயிருக்க. ஆத்தாளுக்குத்தான் பத்தாது... சின்ன வயசுலயே மனசுல முடிச்சுப்போட்டு விட்டாகளா... அவுத்தாலும் அவுக்க முடியல; அத்தாலும் அக்க முடியல. மனசு மறுகுதடா மகனே. வசதி இருக்குடா சித்தப்பனுக்கு; வந்திரு. அப்பன் என்ன சொல்லுவ? நானிருக்க நீங்க [illegible] ஆகலாமாடா? நான் [illegible] இன்னும்பய பள்ளிக்கூடத்துல போயிச் சேரப் போறன்னு வச்சுக்க; ஒம் பேரு என்னான்னு கேட்டா என்ன சொல்லுவ?



ம்னா என்ன சொல்லுவ? பயமேலயும் கீழயும் முழிச்சான்.

சொன்னான்; அ...ழ...கு... சி....ங்....க....ம்.

சரி... என்னா அழகுசிங்க உள்ளயிருந்து ஆத்தாக்காரி கத்துனா ; க. அழகுசிங்கம்!

இதெல்லாம் கேட்டுக்கிட்டேயிருந்த பவளம் இப்ப உள்ள புகுந்தா. இன்னும் பழச மறக்கல போலருக்கு. க... கட்டையன் தானே....?

இல்ல; கருவாச்சி.

கொஞ்சநேரம் அது ஆளில்லாத வீடா அமைதியாகிப்போச்சு.

குடுத்த துட்ட சித்தப்பன் பையில போடுறான்னு போடச் சொல்லிட்டு அவன அடிச்சு இழுத்துத் தூக்கி உள்ள ஓடிப்போனா கருவாச்சி.

சொக்கத்தேவன்பட்டியக் கடக்கிறவரைக்கும் அன்னக்கொடி குனிஞ்சதல நிமிரல.

கண்ணுல விழுந்த தூசியத் தொடைக்கிறவன் மாதிரி கண்ணீரையும் தொடைச்சுக்கிட்டான் தலையில கட்டுன துண்ட அவுத்து. இவ பொழப்புக்குள்ள வந்த ஒரு நல்ல ஆத்மாவும் வேட்டிய மடிச்சுக்கட்டிக்கிட்டுப் பொடி நடையாப் போயிருச்சு.

ரெண்டாம் நாளு கருவாச்சி லேசாப் பேச்சு குடுத்த; ஒம் புருசன் இங்க வாரதே இல்லையா கனகம்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல்கலை. மாணவர்களின் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

**நாட்டு மக்கள் புதுவருடத்தை கொண்டாடிக் கொண்டிருக்கும் போது பல்கலைக்கழக மாணவர்கள் இலவச கல்வியை வலியுறுத்தி குரல் கொடுத்துக் கொண்டிருப்பதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.**

திறந்த பல்கலைக்கழக மாணவர்களின் தொடர் சத்தியாக்கிரக போராட்டம் நேற்றும் 119 ஆவது நாளாக தொடர்ந்தது.

ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் 48 ஆவது நாளாக சத்தியாகிரகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், சப்ரகமுவ, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்களும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலவசக் கல்வியை பாது காத்தல், உயர்கல்விக்கான கட்டணங்களை நியாயமான ரீதியாக்குதல், உரிமைக்காக போராடும் மாணவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்தல் போன்ற விடயங்களை முன்வைத்து இந்த போராட்டம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மீன்பிடியில் ஈடுபடுவதற்கு தமிழகத்தில் தடை விதிப்பு

தமிழகத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு நேற்று முதல், 45 நாட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல், மே மாதங்களில் கடல் வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க காலம் என்பதால் இந்திய மத்திய வேளாண்மை அமைச்சு இந்த தடையை விதித்துள்ளதாக தஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால் மீன் வளத்தை பாதிக்கும் வகையில், இழுவை படகுகளையும், விசைப் படகுகளையும் எதிர்வரும் மே 29 ஆம் திகதி வரை கடலுக்கு கொண்டுசெல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி தொழிலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் தமிழக மீனவர்களின் 15 ஆயிரம் படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம், தொண்டி, எஸ்.பி.பட்டிணம், கீழக்கரை, ஏர்வாடி மற்றும் வாலிநோக்கம் ஆகிய கடலோர பகுதிகளில் மாத்திரம் ஆயிரத்து 500 இற்கும் அதிகமான படகுகள் மீன்பிடியில் ஈடுபடுத்தபடமாட்டாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)

# ஊடகங்களுக்கு ஒரு பில்லியன் கடனாளியான மகிந்த ராஜபக்ஷ

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம், அரச ஊடகங்களில் செய்த விளம்பரங்களுக்காக செலுத்த வேண்டிய ஒரு பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை செலுத்த தவறியுள்ளதாக அரசாங்க தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு 206.1 மில்லியன் ரூபாவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு 51.7 மில்லியன் ரூபாவும், அஷோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டட் (லேக் ஹவுஸ்) நிறுவனத்திற்கு 124.9 மில்லியன் ரூபாவும் முன்னாள் ஜனாதிபதி செலுத்த வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனை தவிர சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு 4 மில்லியன் ரூபாவும், வசந்தம் தொலைக்காட்சிக்கு 11 மில்லியனும், வசந்தம் வானொலிக்கு 6 மில்லியன் ரூபாவும் லக்ஹண்ட வானொலிக்கு 6 மில்லியன் ரூபாவும், அரச அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு 592.6 மில்லியன் ரூபாவும் செலுத்தப்பட வேண்டியிருப்பதாக ஊடகத்துறை அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தொகையானது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விளம்பரங்களுக்காக செலுத்த வேண்டியவை என கூறப்படுகிறது. எவ்வாறாயினும் இது தொடர்பில் குறித்த அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எவ்வாறு இந்த செலவுகள் செய்யப்பட்டன என்பது தொடர்பாக கண்டறிய விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (இ-5)

# தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதை தடுக்க நடவடிக்கை

தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி, மீன்பிடியில் ஈடுபடுவதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுடன் தற்போது கலந்துரையாடல்கள இடம்பெறுவதாக கடற்றொழில் மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதனால் கடல் வளங்களுக்கு பாரியளவு சேதங்கள் ஏற்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனால், நாட்டின் கடல் வளங்களை பாதுகாக்கும் நோக்கில், தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்துவதை முழுமையாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-5)

# நிஷாந்த ரணதுங்கவிடம் விசாரணை

(கொழும்பு)

தனியார் ஊடக நிறுவனம் ஒன்றின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றும் நிஷாந்த ரணதுங்க விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த நிறுவனத்தின் நிதிப் பரிமாற்றம் தொடர்பிலேயே அவர் இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந் துள்ளது.

பொலிஸ் நிதிக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிஷாந்த ரணதுங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் செயலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 'முதற் பிரசவம்' கவிதைத் தொகுப்பு குறித்து கவி நோக்கு

சமகால இலக்கியக் கண்ணாடியாக தமிழ் உணர்வின் பிரசவமாக தமிழ் தாய் மீது கொண்ட உணர்வலைகளின் வெளிப்பாடாக றம்யா உதயகுமாரின் எழுத்துருவில் எழுந்த உணர்வலைகளின் சிதறல்கள் **முதல் பிரசவம்** என் னும் கவித் தொகுப்பாக வெளி வந்திருக்கின்றது. ஈர்பதினைந்து கவிச் சிதறல்கள் இதய வலியாகி தமிழ் தாயின் மகுடமாக வந்த இக் கவிப் பிரசவம் உண்மையில் முதற் பிரசவமல்ல மாறாய் முழுமை கவிப் பிரசவமாக மிளிர்கின்றது என்றால் அதை யாராலும் மறுக்க முடியாது.

தூயவளே என்ற கவி தொடக்கத்திலிருந்து கள்ளக் காதலி என்ற சமகால சமூகப் பிறழ்வுகளை படம் பிடித்துக்காட்டும் ஓவியமாக முத்தான வரிகள் கொண்டு ''என் முதற் பிரசவமே!'' என முந் நூறு இரவுகள் சுமை தாங்கி பன்னூறு கனவுகளுடன் என்ற வரி பிரசவ வலி அல்ல கவிஞனின் உள்ளத்து வலிகள் என்பதனை உணர்வலையாக மனிதரின் மாற்றத்தினை மூட நம்பிக்கையை முற்றாக திறந்து விடு என்ற வரி ஓவியங்கள் வெளிப்படுத்தி நிற்க புதியதோர் விதி செய்ய இக் கவிஞர் முற்பட்டிருக்கின்றார் என்பதை தாகம் இவளுக்கு தண்ணீரை விட கண்ணீர் தான் என்ற வரிகள் கவிஞரின் கலாரசனையுள்ள வரிகள் கிடைத்ததில் திருப்தி கொள் மனமே என்ற அறிவுரைகள் ஊடாக பன்னிரு பௌர்ணமி பார்த்திருக்கும் பெண்ணின் காத்திருத்தல் என்பது பெண்ணியத்தின் பேனா முனையில் தொட்டுச் சென்றிருக்கின்றார்.

சீர் வரிசை வேண்டி கைவரிசை காட்டுவோர் முன் பல்வரிசை காட்டி நிற்கும் பாவையர்களின் இன்றைய நிலையை சீதனக் கொடுமையின் உச்ச நிலையை பசி இவள் வயிற்றுக்கு இல்லை வயசுக்கே என்ற பெண்ணிலை வாதியாக [illegible] நிலைநிறுத்த முற்பட்டிருக்கின்றார். காரிகைகளின் கலக்கத்தினைக் கண்டு கலங்கி கவிஞர் சில இடங்களில் தொழில் தேடச் செல்லும் ஆடவர்களின் மனைவிகள் தடம் மாறும் நிலையை பக்கத்து வீட்டு அங்கிள் பாவம் பயமாய் இருக்குதாம் என்று அம்மாவுடன் தான் வந்து அடிக்கடி தூங்குவார் என்ற மழலை மொழி சமூகப் பிறழ்வை உணர்வான வரிகள் மூலம் வெளிப்படுத்த முற்பட்டிருக்கும். அதேவேளை முதிர் கன்னி நிலையைப் பார் என்ற ஏக்கம் ஒரு முதிர் கன்னியாக கவிப்பொருள் கொண்டு இனி என்ன காத்திரு கண்ணே காலனாவது வரட்டும் சீக்கிரம் உன்னைத் தேடி என்ற வரிகள் முதிர் கன்னியின் அடி மனதை அவனுக்கு வெளிப்படுத்தி அன்பினால் தான் உலகம் சுழல்கிறது என்பதை முத்தம் கொடு என்னும் கவி வரியில் [illegible]




பெருகும் அருவிக்கு முத்தம் அணை போடட்டும் என்ற வரிகள் மனித உணர்வலைகளின் பிரதி விம்பங்களாக வெளிப்பட்டு நிற்பது இக்கவித் தொகுப்புக்கு அணி சேர்ப்பதாக உள்ளது.

அதிகாலைப் பூக்கள் எல்லாம் அலற முன்னே கண் விழித்து ஐயோ விடிந்தது என்ற அவசரமாய் ஓடிடுவாய் என்ற கவிவரி விலைமாதின் சமகாலப் போக்குகளை வெளிப்படுத்தும் அதேவேளை விடியலை விரும்பாதவர்களாக கள்ளக் காதலிகள் இருப்பது எமது சமூகத்தின் விடியலுக்கோர் தடை என்பதை ஒவ்வொரு குடும்பப் பெண்களின் உள்ளத்து வரிகளாக உயிர் கொண்ட தமிழால் படைத்திருக்கும் கவிஞன் பாராட்டப்பட வேண்டியவராவார்.

ஈழமணித் திருநாட்டில் அல்ல தமிழ் கூறும் நல்லுலகம் தரணி மீது வாழும் வரை இக்கவிதைத் தொகுப்பு முதற் பிரசவமாய் அல்ல நற்றமிழ் பிரசவமாய் நற்கவி பிரசவமாய் என்றும் வாழும் என்பதில் ஐயமில்லை.

**G.G. போல் அன்ரன்**
(இணுவை இனியவன்)
காணி பயன்பாட்டு திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் குறித்து தகவல்கள் கோரல்

(கொழும்பு)

**கடந்த வருடம் புதுச்சேரியில் இருந்து அவுஸ்திரேலியா சென்ற இலங்கை அகதிகள் குறித்த தகவல்களை வழங்குமாறு, புதுச்சேரி பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவுஸ்திரேலிய அதிகாரிகளுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடாக கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் ஜூன் மாதமளவில் 150 இலங்கை தமிழ் அகதிகள் அவுஸ்திரேலியாவிற்குத் தஞ்சம் கோரிச் சென்ற நிலையில் தற்போது அவர்கள் நவுறு தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் வழங்கிய வாக்கு மூலங்களை தந்துதவுமாறு அந்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

குறித்த அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பிய படகு உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏனையோரையும் கைது செய்யும் நோக்கில் இந்த தகவல்களை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. என தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு- மடத்துவெளி அருள் மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் பிரமோற்சவ விஞ் ஞாபனத்தின் தேர்த்திருவிழா இன்று 16 ஆம் திகதி வியாழக்கிழமை முற் பகல் இடம்பெறவுள்ள அதேவேளை நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ

## புலமைச்சொத்து சட்டத்தை திருத்தி அமைப்பது குறித்து அரசு கவனம்

புலமைச சொத்து சட்டத்தை திருத்தி அமைப்பது குறித்து அரசாங்கம்கவனம்செலுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2003ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க புலமைச சொத்து சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளது.

புலமைச் சொத்து சட்டங்களில் தேவையான திருத்தங்களை வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சு மேற்கொள்ளவுள்ளது. இலங்கைக்கு புவியியல் வரைபடங்களில் காணப்படும் நிலையை உறுதி செய்ய இந்த சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

வர்த்தகப்பண்டக்குறிகளை மோசடியாக பயன்படுத்துவதனாலும் நாட்டுக்கு பாரிய பாதிப்பு ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 30 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 60 | 60 | 30 |
| தக்காளி | 60 | 50 | 50 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 40 |
| கோவா | 80 | 30 | 40 | 50 | 40 |
| கரட் | 200 | 140 | 100 | 140 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 70 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 200 | 100 | 100 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 50 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 140 | 100 | 40 | 80 | 80 |
| லீக்ஸ் | -- | 140 | 150 | 400 | 140 |
| பீற்றூட் | -- | 50 | 80 | 80 | 50 |
| கறிமிளகாய் | 200 | 80 | 110 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 600 | 300 | 400 | 450 |
| போஞ்சி | 200 | 100 | 120 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 30 | -- | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 140 | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 60 | 45-55 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | -- | 120 | 120 |
| வெங்காயப்பூ | -- | +-- | -- | -- | -- |
| முள்ளங்கி | -- | 30 | 40 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 |

## தூதுவர் சேவையிலுள்ள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

தூதுவர்சேவையில்காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெற்றிடம் காணப்படுகின்ற பதவிக்கு நியமிக்கப்படக் கூடியவர்களின் பெயர்கள் பாராளுமன்றத்தின் செயற்குழுவிற்கு, பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பரிந்துரை செய்யப்பட்டவர்களின் பெயர்களை செயற்குழு அங்கீகரிக்கும் பட்சத்தில் குறித்த வெற்றிடங்களை நிரப்ப தீர்மானித்துள்ளதாக அவ் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

தூதரக சேவையில் ஈடுபட்டிருந்த சில பிரதிநிதிகள், அண்மையில் நாட்டிற்கு மீள அழைக்கப்பட்டிருந்ததால் அந்த நாடுகளில் பதவி வெற்றிடங்கள், காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 342

Search for people, places and things Nagendram Home

சுஜே செல்வா




திலீப் குமார்





சிந்து சிந்துஜா




லங்கா பாய் வாமன்




கஜன் கஜமுகன்



கண்ணன் ராதாரவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படக் காரணமான காரணிகள்

...அதாவது எதிரியின் பலங்களை எதிர்த்து நிற்பதற்கான தயார்ப்படுத்தலை மேற்கொள்ளும் அதேவேளையில் எதிரியின் பலவீனங்களையும் பயன்படுத்துவதற்கான மதிநுட்பம்மிக்க மூலோபாயம் உருவாக்கப்பட வேண்டிய தேவை எழுந்தது.

புலிகளின் ஆளணி வளம் 20,000-30,000 ஆகக் காணப்பட்டது. இதனால் இலங்கை அரசாங்கத்தின் மதிநுட்பமான மூலோபாயம் வெற்றி பெற்றது.

அதாவது 2006 நடுப்பகுதியில் நான்காம் கட்ட ஈழப்போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கைப் படைகள் ஏற்கனவே பாரியதொரு வெற்றியைப் பெற்றிருந்தன.

2004 இன் பிற்பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த கட்டளைத் தளபதியான கேணல் கருணா இந்த அமைப்பிலிருந்து விலகினார். இவருடன் 6000 வரையான புலி உறுப்பினர்கள் அமைப்பிலிருந்து பிரிந்தனர். இதனால் கிழக்கில் புலிகளின் நிலை மிக மோசமாக வீழ்ச்சியுற்றது.

கருணாவின் பிளவானது புலிகள் அமைப்பின் போரியல் தொடர்பான மிக முக்கிய புலனாய்வுத் தகவல்களைப் பெற உதவியது.

முக்கியமாக, முதன் முதலாக, இலங்கை அரசாங்கத்தின் புலனாய்வு அமைப்புக்கள் புலிகளின் பிரதேசங்களுக்குச் சென்று தகவலகளை சேகரித்து அவற்றை அறிக்கையாக்குவதற்கு கருணாவின் பிளவு வழிவகுத்தது. இந்தப் பிளவானது புலிகள் அமைப்பு பலவீனம் அடையப் போவதை உறுதிப்படுத்தியது.

நான்காம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த போது, தமிழீழ விடுதலைப் புலிகளால் நாடு பூராவும் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது.

உயர் இலக்குகள் மீது தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை புலிகள் நடத்தினர். இலங்கையின் வெளியுறவு அமைச்சர், பாதுகாப்புச் செயலர், பாகிஸ்தான் உயர் ஆணையாளர், இராணுவத் தளபதி போன்ற உயர் இலக்குகளைக் குறிவைத்துப் புலிகள் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

புலிகளின் இத்தகைய போரியல் திறன்கள் இலங்கை இராணுவம் மற்றும் காவற்துறையினரின் அதிகரித்த ஆளணி மூலம் கட்டுப்படுத்தப்பட்டது. இலங்கை அரசாங்கத்தால் சிவில் பாதுகாப்புப் படையினர் ஒவ்வொரு கிராமங்களிலும் பயிற்றுவிக்கப்பட்டு நாட்டின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இலங்கையின் தலைநகருக்குள் செயற்பட்ட புலிகளின் பயங்கரவாத நடவடிக்கை மையங்கள் கண்டறியப்பட்டு அவை நிர்மூலமாக்கப்பட்டன. இது புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த உதவின.

இலங்கை அரசாங்கத்தால் நாட்டின் தெற்கு மற்றும் மேற்கில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய பாதுகாப்பு முன்னேற்பாடுகள் வடக்கு மற்றும் கிழக்கில் விடுதலைப் புலிகள் மீது முழுக்கவனத்தையும் செலுத்த வழிவகுத்தது.

இலங்கை அரசாங்கத்தின் பிரதான இலக்காக புலிகள் மீதான தாக்குதல் காணப்பட்டது. புலிகளிடமிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதை விட புலிகளை அழிப்பதே இலங்கைப் படைகளின் பிரதான இலக்காகக் காணப்பட்டது.

புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்கள் மீது சமநேரத்தில் பல்வேறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் புலிகளைத் திணறடிப்பதே இலங்கைப் படைகளின் நோக்காகக் காணப்பட்டது. இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதன் மூலம் இவ்வாறான தந்திரோபாய நலனைப் பெற முடிந்தது.

இந்த இராணுவ நடவடிக்கைகளில் சிறிய, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட, உயர் நடமாடும் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டன. இந்தக் குழுக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னணி நிலைகளுள் ஊடுருவி உயர் பெறுமதி மிக்க இலக்குகள் மது தாக்குதல்களை மேற்கொண்டன.

புலிகளின் முன்னணி நிலைகளுக்கான வழங்கல்கள் மற்றும் தொடர்பாடலை இடையூறு செய்வதற்கான தாக்குதல்களில் இந்தக் குழுக்கள் ஈடுபட்டன. சிறிய அணிகள் மட்டத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டு இவர்கள் புலிகளின் நிலைகள் மீது வான் மற்றும் ஆட்லறி, மோட்டார் தாக்குதல்களை மேற்கொள்வதற்கான கட்டளையை வழங்குவதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறான பல்வழி சமநேரத் தாக்குதல்கள் புலிகள் தமது நடமாடும் சுதந்திரத்தை இழப்பதற்கு வழிவகுத்தன. இதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டனர்.

சிறப்புப் படைகள் உட்பட இராணுவ வீரர்களைக் கொண்ட சிறிய குழுக்கள் இலங்கை தரப்பின் புதியதொரு போரியல் அணுகுமுறையாக உட்புகுத்தப்பட்டனர். நன்கு பயிற்சி வழங்கப்பட்ட சிறப்பு காலாற் படையினர் புலிகளின் நிலைகளுகக்கு மிக நெருக்கமாகப் பணிபுரிந்தனர்.

புலிகளின் இராணுவத் தலைமைத்துவ இலக்குகள் மீதான தாக்குதல்களில் 10,000 வரையான சிறப்புப் படைகள் ஈடுபடுத்தப்பட்டனர. இதன்மூலம் புலிகளின் கட்டளை வழங்கும் தளபதிகள் சிலர் கொல்லப்பட்டனர். இதனால் புலிகளின் கட்டளைச் சங்கிலியில் முறிவு ஏற்பட்டது.

'நாங்கள் நான்கு பேரைக கொண்ட சிறிய குழுக்களைப் போரில ஈடுபடுத்தினோம். இவர்கள் ஆழமான காடுகளுக்குள் தாக்குதல்களை மேற்கொள்வதற்காகப் பயிற்றுவிக்கப்பட்டனர். இவர்கள் தம்மில் தாமே தங்கியிருந்து சுதந்திரமாகச் செயற்பட்டனர். ஆகவே ஒரு பற்றாலியனில் மிகப் பெரிய எண்ணிக்கையில் நான்கு பேரைக் கொண்ட குழுக்கள் காணப்பட்டன. இக்குழுக்கள் மூலம் நாங்கள் பரந்தளவில் போரிடுவதற்கான சாதகமான சூழலைப் பெற்றோம்' என இராணுவத் தளபதி ஜெனரல் பொன்சேகா குறிப்பிட்டார்.

இவரே நான்கு பேரைக் கொணட சிறிய குழுக்களைப் போரில் ஈடுபடுத்துவதற்கான எண்ணக்கருவை அறிமுகப்படுத்தியிருந்தார். நான்காம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த போது 1500 சிறிய குழுக்கள் பயிற்றுவிக்கப்பட்டன. 2008இல் இந்த எண்ணிக்கை 30,000 ஆக உயர்ந்தது.

சிக்கலான அடர்ந்த காடுகளுள் ஆழ ஊடுருவிப் போர் செய்வதற்கான பயிற்சிகளைப் பெற்ற இலங்கை இராணுவ வீரர்கள் பொதுவாக போரியல் ஆளுமையைப் பெற்ற, அதிக நம்பிக்கையைக் கொண்ட வீரர்களாகக் காணப்பட்டனர். இதனமூலம் இவர்கள் இரவிலோ அல்லது பகலிலோ எந்தவேளையிலும் போரிடுவதற்கான ஆற்றலைப் பெற்றிருந்தனர்.

தந்திரோபாய மட்ட முயற்சிகள் மற்றும் புதிய போர் முறைமையைப் பெற்ற இலங்கை இராணுவமானது முன்னுதாரணமான ஒரு அமைப்பாகப் பரிமாணம் பெற்றது.

அனைத்துலகில் செயற்பட்ட கிளர்ச்சிக் குழுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தனித்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் கடல் வழி ஏற்றுமதி இறக்குமதிகள் மற்றும் கேந்திரம் முக்கியத்துவம் மிக்க கடல்வழிப் போக்குவரத்துப் போன்றவற்றை தடுத்து நின்ற போரியல் ஆற்றல் மிக்க ஒரு அமைபபாக புலிகள் அமைப்பு விளங்கியது.

இவ்வாறான தாக்குதல்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது சிறிய மற்றும் விரைவுப் படகுகளையும் கண்ணாடி இழைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட படகுகளையும் தாக்குதல் கலங்கள் மற்றும் ஆயுதங்கள் பொருத்தப்பட்ட இயந்திரத் துப்பாக்கிகள், கையெறி குண்டுகள், கரும் புலிகளைக் கொண்ட படகுகள் போன்ற பல்வேறு போரியல் அணுகுமுறைகளைப் புலிகள் கைக்கொண்டனர்.

நான்காம் கட்ட ஈழப்போரின் போது, புலிகளால் பயன்படுத்தப்பட்ட 30 தாக்குதல் கலங்கள் மற்றும் 8-10 கரும்புலிப் படகுகள் போன்றன இலங்கை கடற்படையின் 60-70 கடல்மைல் வேக விரைவுத் தாக்குதல் கலங்களைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

இலங்கை கடற்படையினரின் இத்தகைய கடற் தாக்குதல்கள் அமெரிக்காவின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு முறைமையின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டது.

கடற் போக்குவரத்து நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் பதினொரு பாரிய சரக்குக் கப்பல்களைப் பயன்படுத்தினர். இவை உலகம் பூராவும் புலிகள் தமக்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்பட்டன.

ஆனால் நான்காம் கட்ட ஈழப் போர் ஆரம்பித்த பின்னர், இந்தியா மற்றும் அமெரிக்காவின் உதவியுடன் புலிகளின் ஆயுதக் கப்பல்களை இலங்கை கடற்படையினர் வழிமறித்து மூழ்கடித்தனர். இதில் இலங்கையின் புதிய போரியல் முறைமையும் இந்தியா மற்றும் அமெரிக்காவின் புலனாய்வுத் தகவல்களும் பயன்படுத்தப்பட்டன.

புலிகளின் இறுதி ஆயுதக் கப்பல் 2007இன் பிற்பகுதியில் மூழ்கடிக்கப்பட்டது. இலங்கை கரையிலிருந்து 3000 கிலோமீற்றருக்கு அப்பால் அவுஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவுகளுக்கு அருகில் இந்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட மூன்று காரணிகளின் ஒட்டுமொத்த விளைவாக இலங்கை இராணுவம் தனது மூலோபாய இலக்கை அடைந்து கொண்டது.

அதாவது உயரிய போரியல் மூலோபாயம், சிறிய இராணுவக் குழுக்களைப் பயன்படுத்தி மதிநுட்பமாகக் கையாளப்பட்ட மூலோபாயம் போன்றன இலங்கை அரசாங்கத்தின் போர் வெற்றிக்குக் காரணமாகியது.

இப்போரியல் மூலோபாயமானது புலிகள் அமைப்பை முற்றிலும் அழித்தது. இலங்கை அரசாங்கமானது தனது போரியல் மூலோபாய த்தை மாற்றியமைத்து புதிய நுட் பங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும் என நிரூபித்தது.

புலிகள் தமது மரபுசார் போரியல் உத்தியைத் தொடர்ந்தும் கையாண்டதன் மூலம் முன்னர் வெற்றியடைந்த போதிலும் பின்னர் தோல்வியடைய நேரிட்டது. இலங்கை அரசாங்கம் முன்னைய போரியல் முறைமை மூலம் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்த போதிலும் தனது புதிய போரியல் மூலோபாயம் மூலம் வெற்றியைப் பெற்றது.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களைக் கருத்திலெடுக்காது, இராணுவப் படையை மிகவும் அப்பட்டமாக, கொடூரமாகப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் போரை மேற்கொண்டதன் மூலமே அதனை வெற்றி கொள்வது சாத்தியமானது என சிலர் விமர்சிக்கின்றனர்.

போரானது இயற்கையான கொடூரம் மற்றும் வன்முறை மூலம் மேற்கொள்ளப்பட முடியும் எனவும் தொடர்ந்தும் அது மிக இலகுவான வழியில் மேற்கொள்ளப்பட முடியாது எனவும் சிலர் கூறுகின்றனர். எதுஎவ்வாறிருப்பினும், இவ்வாறான விமர்சனங்கள் மற்றும் வாதங்களைத் தாண்டி இக்கட்டுரையின் மூலம் இலங்கை அரசாங்கமானது தனது போரியல் உத்தியை மாற்றியமைத்ததன் மூலமே போரை வெற்றி கொள்ள முடிந்தது என்பதை அழுத்தமாகக் கூறுவதே இதன் நோக்காகும்.

இதனைக் கண்டுபிடிப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு 22 ஆண்டுகளுக்கு மேல் பிடித்துள்ள போதிலும் தனது புதிய போரியல் மூலோபாயம் மூலம் இலங்கை அரசாங்கம் போரில் வென்றுள்ளது.

(முற்றும்)

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினருக்கு வழங்கப்பட்டிருந்த பொதுமன்னிப்பு இன்றுடன் முடிந்தது

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற அல்லது உரிய முறையில் கடமைகளை விட்டு விலகாத அல்லது விடுமுறையில் சென்று மீண்டும் திரும்பாதவர்கள் பொதுமன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இவ்வாறு இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற படையினருக்கு வழங்கப்பட்டிருந்த பொதுமன்னிப்புக் காலம் இன்றுடன் நிறைவடைகின்றது.

பொதுமன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு உரிய முறையில் பதவி விலக முடியும் என இராணுவம் அறிவித்துள்ளது.

பொதுமன்னிப்புக் காலத்தில் இதுவரையில் 12ஆயிரத்து 50 படையினர் உரிய முறையில் பதவி விலகிக் கொண்டுள்ளனர்.

40 ஆயிரம் பேர் உரிய முறையில் பதவி விலகாதிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர தெரிவித்துள்ளார். (இ-5)

# கருவிகளுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களினதும் நிலுவைகள் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் திருநெல்வேலியிலுள்ள நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்தில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை எதிர்வரும் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன என நல்லூர் பிரதேச சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## சத்சங்கம்

ஓர் ஊருக்கு ஒரு துறவி வந்திருந்தார். மக்களெல்லாம் அவரைச் சுற்றி அவருடைய ஆசி பெறுவதற்காகக் காத்திருந்தார்கள். அப்போது அவர் இப்போது நாங்களெல்லோரும் பிரார்த்தனை செய்யலாம் என்றார். சத்சங்கம் ரொம்ப முக்கியமானது என்றார்.

மக்களும் அவருடைய ஆணைக்குக் கட்டுப்பட்டார்கள். பிரார்த்தனை நடந்தது. பின்பு ஒருத்தர் கேட்டார், இதனால் என்ன நன்மை? உடனடியாக என்ன பயன் கிடைக்கும் என்றார். உடனே அந்தத் துறவி சொன்னாராம் ''இந்தக் கேள்விக்குப் பதில் வேண்டுமென்றால், இப்ப நான் ஓர் அற்புதத்தைச் செய்து காட்டப் போகிறேன். அதை வந்து பாருங்கள். பின்பு உங்கள் கேள்விகளுக்கு விடை கிடைக்கலாம்'' அப்படியென்றாராம். சரியென்று சொன்னார்கள் அங்கிருந்தவர்கள் எல்லோரும்.

இப்போது அந்தத் துறவி ஒரு குளத்தை நோக்கி நடந்து போனார். அவரை மக்களெல்லாம் பின்தொடர்ந்து போனார்கள். துறவி அங்கிருந்த குளக்கரையில் நின்றுகொண்டு கையில் ஒரு கல்ல எடுத்தார். அந்தக் கல்லை குளத்துக்குள் போட்டார். அந்தக் கல் அப்படியே குளத்துக்குள் ஆழமாகப் போய்விட்டது. இப்ப இந்த அதிசயத்தை பார்த்தீர்களா என்று அவர்களைப் பார்த்துக் கேட்டாராம். உடனே மக்களில் சிலபேர் சொல்லியிருக்கிறார்கள், ''இதில் என்ன அதிசயம் இருக்கின்றது. நீங்கள் போட்ட கல் குளத்துக்குள் போய்விட்டது. இது இயல்பாக நடக்கிறதுதானே? இதில் ஒன்றும் அதிசயம் இல்லையே''? என்று.

''சரி, உண்மையான அதிசயத்தை நீங்கள் பார்க்க வேண்டுமென்றால் எல்லோரும் ஒரு மணி நேரம் கழித்து இங்கே வாருங்கள் என்றாராம் அவர். இப்போது மக்கள் எல்லோரும் போய்விட்டார்கள். உடனே துறவி தன் பக்கத்தில் இருக்கின்ற இரண்டு சீடர்களை அழைத்தார். ஒரு பெரிய மரக்கட்டை அங்கே இருந்திருக்கிறது. அது ரொம்ப பெரிய மரக்கட்டை. அதை அப்படியே உருட்டி குளத்துக்குள் தள்ளிவிடுங்கள் என்றாராம். அவர்களும் அப்படியே தள்ளிவிட்டார்கள்.

பின்பு என்ன செய்தார்களென்றால், ஒரு குண்டுக் கல்லை எடுத்து அந்த மிதக்கின்ற கட்டைக்கு மேல் வைக்கச் சொல்லி இருக்கிறார். சீடர்களும் அப்படியே வைத்துவிட்டார்கள். இப்போது அந்தக் கட்டை மிதக்கிறது. கட்டைக்கு மேல் அந்தக் குண்டுக்கல்லு இருக்கிறது. ஒரு மணி நேரம் கழித்து மக்களெல்லாம் அவர் சொன்னபடி வந்தார்களாம். இப்ப அதிசயத்தைப் பார்த்தீர்களா என்று கேட்டாராம்.

அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே இது அதிசயம்தான். ஒரு கல்லை போட்டபோது அது தண்ணீருக்குள் போய்விட்டது. ஆனால் இவ்வளவு பெரிய குண்டுக்கல்லு வந்து அடியில் போகாமல் மிதக்கிறதே. இது ஓர் ஆச்சரியம்தான் என்று சொன்னார்களாம். அதற்குள் ஒருத்தர் உண்மையைக் கண்டுபிடித்திட்டார். இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. அங்கே பாருங்கள் அந்தக் கல்லுக்குக் கீழே ஒரு பெரிய கட்டை மிதந்துகொண்டு இருக்கிறது. கட்டைக்கு மேலேதான் கல் இருக்கிறது. அதனால் கல் ஆடாமல் இருக்கிறதற்குக் காரணம் அந்தக் கட்டைதான் என்று அவர் கண்டுபிடித்துச் சொன்னாராம்.

மக்கள் எல்லோரும் பார்த்தார்கள். அப்படியென்றால் இது என்ன அதிசயம்? இதுவும் இயல்பாக நடக்கிறதுதானே என்று சொன்னார்களாம். அப்ப தான் அந்தத் துறவி சொன்னா ராம், இது அதிசயம் இல்லாமல் இருக்கலாம். அற்புதம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு மாபெரும் உண்மையை இது உங்களுக்குத் தெரியப்படுத்துகிறது. ஒரு சாதாரண கல்லை எடுத்துப் போட்டால் அது தண்ணீரில் மூழ்கிப் போகின்றது இல்லையா? ஆனால் இந்தக் குண்டு கல்லு மிதக்கிறது. அதற்குக் காரணம் என்ன? அந்தக் கல் மூழ்காமல் இருக்கிறதுக்கு மிதக்கிற கட்டை உதவியா இருக்கிறது என்று சொன்னாராம்.

''இப்ப பிரார்த்தனையென்றால் எதற்கு? சத்சங்கமெல்லாம் எதற்கு? நல்லோருடைய தொடர்பெல்லாம் எதற்கு என்று கேட்டீர்களே? இதுமாதிரித்தான் சோதனைகளில், துன்பங்களில் இருக்கின்ற நீங்கள் பிடிப்பு இல்லாமல் எதிலேயாவது மூழ்கிப் போயிடுவீர்கள். எங்களை மாதிரி துறவிகள், நல்லோருடைய நட்பு உங்களுக்குக் கிடைத்ததென்றால் துன்பம் வந்தாலும் அதில் மூழ்கிப் போகாத பக்குவம் உங்களுக்கு வந்துவிடும். அதனால் நல்லோர் தொடர்பென்பது மிகவும் முக்கியம். இந்த உலக வாழ்க்கையில் மூழ்கிப் போகாமல் அது உங்களை காப்பாற்றும்'' என்று சொன்னாராம்.

அது உண்மைதான். நல்லோர் தொடர்பு கிடைக்கவில்லையென்றால் என்னாகும் தெரியுமாம்.

ஒருத்தர் ஒருவரிடம் கடன் வாங்கியிருந்தார். எப்படியாவது நாளைக்குக் காலையில் நான் கண்டிப்பாக தருகிறேன் என்று அவரிடம் வாக்குக் கொடுத்தார். ஆனால் ஒன்றும் பணம் கிடைக்கின்ற மாதிரித் தெரியவில்லை. இரவெல்லாம் தூங்காமல் அவர் கவலைப்பட்டுக்கொண்டு இருந்தார். சிறிதுநேரம் கழித்து எழுந்து போய் அந்த கடன் வாங்கியவரின் வீட்டுக் கதவைத் தட்டி ''நாளைக்கு உங்கள் கடனைக் கொடுக்க முடியாது'' என்று சொன்னார். அதை காலையிலே வந்து சொல்லியிருக்கிலாமல்லவா? இப்ப நடுராத்திரியில் வந்து சொல்கிறீர்களே என்று கேட்டாராம் கடன் கொடுத்தவர். இல்லை. நான் தூக்கமில்லாமல் கஷ்டப்படுகிறேன். பணம் வராதென்று நீங்களும் தூக்கமில்லாமல் கஷ்டப்படவேண்டும் என்று நினைத்தேன். அதுதான் இப்பவே வந்து சொன்னேன் அப்படியென்றாராம். இப்படிப்பட்டவர்கள் தொடர்பு கிடைத்தால் சிக்கல்தான். இருக்கின்ற கொஞ்சநெஞ்ச நிம்மதியும் போய்விடும்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

# மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவேன்!

## விமல் வீரவன்ச சவால்

(கொழும்பு)



**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பொதுத்தேர்தலில் போட்டியிட வைத்து பிரதமராக்கிக் காட்டப் போவதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச சவால் விடுத்துள்ளார்.**

போலியான வாக்குறுதிகளை வழங்கி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களை தம்வசப்படுத்திக் கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால முனைவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச இந்தக் குற்றச்சாட்டை வெளிநாட்டு ஊடகம் ஒன்றுடன் இடம்பெற்ற செவ்வியின் போது சுமத்தியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ, பொதுத்தேர்தலில் போட்டியிடுவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தமையையும் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக பெயரிடப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இல்லையேல், மகிந்த ராஜபக்ஷவை மற்றும் ஒரு கட்சியில் போட்டியிட வைத்து பிரதமராக்கிக் காட்டப் போவதாக விமல் வீரவன்ச சவால் விடுத்துள்ளார். (இ-5)

# கொள்கை தோல்வி!

1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படையினரை இலங்கைக்கு அனுப்ப எடுக்கப்பட்ட தீர்மானம், உயர்மட்டத்தின் ஒரு கொள்கை தோல்வி என்று இந்திய இராஜாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளியுறவுத்துறையின் இராஜாங்க அமைச்சர் வி.கே.சிங் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவ தளபதியான வி.கே.சிங், புதுடில்லியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே இதனை தெரிவித்துள்ளார்.

அமைதி காப்பதற்காக சென்ற இந்திய இராணுவம் இறுதியில் யுத்தத்தில் ஈடுபடவேண்டியிருந்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைது செய்வதற்கு பல சந்தர்ப்பங்கள் இருந்தபோதும் சில கட்டளைகள் காரணமாக அவர் பாதுகாப்பாக செல்ல முடிந்தது என்றும் வி.கே. சிங் தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படையினருடனான போரின்போது அப்போதைய இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ, விடுதலைப் புலிகளுக்கு உதவியளித்தார் என்றும் சிங் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# நிதி மோசடியாளர்களை கைதுசெய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, அதனுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்படும் நபர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் விசாரணைகளின் பின்னர் குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு இதுவரை கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த முறைப்பாடுகளுக்கமைய, அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகள் சிலர், நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டு,வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 19ம் திருத்தச்சட்டத்தை ஏற்றுக்கொள்கிறேன்

## சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்நீதிமன்றத்தின் சட்டவிளக்கத்தின் கீழ் 19வது அரசியல் அமைப்பின் சரத்துக்கள் சில அகற்றப்பட்ட நிலையில் அதனை ஏற்றுக்கொள்வதாக சமூகநீதி அமைப்பின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டும் என்ற விடயத்தில் தாம் கடுமையாக பாடுபட்டதாக குறிப்பிட்டுள்ள அவர், எனினும் தற்போது சாதகமான நிலை ஏற்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார்.

உள்ளூர் ஊடகம் ஒன்றிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னரும் தாம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக சோபித தேரர் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மன்மத" வருட இராசி பலன்கள்



**ஜென்ம குரு மாறியதும் செயல்களில் வெற்றிதான்!**

**காரிய வெற்றிக்கு கைகொடுத்து உதவுபவர்கள் யார் யார் என்பதை தெரிந்து வைத்திருக்கும் கடக இராசி நேயர்களே!**




**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## ஜென்ம குரு மாறியதும் செயல்களில் வெற்றிதான்!

உங்களுக்கு இந்த ஆண்டு உச்ச குருவின் ஆதிக்கத்தோடும், குரு சந்திர யோகத்தோடும் பிறக்கிறது. பிறந்த இரண்டு நாட்களிலேயே குருவின் வக்ர இயக்கம் மாறி மிகுந்த பலம் பெறுகிறார். 9இற்கு அதிபதியான குரு உச்சம் பெற்று உங்கள் ராசிநாதனான சந்திரனை பார்க்கும் விதத்தில் வருடம் தொடங்குவதால் வளர்ச்சியின் உச்சத்துக்கு செல்லப் போகிறீர்கள்.

தளர்ச்சி அகன்று, தட்டுப்பாடுகள் விலகப் போகிறது. சப்தம அஷடமாதிபதியான சனிபகவானோ வக்ரம் பெற்று கன்னி ராகுவால் பார்க்கப்படுகிறார். எனவே, பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புகளும், பதவிகளும் வந்து புகழேணியின் உச்சிக்கு கொண்டு செல்லப் போகின்றது.

நட்பு வட்டத்தைப் பெருக்கிக் கொள்ளப் பிரியப்படுபவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்கள் நீங்கள். சூழும் பகையால் அஞ்சமாட்டீர்கள். உங்களை நம்பி ஒரு பொறுப்பை ஒப்படைத்தால் அதை முடித்துக் கொடுக்காமல் வீடு திரும்பமாட்டீர்கள். சொந்த வேலையை விட்டு விட்டு வந்த வேலையைக் கவனிப்பதில் உங்களுக்கு ஆர்வம் அதிகம்.

**குருச்சந்திர யோகத்தால் கூடுதல் நற்பலன்!**

ஆண்டின் தொடக்க நாளில் உலாவரும் கிரகங்களின் ஆதிக்கம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். வேண்டிய நற்பலன்கள் கிடைக்கவும், வியக்கும் விதத்தில் வாழ்க்கை அமையவும் நவக்கிரகங்களின் சஞ்சார நிலை நமக்கு ஒத்துழைக்க வேணடும்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது யோகம் செய்யும் செவ்வாய் தனாதிபதி சூரியனுடன், சகாய ஸ்தானாதிபதி புதனுடனும் இணைந்து தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். இந்தப் புத்தாண்டில் தொழில் வளம் மேலோங்கப் போகிறது.

உறவுகளுக்குள் இருந்த விரிசல்கள் விலகும். இரவு பகலாகப் பாடுபட்டதற்கேற்ற பலன்கள் இப்பொழுது வந்து சேரப் போகின்றது. புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழப் போகிறீர்கள். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். சகோதரர்களால் சகாயம் கிடைக்கும்.

உங்கள் ராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். களத்திர ஸ்தானத்திற்கும், ஆயுள் ஸ்தானத்திற்கும் உள்ள பொறுப்பு சனிக்குரியது. அவர் வருடத தொடக்கத்தில் மட்டும் வக்ரமல்ல. வருடம் முழுவதும் வக்ரத்திலும், வக்ர நிவர்த்தியிலும் பெரும்பான்மை நேரத்தில் சஞ்சரிக்கின்றார். அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். வியாபார நுணுக்கங்களை அறிந்தவர்கள் உங்களுக்கு உதவியாக இருப்பர்.

அதே நேரத்தில் சப்தமாதிபதியாகவும் சனி விளங்குவதால் குடும்ப பிரச்சினைகள் தலைதூக்கும். குடும்பப் பெரியவர்களை கலந்து ஆலோசித்து செய்யும் நிகழ்ச்சிகளில் குழப்பங்கள் ஏற்படாது.

ராகு-கேதுக்களின் ஆதிக்கத்தைப் பொறுத்தவரை மூன்று, ஒன்பது ஆகிய இடங்களில் சஞ்சரிக்கிறார்கள். மூன்றாமிடத்து ராகு முன்னேற்றத்தைக் கொடுக்கும் என்றாலும், 9 ஆம் இடத்து கேது உன்னத வாழ்க்கையை வழங்கும் என்பதற்கு உத்திரவாதம் கொடுக்க இயலாது. மற்ற சகோதரர்களிடம் பெற்றோர்கள் பாசம் காட்டுகிறார்களே என்று மனம் வாடலாம்.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

வருடத் தொடக்கத்தில் உங்கள் ராசியில் சஞ்சரித்தபடியே 5, 7, 9 ஆகிய இடங்களை குரு பார்க்கிறார். எனவே பஞ்சம ஸதானம், சப்தம ஸ்தானம், ஒன்பதாமிடம் ஆகியவை் புனித மடைகின்றன. 5 ஆம் பார்வையால் சப்தமாதிபதியை குரு பார்ப்பதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். குடும்பத்தில் காலை நேரத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும், மாலை நேரத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோடும். வாழ்வை வளப்படுத்துவது குரு வழிபாடுதான்.

அப்படிப்பட்ட குரு பகவான் உங்கள் ராசிக்கு 6, 9 இற்கு அதிபதியாகிறார். உத்தியோகத்தை, வழங்குவதற்கும் அவர் அருள் தேவை. ஊர் மாற்றம், இடமாற்றங்களை வரவழைத்துக் கொள்வதற்கும் அவரது பலம் தேவை. எனவே, குருபகவானுக்கு முல்லைப் பூ மாலை அணிவித்து, மஞ்சள் வஸ்திரத்தோடு, குருவை வழிபட்டால் வஞ்சகர்கள் விலகுவர். வசதிகள் பெருகும்.

**இரண்டாமிடத்து குரு இனிமை தருமா?**

இதுவரை உங்கள் ராசியிலேயே ஜென்ம குருவாக சஞ்சரித்து வந்த குருபகவான் ஆனி மாதம் 20 ஆம் திகதி முதல் தன ஸ்தானம் எனப்படும் 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்து கொண்டு அதன் அருட்பார்வையை 6, 8, 10 ஆகிய மூன்று இடங்களிலும் செலுத்துகிறார். எனவே, வாழ்வில் எண்ணற்ற மாற்றங்கள் வரப்போகின்றது. வருமானப் பற்றாக்குறையும் அகலப் போகின்றது.

**ஆறினைக் குருதான் பார்த்தால் ஆதரவு கரங்கள் கூடும்!**
**எட்டினை குருதான் பார்த்தால் இழப்புகள் ஈடு செய்யும்!**
**பத்தினை குருதான் பார்த்தால் பதவியும், தொழிலும் வாய்க்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

எனவே, ஆறாமிடத்தைப் பார்க்கும் குருவால் பகை நட்பாகும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். உத்தியோக முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளுக்கும் வேலை கிடைத்து உதிரி வருமானங்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். வாழ்க்கைத் துணைக்கும் வேலை கிடைத்து வருமானம் மூன்று மடங்காக உயரும்.

அஷ்டம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். பத்தாமிடத்தைக் குரு பார்ப்பதால் தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுப்பர்.

**நலம் தருமா ராகு-கேது பெயர்ச்சி!**

மார்கழி மாதம் 23 ஆம் திகதி 8.1.2016 அன்று சிம்ம ராசியில் ராகு சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரத்தில் கும்ப ராசியில் கேது சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு இதுவரை 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு முயற்சித்த காரியங்களில் தாமதங்களை உருவாக்கியிருக்கலாம். இப்பொழுது இரண்டாமிடத்தில் சஞ்சரித்து இல்லத்தில் நல்ல சம்பவம் நடைபெற வழிவகுக்கப் போகின்றது. இடம் வாங்கி மனை கட்ட வேண்டும் அல்லது கட்டிய மனையாக வாங்க வேண்டுமென்று திட்டமிட்டவர்களின கனவு நனவாகும்.

பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும் இந்த ராகு பெயர்ச்சி உங்களுக்கு நன்மையை வழங்கும். ஆனால் அதே நேரத்தில் 8 ஆம் இடத்தில் அல்லவா கேது சஞ்ச ரிக்கின்றார். எனவே, திட்டமிட்டுச் செலவு செய்வதோடு மட்டுமல்லாமல் திட்டமிடாமலும் செலவு வந்துகொண்டே இருக்கும்.

**சனியின் சஞ்சார நிலை!**

சனி பகவான் வருடத் தொடக்கத்திலேயே வக்ர இயக்கத்தில்தான் இருக்கிறார். 12.6.2015 முதல் துலாம் ராசியில் வக்ரமடைகிறார். 20.7. 2015 இல் வக்ர நிவர்த்தியாகிறார். பிறகு 5.9.2015 இல் விருச்சிக ராசியில் வக்ர நிவர்த்தியடைகிறார். பிறகு 26.3. 2016 இல் மீண்டும் விருச்சிக ராசியில் சனி வக்ரமடைகிறார். இக்காலத்தில் உங்களுக்கு நன்மையும், தீமையும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

தேவையில்லாத வீண் செலவுகள் அதிகரிக்கும். விரயங்களைச் சமாளிக்க முடியாமல் சில சமயங்களில் தடுமாற்றங்கள் ஏற்படும். சிலருக்கு நன்மை செய்யப் போய் அது தீமையில் முடியலாம். நாடு மாற்றம், வீடு மாற்றம், வாகன மாற்றம், உத்தியோக மாற்றம் போன்ற வற்றிற்கு ஆட்பட நேரிடும்.

எந்த மாற்றம் வந்தாலும் ஏமாற்றத்தைச் சந்திக்க மாட்டீர்கள். வந்த மாற்றத்தை நல்ல மாற்றமாக மாற்றிக் கொள்ள வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள்.

**குருவின் வக்ர காலம்!**

குரு 20.12.2015 இல் கன்னி ராசியில் அதிசா ரம் பெறும் பொழுதும், 7.2.2016 இல் சிம்ம ராசிக்குள் வக்ரம் பெறும் பொழுதும் ஓரளவு நற் பலன்களை வழங்கும். என்றாலும் 9 ஆம் இடத்திற்கு அதிபதியாக குரு விளங்குவதால் தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

உத்தியோகத்தில் உடனிருப்பவர்களின் அனுசரிப்பு குறையும். மேலதிகாரிகளின் பகை வளர்வதை முன்னிட்டு நீண்ட தூரப் பயணங்களை ஒரு சிலர் மேற்கொள்வர். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும். இதுபோன்ற காலங்களில் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!**



ராசிநாதன் சந்திரனைப் பலப்படுத்த திங்கள் தோறும் அம்பிகையை வழிபாடு செய்யுங்கள். வியாழன் தோறும் குரு பகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு, தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளையும் செய்தால் அமைதியும் ஆனந்தமும் கிடைக்கும். சனி வக்ர காலத்தில் ஆதியந்தப் பிரபுவை வழிபடுவது ஆனந்தம் தரும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

கடக ராசியில் பிறந்த பெண்களே, காரிய வெற்றி ஏற்படும். கடன் சுமை குறையும். நிழல் போல தொடர்ந்த துயரங்கள் விலகி, நிலையான அமைதி கிடைக்கும்.

குரு பார்வையால் கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் அகலும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு பண வரவு திருப்தி கரமாக இருக்கும். தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட் களைத் தாராளமாக வாங்கி மகிழ்வீர்கள்.

ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக விரயங்கள் அதிகரிக்கும். எனவே மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழி பிறக்கும். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பொதுநலம், மற்றும் பதவியில் இருப்ப வர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும்.

மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். பௌர்ணமி வழிபாடு பலன் தரும்.

நாளை சிம்மம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியக் கடற் பகுதியில் படகு கவிழ்ந்து விபத்து

**(ரோம்)**

**லிபிய கடற்பகுதியில் நேற்று முன்தினம் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 400 இற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தோர் உயிரிழந்துள்ளனர் என்று சம்பவத்தில் உயிர் பிழைத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.**


லிபியாவில் தொடர்ந்து வன்முறை மற்றும் குழப்பமான நிலைமை நீடிப்பதன் காரணமாக அங்கியிருந்து மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக குடிபெயர்ந்து வருகின்றனர்.

கடல் வழியாக படகில் அவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்யும் போது விபத்துக்குள் சிக்குவது வழக்கமாகவே உள்ளது.

தற்போது அதுபோன்று கோரச் சம்பவம் அரங்கேறி உள்ளது. லிபியாவில் இருந்து 500 இற்கும் மேற்பட்டோர் பெரிய படகில் இத்தாலிக்குச் சென்றுள்ளனர்.

லிபியாவில் இருந்து புறப்பட்ட அவர்களது படகு சுமார் 24 மணி நேரங்களில் கடலில் விபத்துக்குள் சிக்கி படகு மூழ்கியது.

இதுதொடர்பாக தகவல் அறிந்த இத்தாலி கடற்படையினர் அவர்களை மீட்பதற்கான பணியில் தீவிரம் காட்டினர். முன்னதாக இத்தாலிய கடற்படையினர் பேசுகையில், விபத்துக்குள் சிக்கிய படகில் இருந்து சுமார் 144 பேரை மீட்டுள்ளோம், சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தனர்.



## 400 பேர் உயிரிழப்பு

சர்வதேச குடிபெயர்ந்தோர்களுக்கான அமைப்பு தெரிவித்து உள்ள தகவலில், இத்தாலியின் தெற்கு பகுதியில் உள்ள ரெக்கியோ காலபெரியா நகருக்கு சிறுவர்கள் உட்பட சுமார் 144 பேர் வந்து இறங்கினர் என்று தெரிவிககப்பட்டுள்ளது. அமைப்பின செய்தியாளர் பிளா வியோடி ஜியாகோமோ பேசுகையில்,

எங்களுடைய அமைப்பு உயிர் பிழைத்தோர்களிடம் சம்பவம் தொடர்பான விபரங்களை கேட்டு அறிந்தது. அவர்கள்படகில்சுமார்500 முதல 550 பேர் வரையில் பயணம் செய்தனர் என்று தெரிவித்துள்ளனர்.

எப்படி படகு விபத்துக்குள் சிக்கியது என்பதை தெரிந்துக்கொள்ள தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகிறோம். இத்தாலி மீட்பு குழுவினர் பார்த்ததும் வேகமாக சென்றதன் காரணமாக படகு விபத்துக்குள் சிக்கியிருக்கலாம் என்று தெரிவித்துள்ளார். இந்த 2015 ஆம் ஆண்டில் மட்டும் இதுவரையில் சுமார் 15 ஆயிரம் பேர் இத்தாலிக்கு வந்து உள்ள னர் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லிபியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு மக்கள் புலம்பெயர்வது, அவர்களுக்கு உதவி செய்ப வர்களுக்கு பெரும் இலாபகரமாக அமைந்துள்ளது. படகில்அவர்கள்எல்லையை கடக்க சுமார் 500 முதல் ஆயிரம் வரையிலான அமெரிக்க டொலர்கள் பணம் பெறப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## புத்தாண்டு கொண்டாட்டத்தால் தாய்லாந்தில் 121 பேர் மரணம்

தாய்லாந்தில் புத்தாண்டு கொணடாட்டத்தில் 121 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 1281 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது

தாய்லாந்தில் ஏப்ரல் 13 முதல் 15 ஆம் திகதி வரை மூன்று நாட்களுக்கு புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. சங்கிரான் என்றழைக்கப்படும் இந்த புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஒருவர் மீது ஒருவர் தண்ணீரைப் பீய்ச்சியடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர்.

தலைநகர் பாங்கொக் மற்றும் வடக்குப் பகுதியின் பெரிய நகரான சியாங்மய் ஆகிய பகுதிகளில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு புத்தாண்டை மிகப் பெரிய விழாவாக நடத்துகின்றனர். இந்த புத்தாண்டு கொண்டாட்டத்தில் அசம்பாவித சமபவங்கள் அதிகம் நேரிட்டுள்ளன.

போதையில் வாகனம் ஓட்டியது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அந்த நாடு முழுவதும் 121 பேர் உயிரிழந்துள்ளனர். 1281 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். நாட்டின் சில பகுதிகளில் புத்தாண்டு கொண்டாட்டம் இன்னமும் தொடர்கிறது. அங்கு அசம்பாவி தங்களைத் தடுக்க கூடுதல் பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-5)



**பிரபல ஜேம்ஸ் பாண்ட் பட நடிகர் டேனியல் கிரெய்க் அண்மையில் ஐ.நாவுக்கான மிதிவெடி மற்றும் வெடிபொருட்களுக்கு எதிரான செயற்றிட்டத்திற்கு ஆதரவு திரட்டுவதற்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

## யூடியூப்பை கலக்கும் விவசாயப் பாட்டு!

யூடியூப்பில் புதிதாக ஹிட்டாகி இருக்கிறது புதிய விவசாயப்பாட்டு வீடியோ.

வழக்கமான ஹிட் வீடியோக்கள் போலவே இதிலும் பாட்டும் உண்டு ஆட்டமும்இருக்கிறது. ஆனால் இந்த பொழுதுபோக்கு அமசங்களுக்காக மட்டும் இந்த பாட்டு ஹிட்டாகவில்லை. அதன் பின்னே இருக் கும் விவசாயிகளுக்கு ஆதரவான செய்திக்காக இந்த பாட்டு கவனத்தை ஈர்த்து வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த யூடியூப் பாடல் வீடியோவை நோர்வே நாட்டைச்சேர்ந்த கல்லூரி மாணவிகள் சிலர் உருவாக்கி இருக்கின்றனர்.

இந்த மாணவிகள் இசைக்குழு ஒன்றையும் நடத்தி வருபவர்கள். இந்த குழு சார்பாகத்தான், நோர்வேக்கு விவசாயிகள் தேவை எனும பெயரிலான இந்த வீடியோவை உருவாக்கியுள்ளனர்.

பச்சை நிற ஆடை அணிந்த படி காட்சி தரும் இந்த பெண்கள் உழவு இயந்திரம் ஓட்டியபடி, மாடுகளை மேய்த்தபடி இந்த வீடியோவில் காட்சி அளிக்கின்றனர். (இ-5)



## விமானத்தால் பெரும் பரபரப்பு

ஜப்பானில் ஓடுபாதையை விட்டு விலகி விமானம் பயணித்ததால் ஏற்ப்பட்ட விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 20 பயணிகள் காயம் அடைந்தனர். தென் கொரியாவில் இருந்து ஜப்பானின் ஹிரோசோமா நகருக்கு சென்றது ஆசியானா நிறுவனத்தின் ஏர்பஸ் ஏ320 விமா னம். ஹிரோசோமா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் போது ஓடுபாதையை தாண்டி சென்றதால் பயங்கர விபத்து ஏற்பட்டது. பயணிகள் மற்றும் 8 பணியாளர்கள் உட்பட அனைவரும் விமானத்தின் அவசர வழி மூலம் வெளியேறினார்கள். ஆனால 20 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்ததாக அங்குள்ள செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)




## நடப்பாண்டுக்குள் ரஷ்ய ஏவுகணைகள்

### ஈரான் நம்பிக்கை

ஈரானுடன் ஆயுத வர்த்தகத்துக்கு விதித்திருந்த தடையை ரஷ்யா விலக்கிக் கொண்டதையடுத்து, ரஷ்யாவின் அதி நவீன ஏவுகணைகள் இந்த ஆண்டுக்குள் தங்களுக்கு அனுப்பப்படலாம் என ஈரான நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் தேசியப் பாதுகாப்புக் கவுன்சில் செயலர் அலி ஷாம்கனி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கூறுகையில், இந்த ஆண்டுக்குள் ரஷ்யாவின் வான் பாதுகாப்பு ஏவுகணைகள் ஈரானுக்கு அனுப்பப்படக் கூடும் என்றார்.

ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடந்த திங்கட்கிழமை விலக்கினார்.

ஈரானுக்கு விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டிருந்த அதிநவீன ஏவுகணைகளை, அந்த நாட்டுக்கு அளிக்கவிருப்பதாக அவர் அறிவித்தார்.

இந்தப் பாதுகாப்பு ஏவுகணைகளைக் கொண்டு, ஈரானின் வான் பகுதிக்குள் நுழையும் எதிரிகளின் ஏவுகணைகளையும், விமானங்களையும் எதிர்த் தாக்குதல் நிகழ்த்தி அழிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி அகதி முகாமில் இலங்கை அகதி பலி!

(சிட்னி)

**அவுஸ்திரேலியா கிறிஸ்மஸ் தீவில காணப்படும் கர்ட்டின் அகதி முகாமில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதி ஒருவர் மாரடைப்பின் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார்.**

50 வயதுடைய இராமைய்யா மகேந்திரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் கடந்த 2013ஆம் ஆண்டு மே மாதம் படகு பயணத்தின் மூலம் புகலிடம் கோரி அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைந்தார்.

இதனையடுத்து அவர் தொடர்ந்து கொக்கோஸ் தீவில் தங்க வைக்கப்பட்டதன் பின்னர் கிறிஸ்மஸ் தீவிற்கு மாற்றப்பட்டு கர்ட்டின் தீவில் தங்க வைக்கப்பட்டார்.

இந்நிலையில் மாரடைப்பு ஏற்பட்டதன் காரணமாக அவர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது உயிரிழந்துள்ளார்.

எனினும் அவுஸ்திரேலியாவிற்கு சென்றது முதல் இராமைய்யாவுக்கு சரியான முறையிலேயே வைத்திய சேவைகள் வழங்கப்பட்டு வந்துள்ளதாக சடலத்தை பரிசோதனை செய்த அதிகாரி ரொஸ் பொக்லியானி தெரிவித்துள்ளார். (இ-5)

# நடிகைகளுடன் தொடர்பில்லை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மறுப்பு

பிரபல போதை பொருள் வியாபாரி சமந்த குமார எனப்படும் வெலே சுதாவிற்கும் பிரபல நடிகைகளுக்கும் தொடர்புள்ளதாக வெளிவரும் செய்திகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை என பொலிஸ ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ் அத்தியட்சகருமான ருவண் குணசேகர மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அவரை மேற்கோள்காட்டி சிங்கள நாளிதழ் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

வெலே சுதாவிற்கும் இலங்கையிலுள்ள பிரபல நடிகைகள் அறுவருக்கும், கிரிக்கெட் வீரர்களுக்கும் இடையில் தொடர்பு காணப்படுவதாக அண்மையில் ஊடகங்களில் பரவலா்க பேசப்பட்டு வந்தன.

ஊடகங்களில் வெளியாகியுள்ள இச்செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக் காட்டியுள்ளார்,

அத்துடன் வெலேசுதாவுடன் நடிகைகளுக்கு இது மாதிரியான எந்த தொடர்புகளும் இல்லை எனவும் மேலும் தெரிவித்தார். (இ)

# விபத்துக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 419ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

புத்தாண்டு காலத்தில் விபத்துக்குள்ளான 419 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டுள்ளனர். கடந்த 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் இவ்வாறு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டுள்ளனர் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். இவர்களில் 172 பேர் வார்டுகளில் தங்கி சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளனர். எனினும் பட்டாசு கொளுத்துவதன் மூலம் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு வெகுவாக குறைந்துள்ளது. (இ-5)

# சுகமான உணர்வுகளைத் தோற்றுவிக்கும் இரசாயனப் பதார்த்தங்களை அறிவோம்

கடந்த 13.04.2015 அன்று வலம்புரி பத்திரிகையில் வெளியான "இன்று ஒரு தகவல்" வாசித்தேன்.


"உதவியால் வரும் சுகம்" பற்றி மிகவும் அற்புதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை எம்மிடையே குறைந்துவரும் இக்காலப் பகுதியில் மிகவும் தேவையான ஒரு விடயம் பற்றி பேசப்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பாக "YouTube" இலே பார்த்த ஒரு விடயத்தினை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளலாம் என நினைக்கிறேன்.

எமது மனதிலே தோன்றும் சுகமான உணர்வுகள் பின்வரும் இரசாயனப் பதார்த்தங்களால் ஏற்படுகின்றன.

1. என்டோபின் (Endorphin)
2. டோப்பமீன் (Dopamine)
3. செறற்ரோனின் (Serotonin)
4. ஒக்சிரோசின் (Oxytocin)

ஒவ்வொன்றாகப் பார்ப்போம். முதலிருவகை இரசாயனங்களும் எம்மாலேயே எம்முள் உருவாகுபவை. நாங்களே அவற்றிற்குப் பொறுப்பானவர்கள். ஏனைய இருவகையும் மற்றவர்களுடனான தொடர்பாடல் மூலம் உருவாகுபவை.

### என்டோபின் (Endorphin)



கடுமையான தசை இயக்கத்தின்பின், நோ தெரியாமலிருப்பதற்காக உருவாவதே இவ்விரசாயனப் பதார்த்தமாகும். கடுமையான உடற்பயிற்சியின் பின்னோ, வயிறு குலுங்கச் சிரிக்கின்ற போதோ, உருவாகும் இவ்விரசாயனப் பதார்த்தம், ஒரு சுகமான உணர்வை ஏற்படுத்தும். அதன் சுகத்தை உணர்ந்தவர்களே தம்மையறியாது காலை ஆட்டிக்கொண்டிருப்பார்கள், அப்பொழுது அதிக எண்டோபின் (Endorphin) உருவாகும். சுகமான உரு உணர்வு ஏற்படும்.

### டோப்பமீன் (Dopamine)



ஒரு இலக்கை அடைந்ததும் உருவாகும் இரசாயனம் இதுவாகும். "யெஸ்"(Yes) என மனதைத்துள்ளிக் குதிக்க வைப்பது. வாழ்க்கையில் முன்னேறுவதற்கு தேவையான உள்ளக ஊக்கியாகத் (internal rewarding) தொழிற்படுவது.


அதேவேளை எம்மை அடிமைகளாக்கக் கூடியதும் இதுவே. சரியான முறையில் கையாளாவிடின் எம்மை அடிமைத்தனத்திற்கு (dependency) இட்டுச் செல்லும்.

வேலையே கதியெனக்கிடப்பவர்கள் (workaholics), மது, போதைவஸ்து மற்றும் புகைத்தலுக்கு அடிமையானவர்களும் இவ்விரசாயனப் பதார்த்தத்தால் கிடைக்கும் மன சுகத்தில் சுகம் கண்டவர்களே.

ஏன் இனிப்புக்கு அடிமையானவர்கள் கூட எம்மில் உள்ளனர்.

ஒவ்வொருமுறையும் சிறிது சிறிதாக "டோப்பமீன்" கூடினாலேயே சுகம் கிடைக்கும் என்பதால் மதுவோ ஏனைய போதைப் பொருட்களோ, ஏன் இனிப்போ அதிகமாகவே தேவைப்படும்.

### செறற்ரோனின் (Serotonin)



பாராட்டப்படும்போது, பதவிகள், பெருமைகள் கிடைக்கின்றபோது உருவாகும் மகிழ்விற்குக் காரணம் இவ்விரசாயனப் பொருளே.

இது அதிகம் உருவாக உருவாக தன்னம்பிக்கை அதிகரிக்கும். இதற்காகவே பட்டமளிப்பு விழாக்கள், பரிசளிப்புவிழாக்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

அதேவேளை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெத்திய சின்னஞ் சிறுசுகளைக் கலாநிதி பட்டம் பெற்றதுபோல தொப்பி தரித்து மிகையாகப் புகழ்ந்து தள்ளுதல், அவர்களை வீணான தற்பெருமைகொள்ள வைப்பதோடு அவர்களுக்கு அவர்களது சரியான நிலையை உணரத்தவறச் செய்கின்றது.

இவ்விரசாயனப் பொருளின் சுரப்பிற்காகவே ஒவ்வொரு அரசியல்வாதியும் தவியாத் தவிக்கின்றனர், படாதபாடு படுகின்றனர்.

இன்னும் சிலரோ பகட்டுக்கு வாழ முயல்வதன் மூலம் இம்மன சுகத்தை அடைய முயல்கின்றனர்.

### ஒக்சிரோசின் (Oxytocin)



குழந்தை பிறக்கின்றபோது தாயில் மிக அதிகளவு உருவாவது இதுவே. தாய், பிள்ளை பாசப்பிணைப்பிற்குக் காரணமானதும் இதுவே. அதே போல நல்லுறவுகளைப் பேணுகின்றபோது உருவாகி மனத் திருப்தியையும் மனநிறைவையும் பூரணத்துவத்தையும் பாதுகாப்பு உணர்வினையும் தருகின்றது.

இதனாலேயே எப்போதுமே நண்பர்களுடன் இருக்க விரும்புகின்றோம். ஒருவருக்கு உதவிசெய்கின்றபோதோ, நல்ல காரியங்கள் செய்கின்றபோதோ இவ்விரசாயனப பொருள் அதிகமாகச் சுரக்கப்பட்டு, அச் சொற்ப வேளையிலாவது பூரணத்துவத்தை உணர்வோம்.

மேலும், இது அதிகமாகச் சுரந்தால் "டோப்பமீனால்" ஏற்படும் அடிமைத்தனத்திலிருந்து விடுபடலாம். ஆகவே, இதனைக் கருத்திற்கொண்டு நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ளல் மற்றும் சமூகசேவைபுரிதல் போன்ற காரியங்களைச் செய்வதன் மூலம், எம்மைச் சாதாரண மனிதத்தன்மையிலிருந்து மேலான தெயவீகத்தை உணரும் நிலைக்கு உயர்த்து வோமாக.

Dr.S.கண்ணதாசன்
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது காணியை விடுவித்துத் தரக் கோரி தமிழ்த்தாய் சாகும்வரை உண்ணாவிரதம்

## த.தே.ம.முன்னணி ஆதரவு

(மல்லாவி)

கிளிநொச்சி பரந்தனில் அமைந்துள்ள தனது 7 ஏக்கர் காணியை இராணுவம் அபகரித்து வைத்துள்ளது. அதனை விடுவித்து தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரி தனது காணியின் முன்பாக சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் 5 பிள்ளைகளின் தாயார் ஒருவர் ஈடுபட்டு வருகின்றார்.



பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் சிவில் பாதுகாப்பு பிரிவினரின் மக்




கள் தொடர்பு அலுவலகம் அமைந்துள்ள காணியையே விடுத்து தருமாறு வலியுறுத்தி அந்தத் தாயார் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போரட்டத்தில் நேற்று தொடக்கம் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

கனடாவிலிருந்து நாடு திரும்பிய 5 பிள்ளைகளின் தாயான இந்திரா யோகேந்திரன் (வயது-65) என்பவருக்கு சொந்தமான 7 ஏக்கர் காணியிலிருந்து இராணுவம் வெளியேற மறுத்த நிலையில் அதனைக் கண்டித்து காணியை மீள ஒப்படைக்க வலியுறுத்தி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்று காலை 6 மணியிலிருந்து ஈடுபட்டு வருகின்றார்.

குறித்த வயோதிபப் பெண்ணிற்கு சொந்தமான பரந்தன் சந்தியிலிருந்து புதுக்குடியிருப்பு செல்லும் வீதியில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 7 ஏக்கர் காணியிலேயே இராணுவ படைமுகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்திரா தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழலையடுத்து கிளிநொச்சியில் தமக்கு சொந்தமான 7 ஏக்கர் காணியில் வீடு கட்டி வாழ்வதறகு நாடு திரும்பியுள்ள நிலையில் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டால் அங்கு இராணுவ முகாம் கட்டப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.


இதனையடுத்து குறித்த இராணுவ அதிகாரிகளிடம் சொந்தக் காணிக்கான ஆவணங்களைக் காட்டியபோதிலும் அவர்கள் காணியிலிருந்து வெளியேற மறுத்துள்ளனர்.


சொந்தமாக வேறு காணிகள் இல்லாமையால் இருப்பதற்கு கூட இடமில்லாத நிலையினை உணர்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த போராட்டத்திற்கு உடனடியாக விரைந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் குறித்த வயோதிபப் பெண்ணுடன் கலந்துரையாடியதுடன் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# கழிவுப் பொருட்கள் அகற்றப்படாமையால் துர்நாற்றம்

## நாச்சிக்குடா பொதுச்சந்தை வர்த்தகர்கள் குற்றச்சாட்டு





(மல்லாவி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆளுகைக்குட்பட்ட பூநகரி பிரதேச சபையின் கீழுள்ள நாச்சிக்குடா பொதுச்சந்தையினுள் தினமும் சேருகின்ற கழிவுப் பொருட்கள் அகற்றாமையால் துர்நாற்றம் வீசுவதாகவும் சந்தையின் உள்ளகப் பகுதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் மழைகாலங்களில் வெள்ளநீர் தேங்கி நின்றி பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் இப்பிரதேச சபைக்குட்பட்ட மக்களும் வர்த்தகர்களும் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பில் தெரியவருவதாவது,

இச்சந்தையில் தினசரி நூற்றுக் கணக்கான மக்கள், வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் எனப் பலதரப்பினர் வருகை தந்து பொருட்களை கொள்வனவு மற்றும் விற்பனை செய்து வருகின்றனர்.

இதேவேளை சந்தையின் வளாகப் பகுதியில் பல்வேறுபட்ட கழிவுப் பொருட்கள் தினசரி கொட்டப்படுவதால் அவற்றை அகற்றுவதற்கு பிரதேச சபையின் கழிவகற்றல் பிரிவினர் அக்கறையின்றி செயற்படுவதாக வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கழிவகற்றல் தொடர்பாக சந்தை வளாக வர்த்தகர்கள் பிரதேச சபையினரிடம் தொடர்புகொண்டு அறிவித்தபோதும் அதனை அகற்றுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையெக் கூறுகின்றனர்.

அத்துடன் சந்தை வளாகப் பகுதியினுள் காணப்படும் குன்றும் குழிகளையும் கிரவல் மண் இட்டு நிரப்புமாறு பலதடவைகள் கூறியபோதும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

எனவே உரியதரப்பினர் இவ்விடயத்தை கவனத்திற்கொண்டு கூடிய விரைவில் நிவர்த்தி செய்து தருமாறு பாதிக்கப்பட்ட மக்களும் வர்த்தகர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்துக்கு பாண்ட் வாத்திய கருவிகள் வழங்கிவைப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியக்கருவிகள், நூலகத்திற்கான புத்தகங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு 2014ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் மூலம் இவை வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை,திருமதி மேரிகமலா குணசீலன் ஆகியோரின் நிதியொதுக்கீட்டிலிருந்து பாண்ட் வாத்தியக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் நிதியொதுக்கீட்டிலிருந்து நூலகத்திற்கான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் கடந்த முதலாம் திகதி வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை உரையாற்றுகையில்,

பாண்டியன்குளம் மூத்த கிராமங்களில் ஒன்று,மண்ணுக்கான போராட்ட வரலாற்றிலும் அளப்பரிய அர்ப்பணிப்புக்களை செய்திருக்கின்றது. பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்துக்கும் மிக நீண்ட வரலாற்று பதிவு இருக்கின்றது.


முல்லைத்தீவு நகரில் இருந்து மிகதொலைவில் இருப்பதால்பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் சற்றுபின்னடைவுகளை இந்த கிராமங்களும் கிராமத்தின் ஏனைய கட்டமைப்புக்களும் சந்தித்திருக்கின்றன.

இருப்பினும் கடந்த தேர்தல் களில் இங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேசசபை நிர்வாகங்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் இருக்கின்ற காரணத்தால் இந்த பிர தேசங்களை நோக்கி அபிவிருத்திகளும் எட்டிப்பார்க்கின்றன.

இந்நிலையில் இத்தகைய சந்தர்ப்பங்களை பயன்படுத்தி இங்கிருக்கின்ற மூத்த பாடசாலைகள் மற்றும் பழம்பெரும் கிராமங்களின் கட்டுமானங்களை மேம்படுத்தி அவற்றை கட்டிக் காக்கவேண்டும் என தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதப் பட்டியலிலிருந்து கியூபாவை நீக்கியது அமெரிக்கா




கியூபாவை பயங்கரவாத நாடுகள் பட்டிய லில் இருந்து நீக்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்த அறிவித்தலை நேற்று முன்தினம் விடுத்து ள்ளார்.

கியூபாவிற்றும் அமெரிக்காவுக்கும் இடையில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக பகை நிலவி வந்தது.

எனினும் கடந்த வாரம் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெர்ரி, கியூப உயர் மட்டத் தலைவர்களை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

அதனை தொடர்ந்து அமெரிக்க ஜனா திபதி பராக் ஒபாமாவுக்கும் கியூப தலைவர் ராகுஸ் கெஸ்ரோவிற்கும் இடையிலான நேரடி சந்திப்பு இடம்பெற்றது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பினை அடுத்தே அமெரிக்க ஜனாதி பதியின் இந்த அறிவிப்பு வெளியாகியு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)




# அடக்குமுறையற்ற ஜனநாயக ரீதியான தலைவர் மைத்திரி

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வழி நடத்தக்கூடிய ஆற்றல் உண்டு எனவும் அடக்குமுறையற்ற ஜனநாயக ரீதியான தலைவராக மைத்திரிபால சிறிசேனவை அடையாளப்படுத்த முடி யும் எனவும் அமைச்சர் நந்திமித்ர ஏக்க நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிர்வாகம் செய்ய முடியவில்லை என செய்ய ப்படும் விமர்சனங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியவை அல்ல.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மிகவும் நுட்பமான முறை யில் அரசாங்கத்தை எவ்வாறு முன்னகர்த்த வேண்டும் என்ப தனை உணர்ந்து புரிந்து கொண்டு வழிநடத்துகின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் உறுப்பி னராக என்னை நியமித்துள்ளதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியா கியுள்ளன. எனினும் இதுவரை யில் எனக்கு இது குறித்து உத்தி யோகபூர்வமாக அறிவிப்பு எதுவும்



கிடைக்கவில்லை.

இதேவேளை மத்திய செயற் குழுவிலிருந்து ஐந்து உறுப்பினர் கள் நீக்கப்பட்ட செயலானது விரும் பத்தக்க செயலன்று. அந்த உறுப் பினர்கள் கட்சியின் முன்னேற் றத்திற்காக செயற்பட்டுள்ளனர் என வும் நந்திமித்ர ஏக்கநாயக்க சர்வ தேச ஊடகமொன்றுக்குத் தெரிவி த்துள்ளார். (இ-5)

## திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டங்களை தயாரிக்க சுற்றாடல் அதிகாரசபை நடவடிக்கை

திண்மக் கழிவுகளை அகற்றல் மற்றும் கழிவு முகாமைத்துவத்திற் கான செயற்றிட்டங்களை தயாரிப்ப தற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான ஆய்வுகள் களனி பல்கலைக்கழகத்திடம் ஒப்படை க்கப்பட்டுள்ளதாக அதிகார சபை யின் தலைவர் லால் தர்மபிரிய தெரிவித்தார்.

நாட்டிலுள்ள திண்மக் கழிவு கள் உரிய முறையில் முகாமை த்துவம் செய்யப்படாமையால், சூழலியல் ரீதியில் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

திண்மக் கழிவுகளை அகற்று வதில் பிரதேச சபை மற்றும் நகர சபை என்பன பாரிய பிரச்சினை களை எதிர்கொண்டுள்ளதாக மத் திய சுற்றாடல் அதிகார சபை குறிப் பிட்டுள்ளது.

இதனால் திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான செயற்றிட்டம் ஒன்றை விரைவில் தயாரிக்கவுள்ளதாகவும் அதிகார சபையின் தலைவர் மேலும் தெரி வித்தார். (இ-5)


## அமைச்சர் பதவியை பெற்றாலும் எங்களின் ஆதரவு மகிந்தவுக்கே

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முதுகுக்கு பின்னால் பதவி பெற்றுக்கொள்ளவில்லை. கட்சியை வலுவடைய செய்யும் நோக்கிலேயே பதவியை பெற்றுக் கொண்டேன் என அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரி வித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் பதவிபெற்றுக்கொண் டாலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எந்நேரமும் ஆதரவு வழங்க தயாராக இருப்ப தாகவும் அவர் சுட்டிக்காட்டியு



ள்ளார்.

அத்துடன் மகிந்தவை மீண் டும் அரசியலுக்கு கொண்டு வருவத ற்கான அனைத்து முயற்சிகளை யும் தீவிரமாக மேற்கொண்டு வருகிறேன் என மஹிந்த யாப்பா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைவேண்டி பிரார்த்தனை







மீள்குடியேற்றம்,புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மற்றும் இந்துசமய அலுவல்கள் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோளுக்கிணங்க சகல பிரதான கோயில்களிலும் நேற்றுக் காலை புத்தரிசிப் பொங்கல், சமய வழிபாடுகள் நடைபெற்று நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை நாடி பூஜை மற்றும் பிரார்த்தனைகள் இடம்பெற்றன. நேற்று ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலில் இடம்பெற்ற புத்தரிசிப் பொங்கல் நிகழ்வின் போது மீள்குடியேற்றம்,புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் எஸ்.அமிர்தலிங்கம் மற்றும் இந்துமத திணைக்களத்தின் பணிப்பாளர், ஊழியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி.
அதன் பின் நீ யாரோ! நான் யாரோ!
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ரணில் தலைமையை இழப்பார்; ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடையும்

நடைபெறப் போகும் பாரத யுத்தத்தில் யாருக்கு வெற்றி என வேதவியாசரிடம் வினவுகிறார் துரியோதனனின் தந்தை திருதராட்டிரன்.

இரண்டு கண்களையும் இழந்த நிலையில் திருதராட்டிரனின் கேள்வி மிகவும் வேதனை தரக் கூடியது.

தன் புத்திரர்களுக்கு ஆபத்து நடந்து விடுமோ! என்ற ஏக்கம் திருதராட்டிரனை கடுமையாகப் பாதித்ததன் காரணமாக அந்தக் கேள்வி எழுகிறது.

தர்மம் எங்குள்ளதோ! அங்கு வெற்றி உள்ளது என்கிறார் வியாசர். போரின் முடிவு என்னவாயிற்று என்பது நீங்கள் அறிந்ததே.

இலங்கை அரசியலிலும் திருதராட்டிரனின் நிலையில் சிலர் உள்ளனர். எனினும் இங்கு போர் வெற்றி யாருக்கு என்பதல்ல கேள்வி. இலங்கையின் அரசியலில் என்ன நடக்கும் என்பதே கேள்வி. இந்தக் கேள்வி தென்பகுதி அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்பங்களைச் சுட்டி நிற்கும். இப்படியான ஒரு கேள்விக்கு அளிக்கக்கூடிய பதில் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை இழக்க நேரிடும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக உடைவுறும் என்பதை மட்டுமே இப்போதைக்குச் சொல்ல முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கூட்டாட்சியை நடத்தினாலும் இக்கூட்டு மகிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து வெளியேற்றுவதற்காக ஏற்பட்டதே தவிர, வேறு எந்த நோக்கமும் கொண்டது அல்ல.

எந்த நோக்கத்திற்காக கூட்டாட்சி ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறியாயிற்று. நோக்கத்தை நிறைவேற்றுவதில் இரு தரப்புக்குப் பாரிய பங்கு உண்டு.

இதில் ஒன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. மற்றையது வல்லமை பொருந்திய சில நாடுகள்.

இரண்டும் இணைந்து மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்ப முடிவு செய்தன. அந்த முடிவு நிறைவு பெற்றுவிட்டது. எனினும் மகிந்த ராஜபக்ஷ மீது கொண்டிருந்த பகைமை எந்தளவோ அந்த அளவிற்கு ரணில் மீதும் சந்திரிகாவுக்குப் பகைமை இருந்தது.

எனினும் மகிந்தவை வீட்டுக்கு அனுப்புவதற்காக ரணிலின் பகைமையை ஒத்திவைத்தார் சந்திரிகா. இப்போது மகிந்த வீட்டிற்கு அனுப்பப்பட்டாயிற்று. அடுத்து ஸ்ரீமான் ரணில் விக்கிரமசிங்கவை வீட்டிற்கு அனுப்ப வேண்டும். அதற்கான ஒரே வழி பிரதமர் பதவியை சந்திரிகா எடுத்துக் கொள்வதுதான்.

சந்திரிகா பிரதமராகும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எங்கள் குடும்பத்தின் சொத்து என்பது போல சந்திரிகாவின் அணுகுமுறை அமையும். இவ்விடத்தில் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் மகிந்தவோடு சேர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய பிரிவு ஒன்றை ஆரம்பிப்பர்.

ஆக, தென் பகுதியில் இருக்கக் கூடிய இரு பிரதான அரசியல் கட்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ரணிலை நீக்குகின்ற வேலையை அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் செய்வர். அதேநேரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடையும்.

எதுவாயினும் மகிந்த; ரணில் ஆகியோரை வீட்டுக்கு அனுப்புவது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளவும் கைப்பற்றுவது என்ற சீமாட்டி சந்திரிகாவின் நோக்கு வெற்றி அடையும் வாய்ப்பு உண்டு என்பதை மட்டும் சமகால அரசியல் நிலையை வைத்துக் கூறமுடியும்.

# அங்கத்துவ கட்சிகள் அனைத்துக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்

## த.தே.கூட்டமைப்பு குறித்து சுரேஷ் எம்.பி கருத்து

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவது தொடர்பாக கட்சிகள் அனைத்திற்கும் சம அந்தஸ்தை நாம் கோரியிருக்கின்றோம். தனித்தொரு கட்சிக்கு பெரும்பான்மை கொடுப்பதை ஒத்துக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

அங்கத்துவக் கட்சிகளின் தலைமைகளுக்கிடையிலான சந்திப்பு நடத்தப்பட்டு அதில் எடுக்கப்படும் முடிவே இறுதியானது. மாவட்ட கட்சிக் கிளைகள் எடுக்கும் தீர்மானங்களை குறித்து நாங்கள் கவலையடையவில்லை.

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய கட்சிகள் இணைந்து தமிழரசு கட்சிக்கு இரு வரைபுகளை வழங்கியிருக்கின்றோம். அதில் அங்கத்துவக் கட்சிகள் அனைத்திற்கும் சம அந்தஸ்தை நாம் கோரியிருக்கின்றோம். எனவே தனித்தொரு கட்சிக்கு பெரும்பான்மை கொடுப்பதை ஒத்துக்கொள்ளோம்.

கூட்டமைப்பின் கட்சிகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழரசுக்கு பெரும்பான்மை அந்தஸ்து வழங்கப்படவுள்ளதாக வெளியான தகவல் குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் அவர் குறிப்பிடுகையில்,

தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டக் கிளைக் கூட்டத்தில் தமிழரசு கட்சிக்கு 51 வீதமும் மற்றய கட்சிகளுக்கு 49 வீதமும் என்ற அடிப்படையிலேயே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிந்திருக்கின்றோம்.

எனினும் நாம் தமிழரசு கட்சிக்கு, இரு வரைபுகளை வழங்கியிருக்கின்றோம். அதில் ஒரு வரைபு யாப்பு சம்பந்தமானது. மற்றைய வரைபு புரிந்துணர்வு ஒப்பந்தம் சம்பந்தமானது. இதில் புரிந்துணர்வு ஒப்பந்தம் சம்பந்தமான வரைபில் நாங்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் அனைத்திற்கும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

அதனை விடுத்து ஒரு கட்சிக்கு பெரும்பான்மை அந்தஸ்தை எடுத்துக் கொள்வதை நாங்கள் ஒத்துக் கொள்ளப் போவதில்லை என்பதுடன், இந்த விடயம் தொடர்பாக கட்சிகளின் தலைவர்கள் கூடி பேசவில்லை. அதற்கான பேச்சுவார்த்தை எதிர்வரும் 17-ம், 18-ம் திகதிகளிலேயே நடைபெற விருக்கின்றது.

எனவே அதற்கு முன்னதாக மாவட்டக் கிளைகளில் தீர்மானிக்கப்படும் விடயங்கள் தொடர்பாக நாங்கள் கவலையடையவில்லை. மேலும் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்வதற்கு தமிழரசுக் கட்சி முழுமையாக தனது மறுப்பினை தெரிவித்திருக்கின்றது.

இதற்கு மேலதிகமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பல கட்சிகளின் கூட்டமைப்பு என்னும் வகையில் ஒரு பொதுவான சின்னத்தில், தேர்தலை எதிர்கொள்வதற்கும் தமிழரசுக் கட்சி தனது மறுப்பினை தெரிவித்திருக்கின்றது. இந்நிலையிலேயே இறுதியான முடிவினை நாங்கள் 17-ம், 18-ம் திகதிகளில் நடைபெறும் பேச்சுவார்த்தை களின் பின்னதாகவே அறிவிக்க முடியும். அதற்கு முன்னதாக எந்தவொரு தீர்மானமும் இறுதியான தீர்மானமாக அமைய முடியாது என்றார். (செ-11)

## பனை உற்பத்தி கைத்தொழில் கிராமம் செல்வபுரம் கிராமத்தில் இன்று திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள செல்வபுரம் கிராமத்தில் பனை உற்பத்தி கைத்தொழில் கிராமம் ஒன்றை இன்று 16 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கே.விஜிந்தன் நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனை் சார்ந்த உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் பனை அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் 4.06 மில்லியன் ரூபாய் செலவில் முல்லைத்தீவு செல்வபுரம் கிராமத்தில் கைத்தொழில் கிராமத்தின் கட்டடத் திறப்பு விழா இன்று இடம் பெறவுள்ளது.

மேற்படி பயிற்சி கிராமத்தில் 100 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருவதுடன் தேர்வு செய்யப்பட்ட 50 பயிற்சியாளர்களுக்கு இன்று கைப்பணி உற்பத்திக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதோடு அவர்களுக்கான சந்தை வாய்ப்பும் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (இ-5)



## சத்திய தரிசனம்

### உழைத்துச் சம்பாதியுங்கள்

❖ மலர்ந்த தாமரையில் மணம் கமழ்வது போல, நல்லவர்களைச் சுற்றி நல்ல எண்ண அலைகள் பரவி இருக்கும்.

❖ அரை மனதுடன் முயற்சியில் ஈடுபடாதீர்கள். ஆர்வமில்லாத செயலால் நன்மை ஏற்படுவதில்லை.

❖ கடவுளுக்குப் படைத்த உணவைச் சாப்பிட்டால், உடல் ஆரோக்கியத்தோடு உள்ளமும் பலம் பெறும்.

❖ அரிதான இந்தப் பிறவியை, கடவுளை அறிவதற்காகப் பயன்படுத்துபவனே சிறந்த அறிவாளி.

❖ எதையும் இலவசமாகப் பெறக்கூடாது. உழைப்பினால் கிடைக்கும் சம்பாத்தியமே சிறந்தது.



## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத்தகவல்கள்

### அரச மரத்தை எந்த நேரத்தில் சுற்றலாம்?

அரச மரத்துக்கு அறிவை வளர்க்கும் சக்தி அதிகம். இதன் அடியில் அமர்ந்தாலேயே மனம் தெளிவடையும். இதன் அடியில் அமர்ந்து மந்திரங்களை ஜபம் செய்தாலோ, தெய்வ சம்பந்தமான ஸ்தோத்திரங்களை பாராயணம் செய்தாலோ, நிறைவான பலனை அடையலாம். அகிம்சையை போதித்த புத்தர், இந்த அரச (போதி) மரத்தடியில் அமர்ந்து, தவம் செய்துதான் ஞானியாக ஆனார். வ்ருக்ஷாணாமஹம் அஸ்வத்த: மரங்களுக்குள் நான் அரச மரமாக இருக்கிறேன் என்கிறார் கண்ணபிரான் கீதையில். மேலும், அரச மரத்தின் அடிப்பகுதியில் பிரம்மதேவனும், நடுப்பகுதியில் மஹாவிஷ்ணுவும், நுனிப்பகுதியில் பரமசிவனும் வாசம் செய்கிறார்கள். ஆகவேதான், மும்மூர்த்தி வடிவமான அரச மரத்தை பூஜைகள் செய்வதும், பிரதட்சணம் செய்வதும் வணங்குவதும், துன்பங்கள் ஏற்படுவதற்குக் காரணமான பாவங்களைப் போக்கி நல்ல அறிவையும் பெற்றுத்தரும் என்கிறது சாஸ்திரம்.

சூரியன் உதயமாகும் நேரம் முதல் காலை சுமார் 10.40 மணி வரையில், சூரியனின் கிரகணங்கள் அரச மரத்தில் விழுவதால், அப்போது அரசமரத்திலிருந்து வெளிவரும் காற்று நமக்கு, நமது உடலுக்கும் நன்மையைத் தரும். ஆகவே, காலை சுமார் 10.40 மணிக்குள் அரச மரத்தை பூஜைகள், பிரதட்சணம், நமஸ்காரம் போன்ற வழிபாடுகளைச் செய்ய வேண்டும் என்கிறது தர்மசாஸ்திரம். மற்ற நாட்களைவிட, சனிக்கிழமையன்று காலை நேரத்தில் அரச மரத்திலிருந்து வெளிவரும் சக்தி அதிகமாகக் காணப்படும் என்பதால் சனிக்கிழமைகளில், அரச மரத்தின் அடியில் சிறிது நேரம் அமர்ந்திருப்பதும், அரச மரத்தை வலம் வருவதும் மிகவும் நன்மையைத் தரும். குறிப்பாக, பல நாட்களாக குழந்தை பாக்கியமில்லாதவர்களின் (கர்ப்பப்பையில் ஏற்பட்ட) தோஷத்தைப் போக்கி குழந்தை பாக்கியத்தைத் தர, இந்த வழிபாடு மிகவும் சுலபமானது. கடுமையான-நாட்பட்ட, நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலை சுமார் 8.20 மணிக்குள், உடல் மற்றும் உள்ள சுத்தியுடன்- பக்தியுடன்- அரச மரத்தை 108, 54 அல்லது 12 முதற் பிரதட்சணம் செய்ய (வலம் வர) வேண்டும். அத்துடன் அரச மரத்தில் தனது உடலின் அனைத்து அங்கங்களும் படுமாறு, இரண்டு கைகளாலும் இறுக்கி அணைத்துக் கொள்ள வேண்டும். இதனால் தீராத நோய் தீரும். உடல் மற்றும் உள்ளம், வைரம்போல் நல்ல வலிமை பெறும். இது ஒரு சிறந்த பரிகாரமாகும். ஆனால், சனிக்கிழமையைத் தவிர, மற்ற நாட்களில் அரச மரத்தை பூஜைகள் பிரதக்ஷணம், நமஸ்காரம் செய்யலாமே தவிர, அரச மரத்தை கையால் தொடக்கூடாது. நடுப்பகல், மாலை, இரவு போன்ற நேரங்களைத் தவிர்த்து, காலை சுமார் 10.40 மணிக்கு முன்பாக, அரச மரத்தை பூஜைகள், பிரதக்ஷணம் போன்ற வகையில் வழிபாடு செய்வதே சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்துவீச்சு எடுபடாததால் தோல்வியடைந்தோம்

## ரோகித் சர்மா



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் 9 ஆவது 'லீக்' ஆட்டம் நடந்தது. இதில் முன்னாள் சம்பியன்களான மும்பை இந்தியன்ஸ்-ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய மும்பை அணி தொடக்கத்தில் தடுமாறியது. போலார்ட், அண்டர்சன் ஆட்டத்தால் 20 ஓவரில் 5 விக்கெட் 164 ஓட்டங்கள் எடுத்தது. இலக்கை நோக்கி விளையாடிய ராஜஸ்தான் அணி 19.1 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 165 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

அந்த அணி தொடர்ந்து 3 வெற்றிகளை பெற்றது. ஏற்கனவே பஞ்சாப், டில்லியை தோற்கடித்து இருந்தது.

மும்பை அணி தொடர்ந்து 3 ஆவது தோல்வியை அடைந்தது. கொல்கத்தா, பஞ்சாப் அணிகளிடம் தோற்று இருந்தது. இன்னும் வெற்றி கணக்கை தொடங்காமல் திணறி வருகிறது.

தோல்வி குறித்து மும்பை அணி கப்டன் ரோகித்சர்மா கூறியதாவது,

நாங்கள் பட்டிங்கில் சிறப்பாக தொடங்கவில்லை. மோசமான நிலையில் இருந்தோம். ஆனால் போலார்ட் - அண்டர்சன் ஜோடி ஆடடத்தை திருப்பி கொண்டு வந்தனர். 164 ஓட்டங்கள் என்பது நல்ல எண்ணிக்கைதான். ஆனால் நாங்கள் பந்துவீச்சில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

பட்டிங், பந்துவீச்சில் முன்னேற்றம் அடைவது அவசியம். இதற்காக கடும் பயிற்சி எடுக்க வேண்டும். காயம் அடைந்த ஆரோன் பிஞ்சுக்கு ஸ்கான் எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ராஜஸ்தான் கப்டன் ஸ்டீவன் சுமித் கூறுகையில், முதல் 10 ஓவரில் ஆட்டத்தை பொறுமையாக கையாள முடிவு செய்து அதை செயற்படுத்தினோம். நான் ஓட்டங்கள் குவிக்க எப்போதுமே சோர்ந்தது கிடையாது என்றார்.(க)

# தொடரில் தேவைப்படும் போது ஸ்ரெயினை பயன்படுத்துவோம்

## இப்போதைக்கில்லை-வோர்னர்

சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியில் இப்போதைக்கு ஸ்ரெயினுக்கு இடமில்லை என தெரிவித்து உள்ளார் அந்த அணியின் கப்டன் டேவிட் வோர்னர்.

உலகின் மிக சிறந்த வேகபந்து வீச்சாளர்களில் ஒருவரான டெயில் ஸ்டெயின் சன்ரைசர்ஸ் ஐதராபாத் ஐ.பி.எல். அணியில் உள்ளார். ஆனால் இதுவரை அந்த அணி விளையாடிய இரு போட்டிகளிலும் அவருக்கு இடம் கிடைக்கவில்லை. இது பலருக்கு ஆச்சிரியம் ஏற்படுத்தியது.

இதுபற்றி அந்த அணியின் கப்டன் டேவிட் வோர்னரிடம் கேட்கப்பட்டதற்கு அவர் "நீங்கள் ட்ரெண்ட போல்ட்யையும் பார்க்க வேண்டும். அவர் உலகக்கோப்பையில் மிச்சேல் ஸ்ராக்கிற்கு நிகராக மிக சிறப்பாக பந்து வீசியுள்ளார். மேலும் இந்தியாவில் உள்ள பிட்சுகள் அவ



ரின் பந்து வீச்சு முறைக்கு மிகவும் ஏற்றவை. தற்போதைய சூழ்நிலையில் ஸ்ரெயினை விட நல்ல போர்மில் உள்ளார்.

இந்த நீண்ட தொடரில் தேவைப்படும் போது ஸ்ரெயினை நிச்சயம் பயன்படுத்துவோம்" என அவர் தெரிவித்து உள்ளார்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சானியா மிர்சாவின் முன்னேற்றம் பாகிஸ்தானுக்கும் பெருமைதான்

## சோயிப் மலிக்



சானியா தொடர்ந்து டென்னிஸ் போட்டிகளில் விளையாடி வருவதால் என்னால் அவருடன் அதிகம் இருக்க முடியாமல் அவரை ரொம்பவே மிஸ் பண்ணுகிறேன். எனவே சானியா விளையாடும் அனைத்து போட்டிகளையும் பார்க்க தவறுவது இல்லை என சோயிப் மலிக் தெரிவித்துள்ளார்.

டென்னிஸ் உலகில் பரபரப்பான வெற்றிகளை தொடர்ந்து பதிவு செய்து வரும் மார்டினா ஹிங்கிஸ் - சானியா மிர்சா ஜோடி டபிள்யூ. டி. ஏ- பமிலி சர்க்கிள் கோப்பைக் கான போட்டியில் சம்பியன்ஷிப் பட்டம் வென்றதையடுத்து சானியா முதல் இடத்துக்கு முன்னேறினார்.

இந்தியாவின் சானியா மிர்சா இரட்டையர் பிரிவில் உலகின் நம்பர் வன் டென்னிஸ் வீராங்கனையாக முன்னேறி வரலாற்று சாதனை படைத்துள்ளது பாகிஸ்தானுக்கும் பெருமைதான் என்று சானியாவின் கணவர் சோயிப் மலிக் தெரிவித்துள்ளார்.

மேலும் இது பற்றி அவர் கூறும் போது, சானியாவின் கணவர் என்ற முறையில் எனக்கு பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது.

இந்தியாவை சேர்ந்த சானியா மிர்சா கடந்த 2010 ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சோயிப் மலிக்கை திருமணம் செய்து கொண்டார். (க)

# இலங்கை வீரர்களுக்கான தடை கவலையளிக்கிறது:திசரபெரேரா



ஐபிஎல் போட்டிகளில் சென்னையில் விளையாட இலங்கை வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பது கவலையளிக்கிறது என்று சகலதுறை ஆட்டக்காரர் திசர பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் தொடரில் கடந்த 2 வருடமாக இலங்கை வீரர்கள் சென்னையில் நடக்கும் போட்டியில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டது. இந்த தடை வீரர்களின் பாதுகாப்பு காரணத்திற்காக கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டும் சென்னையில் இலங்கை வீரர்கள் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தற்போது ஐபிஎல் போட்டிகளில் விளையாடி வரும் மலிங்க, திசர பெரேரா, மத்யூஸ் ஆகியோரால் சென்னையில் நடக்கும் போட்டிகளில் கலந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் இது தங்களுக்கு மிகவும் வருத்தமளிக்கும் விடயமாக இருக்கிறது என்று பஞ்சாப் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் திசர பெரேரா கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

இலங்கை வீரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்த தடை, தனிப்பட்ட முறையில் என்னை மிகவும் பாதித்துள்ளது. சில வருடங்களாக இரு அணிகளுக்கு இடையேயான ஒற்றுமை அதிகரித்துள்ளது.

இருப்பினும் எங்கள் வீரர்களை இந்த சீசனில் அதிகம் தெரிவு செய்யவில்லை. இதில் என்ன காரணம் இருக்கின்றது என்று எனக்கு தெரியவில்லை என்று கூறியுள்ளார்.

பஞ்சாப் அணி பற்றி மேலும் கூறுகையில், பஞ்சாப் அணியில் திறமை வாய்ந்த வெளிநாட்டு வீரர்கள் அதிகம் உள்ளனர். எனவே 11 பேர் கொண்ட அணியில் இடம் கிடைப்பது என்பது கடினம். இருப்பினும் நான் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (க)


# விஸ்வரூபம் எடுக்கும் பெங்களூர்; விராட் கோலி நம்பிக்கை

வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் காயத்தில் இருந்து மீண்டு வந்தால் பெங்களூர் அணி வலுவானதாக மாறும் என்று அணித் தலைவர் விராட் கோலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் தொடரில் கோலி தலைமையிலான பெங்களூர் அணி, முதல் இரு போட்டியில் தலா ஒரு வெற்றி, தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் வலுவான அணியாக இருந்தாலும், பந்து வீச்சில் சற்று பின்தங்கிய நிலையில் இருக்கிறது.

இதன் காரணமாக சொந்த மண்ணில் நடந்த ஐதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் பெங்களூர் வீரர்கள் எதிரணியின் 2



விக்கெட்டை மட்டுமே வீழ்த்தினர்.

அணியின் முன்னணி பந்து வீச்சாளர்கள் ஸ்டார்க், மில்னே காயத்தில் அவதிப்படுவது, அந்த அணிக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இதுகுறித்து விராட் கோலி கூறுகையில், எங்களது வேகப்பந்து வீச்சாளர்கள் வருண் ஆரோன், அபு நேசிம் போன்றவர்களுக்கு அதிக திறமை உள்ளது. இருப்பினும், இவர்கள் 'பார்முக்கு'வர சிறிது கால அவகாசம் தேவைப்படு கிறது.

இப்போதைய நிலையில் ஆடம் மில்னே மட்டும் அடுத்த போட்டியில் களமிறங்கலாம். இவர், 100 சத வீதம் உடற்தகுதியுடன் இருப்பார் என, நம்புகிறேன்.

இவர்களுடன் மிட்செல் ஸ்டார்க்கும் அணிக்கு திரும்பும்போது, பெங்களூர் விஸ்வரூபம் எடுக்கும் அணியாக மாறி விடும்.

அதுவரையில் இருக்கும் வீரர்களை வைத்து, விக்கெட்டுகளை வீழ்த்த முயற்சிப்போம் என்று தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப்பை பஞ்சராக்கியது டில்லி டேர்டெவில்ஸ்

கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நேற்று புனே எம்.சி.ஏ. சர்வதேச அரங்கில் நடைபெற்ற 10ஆவது லீக் ஆட்டத்தில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும், டெல்லி டேர்டெவில்ஸ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

ஆரம்ப வீரர்களாக சேவாக், முரளி விஜய் ஆகியோர் களமிறங்கினர்.

18 பந்துகளை எதிர்கொண்ட முரளி விஜய் 2 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் 19 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் மத்யூஸ் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய விர்த்திமான் சகா நிதானமாக ஆட, மறுமுனையில் சேவாக் அதிரடியில் இறங்கினார். இதனால் அணியின் [illegible] எண்ணிக்கை 100ஐ தொட்டது.



இந்நிலையில், பொறுப்புடன் ஆடிய சகா 39, அரைச் சதத்தை நெருங்கிய சேவாக் 47 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். 15 ஓவர்கள் கடந்த பின்னர் 2 சிக்சர்கள் அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்திய மக்ஸ்வெல், 15 ஓட்டங்கள் மட்டுமே எடுத்த நிலையில் அரங்கு திரும்பினார்.



மில்லர் 5 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். விறுவிறுப்பான கடைசி நேரத்தில் பெய்லி 19, அக் சர் பட்டேல் 13 என ஆட்டமிழக்க,

பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 165 ஓட்டங்கள் எடுத்தது.

டெல்லி டேர்டெவில்ஸ் தரப்பில் இம்ரான் தாகிர் 3, டுமினி 2, மத்யூஸ், மிஸ்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

166 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய டில்லி டேர்டெவில்ஸ் அணி 19.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை (169) அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அகர்வால் 68, யுவ்ராஜ் 55 ஓட்டங்களை எடுத்தனர்.



பந்துவீச்சில் பஞ்சாப் அணி சார்பில் அனுருத் சிங் 2, சந்திப் சர்மா, அக்ஷய் பட்டேல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப் பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக டில்லி அணியின் அகர்வால் தெரிவானார். (க)

## இன்றைய போட்டி

PEPSI IPL



ராஜஸ்தான் றோயல்ஸ்

VS

சன்ரைசர்ஸ் ஹைதராபாத்



விசாகபட்டினம், இரவு 8 மணி

## தேர்த் திருவிழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மடத்துவெளி சிறி பாலசுப்பிரமணிய சுவாமி (வயலூர்) ஆலய வருடாந்த தேர்த் திருவிழா உற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெற்று 9.30 மணியளவில் முருகப்பெருமான் தேரில் திருவீதியுலா வருகை தரவுள்ளார்.

இதேவேளை நாளை தீர்த்த உற்சவம் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ-11)

## வீடுகளை இடித்து இரும்பு கொள்ளை

யாழ்.வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுடைய வீடுகளை படையினர் இடித்து அழித்ததற்கு மேலதிகமாக நேற்றைய தினம் அப்பகுதியில் கொள்ளையில் ஈடுபட்டிருந்த 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்டிருந்த 9 கிராமசேவகர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் மக்கள் தற்போது தங்கள் காணிகளை துப்புரவு செய்யும் பணியினை முன்னெடுத்திருக்கின்றனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் மக்களுடைய வீடுகளை இடித்தழிக்கும் நாசகார செயலில், கொள்ளையர்கள் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர்.

குறித்த பகுதிகளில் இரவு மற்றும் பகல் வேளைகளில் நுழையும் கொள்ளையர்கள் விடுவிக்கப்பட்ட மக்களுடைய இடங்களுக்குள் நுழைந்து இரும்புக்காக படையினர் அழித்தது போக மீதமாக உள்ள கட்டிடங்களை இடித்து இரும்பு எடுக்கின்றனர்.

மேலும் மக்களுக்குச் சொந்தமான வேம்பு மற்றும் பலா, பூவரசு, தேக்கு ஆகிய மரங்களையும் கொள்ளையர்கள் வெட்டி வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர்.

இந் நிலையிலேயே பொலிஸார் திடீர் சோதனையினை நடத்தி 30 பேரை கைதுசெய்துள்ளனர். (செ-11)

## உள் விசாரணையில்...

அவர் இலங்கை பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று முன் தினம் நாடு திரும்பிய உடன் அவர் வெளியிட்டுள்ள இரண்டாவது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இலங்கையில் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு தீர்வு காண சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும், செய்ய வேண்டியவை இன்னும் நிறைய இருக்கின்றன.

இராணுவ வெற்றியின் மூலமே அனைவரும் ஒன்றாக வாழ்ந்து விட முடியும் என்பது தவறான அணுகுமுறை என்பதை இலங்கை புரிந்துகொள்ளத் தொடங்கியிருந்தாலும் அனைத்து மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டிய விடயத்தில் ஏராளமான பணிகள் இன்னும் உள்ளன.

நாட்டில் வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் ஆகியனவற்றுக்கு பொறுப்புக் கூறுவது தொடர்பில அரசு இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது. அவ்வகையில் நீண்டகால அடிப்படையில் அரசு கொள்கைகள் மற்றும் அதற்கான ஆலோசனைகளை வடிவமைக்கும்போது, அவை பொறுப்புக்கூறலுக்கு அப்பாற்பட்டு இனியும் வன்முறைகள் நிகழாதவாறு பார்த்துக் கொள்ளுதல், பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவித் திட்டங்களுக்கான உத்தரவாதத்தை உறுதிப்படுத்தல் போன்றவற்றைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இலங்கை முன்னேறிக் கொண்டு வரும் வேளையில் அண்மைக் காலமாக நல்லிணக்கம் எனும் சொல் அங்கு மிகவும் கவனத்தை ஈர்த்திருந்தாலும், குறுக்கு வழி மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. நீதிக்கு கட்டுபட்ட வகையில், உண்மைகள் வெளிக்கொண்டு வரப்பட்டு, இழப்பீடுகள் வழங் கப்பட்டு, தவறுகள் மீண்டும் நடைபெறா வண்ணம் உறுதிப்படுத்தப்பட்டாலே நல்லிணக்கம் ஏற்படும்.

நல்லிணக்கம் ஏற்படுவதற்கு மாற்று வழிகளை ஆராயாமல் அரசு எடுக்கும் நடவடிக்கைகள் ஒன்றோடு ஒன்று இணைந்து பயனளிக்கும் வகையில் இருக்க வேண்டும்.

சில ஆதாயங்களுக்காக பலதை விட்டுவிடுவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்காமல் நடைமுறைக்கு ஒவ்வாத மாற்று வழிகளை தெரிவு செய்யுமாறு கூறுவதெல்லாம் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு உதவாமல் எதிர்மறையாகவே அமையும்.

நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை அடுத்தவர்கள் மறந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வு என்பது அடிப்படை உரிமை. பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கு தீர்வு காண அரசு முன்னெடுக்கும் கொள்கையானது, அந்த முடிவை எடுக்கும் அரசின் கொள்கையாக இல்லாமல் ஆட்சியில் யார் இருந்தாலும் மாறாத அரச கொள்கையாக இருக்க வேண்டியது அவசியம்.

[illegible] களால் அழித்தொழிக்க முடியாத வகையில் இருப்பதும் மிகவும் அவசியம். அரசு எடுக்கும் கொள்கை முடிவுகளானது அடிப்படை உரிமைகள், உண்மைகளுடன் தொடர்புடையவை, நீதி மற்றும் நியாயம் சார்ந்தவை, இழப்பீடுகளுடன் சம்பந்தபட்டவை, இனியும் அவ்வாறான தவறுகள் நடைபெறாது எனும் உத்தரவாதங்கள் தேவைப்படுபவை என்பதை கவனத்தில் கொண்டு உருவாக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசு எடுக்கும் முடிவுகள் குறுகிய அரசியல் இலாபங்களுக்காகவோ அல்லது இனம், மதம், மொழி, அடையாளங்கள் போன்றவற்றை மனதில் வைத்தோ எடுக்கப்படக் கூடாது.

இலங்கை அரசின் அழைப்பின் பேரில் கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 3ஆம் திகதி வரை நாட்டின் வடக்கு கிழக்கின் பல பகுதிகளுக்கு பயணம் செய்து, பலதரப்பினரைச் சந்தித்து உரையாடி தகவல்களை சேகரித்ததன் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## நிலையான...

பண வீக்கம், இந்த வருடம் முழுவதும் 5 வீதத்திற்கு மேற்படாத மட்டத்தில் காணப்படும் எனவும் மத்திய வங்கி எதிர்வு கூறியுள்ளது.

இந்த சூழ்நிலையின் கீழ், பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்கும் தனியார் துறையின் கடன் அளவை அதிகரிப்பதற்காக வட்டி வீதத்தை தொடர்ச்சியாக குறைப்பதே மத்திய வங்கியின் எதிர்பார்ப்பாகும்.

கடந்த சில மாதங்களாக தனியார்துறை கடன்கள் குறிப்பிடத்தக்களவால் அதிகரித்துள்ளதுடன், பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் அந்த கடன் தொகை 12.6 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதனை மேலும் அதிகரிக்கும் நோக்கில் மத்திய வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்களின்போது தாக்கம் செலுத்தும் நிலையான வைப்பு வசதிகளுக்காக 6 வீதம் வரையும், நீண்டகால கடன்களுக்காக 7.5 வீதம் வரையும் வட்டியை மத்திய வங்கி குறைக்க உத்தேசித்துள்ளதாக கூறப்படுகிறது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லையில்...

வுள்ளன.

முன்னதாக காலையில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளான போர்த்தேங்காய் அடித்தல், முட்டி உடைத்தல், கிடுகு பின்னுதல், தேங்காய் துருவுதல், கோலம் போடுதல், கயிறு இழுத்தல், தாச்சிப் போட்டி, கிறிஸ்மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, மெதுவான சைக்கிள் ஓட்டம், கிட்டி அடித்தல், பலூன் ஊதி உடைத்தல், சாக்கு ஓட்டம், தேசிக்காய்க் கரண்டி ஓட்டம், யானைக்கு கண் வைத்தல் என்பனவும் மதிய இடைவேளைக்குப் பின்னர் பிற்பகல் கலைநிகழ்வுகளான வரவேற்பு நடனம், ஊஞ்சல் நடனம், குடமூதற்கும்மி, கரகாட்ட நிகழ்வு, சிங்கள நடன நிகழ்வு, சிங்கள கிராமிய நடனம், அரிவுச்சிந்து, பண்டாரவன்னியன் நாடகம், கிராமிய நடனம் மற்றும் கிராமிய இசை நிகழ்வுகள் என பல நிகழ்வுகள் திரும்ப ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இப் போட்டிகளில் பங்குபற்றுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (செ)

## தேர்தல்...

முறைமையில் 165 உறுப்பினர்களையும், விகிதாசார அடிப்படையில் 85 உறுப்பினர்களையும் தெரிவு செய்யதிட்டமிட்டுள்ளது.

160 தேர்தல் தொகுதியில் 165 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 250 ஆக உயர்த்தப்பட உள்ளதாகவும் தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் எண்ணிக்கை 25 எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு முறைகள் பரிந்துரை செய்யப்பட்டாலும் தேர்தல் தொகுதி மீள் நிர்ணயங்கள் இன்றிசெய்யக்கூடிய இலகுவான முறைமை இது வென ராஜித தெரிவித்துள்ளார்.

அடுத்த தேர்தலுக்கு முன்னதாக தேர்தல் முறைமையில் மாற்றம்செய்யப்பட வேண்டுமென சுதந்திரக்கட்சி சார்பில் வலுவான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பயிற்சிபெற்ற புலிகளுடன் மோது...

உருவானதாகவும், இது தர்ம சங்கடங்களைத் தோற்றுவித்ததாகவும் சத்தீஸ்கர் மாநிலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசுகையில் வி.கே.சிங் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அழிக்க இந்திய அமைதிப் படைக்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும், ஒவ்வொரு முறையும் பிரபாகரனை பத்திரமாகச் செல்ல அனுமதிக்குமாறே உத்தரவு வழங்கப்பட்டது என்றும் வி.கே.சிங் கூறியுள்ளார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச, இந்திய இராணுவத்தை எதிர்க்க விடுதலைப் புலிகளை பயன்படுத்தியதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

இந்த சூழலில் ஜெனரல் வி.கே. சிங் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து பேசிய இந்திய அமைதிப் படையில் பங்காற்றிய கேணல் ஹரிஹரன் இராணுவக் குறிக்கோள்கள் தெளிவாக இல்லை என்றார்.

ஆனால் தனக்குத் தெரிந்தவரை ஒரே ஒரு முறைதான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மறைவிடத்தை இந்தியப் படையினர் நெருங்கியதாகவும், அப்போது பிரபாகரன் தப்பிவிட்டதாகவும் தெரிவித்தார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் அதிக அளவு உயிரிழப்புக்களை சந்தித்தது.

நகர்ப்புறங்களில் விடுதலைப் புலிகளின் செயல்பாடுகளை அமைதிப்படை கட்டுப்படுத்தினாலும், காடுகளுக்குச் சென்று பதுங்கிய விடுதலைப் புலிகள் கெரில்லா போர் முறையை கையாண்டு அமைதிப் படைக்கு தொடர்ந்து தொல்லை கொடுத்தனர். இந்திய அமைதிப் படை எத்தகைய அரசியல் குறிக்கோள்களை நிறைவேற்றப் போகிறது என்ற தெளிவில்லாத சூழல் ஏற்பட்ட தன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டதாக முன்னாள் இந்திய இராணுவ அதிகாரிகள் பலர் தெரிவித்துள்ளனர்.

இந்திய இராணுவம் இலங்கையில் கால் பதித்தபோதே, அந்த இராணுவ நடவடிக்கைக்கு எதிராக இந்தியாவில் மிகவும் மதிக்கப்பட்ட முன்னாள் ராஜதந்திரிகள் குரல் எழுப்பியதை நினைவு கூர்ந்த இலங்கையின் முன்னாள் ராஜதந்திரியான டாக்டர் தயான் ஜெயதிலக, இந்தியாவின் முரண்பட்ட குறிக்கோள்களே இராணுவத் தோல்விக்குக் காரணம் என்கிறார்.

இலங்கையின் ஒருமைப்பாட்டை பேணுவதாக உறுதியளித்த இந்தியா, தமிழகத்திலிருந்து எழுந்த அரசியல் அழுத்தம் காரணமாக பல்வேறு ஆயுதக் குழுக்களுக்கும் ஆயுதங்களையும், பயிற்சிகளையும் அளித்தது. ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த முரண்பட்ட நிலைப்பாட்டின் காரணமாக அமைதிப்படை பெரிய விலை கொடுத்தது என்றார்.

விடுதலைப் புலிகளால் ஏற்பட்ட சவாலுக்கு இராணுவ ரீதியி[illegible] மட்டுமே தீர்வுகாண முடியும் என்று உறுதியாக முடிவெடுத்து அதற்காக தேசிய வளங்களை திரட்டியதன் காரணமாகவே புலிகள் பிரச்சினையை மகிந்த ராஜபக்ஷவால் தீர்க்க முடிந்தது என்றும் தயான் ஜெயதிலக தெரிவித்தார். (செ-11)

## கணவர் குறி...

ஆயிரக்கணக்கானவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்கள் வெளியாகாத நிலையில், பிரதமரின் இப்படியான கருத்து துயரமான விடயம் எனக் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் காணாமல் போனவர்களுக்காக குரல் கொடுத்த புதிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஆட்சிக்கு வந்த பின்னர், அது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் எந்த வகையிலும் திருப்தியடைய முடியாது எனவும் சந்தியா குறிப்பிட்டுள்ளார்.

தனது கணவர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் சந்தியா எக்நேலியகொட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் மீது தொடர்ந்தும் குற்றம் சுமத்திவந்த நிலையில்.

அவர்கள் அதிகாரத்தில் இருந்து இறக்கப்பட்டமை தொடர்பாக மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைவரும் புதுமையான அச்சத்தில் இருந்தனர். அவர்கள் தோல்வியடைந்தமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால், ஓரளவு சுதந்திரத்தை நாங்கள் அனுபவித்து வருகின்றோம்.

இவர்களின் தோல்வியின் பின்னர் பிரகீத் சம்பந்தமாக தகவல் ஒன்றும் கிடைக்காதது மற்றும் விசாரணைகள் முடிவடையாதது குறித்து கவலையடைகிறேன்.

அரசாங்கம் மாறியுள்ள நிலையில், பிரகீத் பற்றி ஏன் எந்த தகவல்களும் இல்லை என பலர் கேள்விகளை எழுப்புவதாகவும் சந்தியா எக்நேலியகொட மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


JAFFNA FUN FAIR CARNIVAL

'சித்திரைக் குதூகலம், 2015'

களியாட்ட மற்றும் விநோத நிகழ்வுகள்

எதிர்வரும் சித்திரை வசந்தம் 22 23 24 25 மற்றும் 26 ம் திகதிகளில்

"யாழ் மாநகரசபை திறந்தவெளி மைதானத்தில்"

Municipal Ground - Jaffna (Opp. Subramanium Park)

பி.ப 2.00 மணிமுதல் இரவு 12.00 மணிவரை

Main Sponsor Rio Ice Cream

Official Electronic Media Sponsor சூரியன் FM 103.4 103.6

Official Print Media Sponsor தினக்குரல்

Event Organizer SC CREATIONS

விற்பனைக்கூட ஒதுக்கீடுகளுக்கு அழைக்கவும் : Vimal on 077 915 1735 / Susantha on 077 229 8014

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

VERY HAPPY NEW YEAR TO OUR DEAR STUDENTS HAVE A GREAT JOURNEY AHEAD



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS ஐ வழங்குகிறோம். மொழி பெயர்ப்புகள். ஆசிரியர்கள்: யாழ். பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND... செல்கிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு கட்டண குறைப்பு

ஆரம்பம் 25.04.15. 8.30am 18.04.15க்குமுன் பதிவுசெய்யுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → றக்கா றோட் → AF

யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்



அருள் ஒளி தர்சன மாலையும் சித்திரை புதுவருட சிறப்புப் பூஜையும்

இடம் :- இளம் கலைஞர் மண்டபம் சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம் :- 19.04.2015 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி



வரமருளிக் காத்தருள மனோன்மணி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையரின் அருள் ஒளி தர்சன மாலையும் சித்திரை புதுவருட சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கெனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்கு பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும். பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப் பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**குறிப்பு :** ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தச்சோலை வீதி, பூந்தோட்டம், வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பி.ப 4.30 மணிக்கு இலங்கை வானொலி தமிழ் சேவையில் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறுகின்றது. (083)

யாழ் தொடர்புகளுக்கு : 0779825004 ஆலய தொட[illegible]



வசந்தம் TVயின் சித்திரை திருவிழா 2015

18ம் திகதி - காலை 9.00 மணி முதல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில்

முன்கூட்டிய பதிவுகளுக்கு பிரதேச விளையாட்டுப் பிரிவு அதிகாரியை தொடர்பு கொள்ளவும்

மேலதிக விபரங்களுக்கு Mugunthan : 077 664 8996 Mohan : 077 614 5246

சைக்கிள் ஓட்டம் - ஆண்கள்: 1ம் பரிசு - ரூ 25,000; 2ம் பரிசு - ரூ 20,000; 3ம் பரிசு - ரூ 15,000; மற்றும் ஆறுதல் பரிசுகள்

சைக்கிள் ஓட்டம் - பெண்கள்: 1ம் பரிசு - ரூ 20,000; 2ம் பரிசு - ரூ 15,000; 3ம் பரிசு - ரூ 10,000; மற்றும் ஆறுதல் பரிசுகள்

மரதன் ஓட்டம் - ஆண்கள்: 1ம் பரிசு - ரூ 25,000; 2ம் பரிசு - ரூ 20,000; 3ம் பரிசு - ரூ 15,000; மற்றும் ஆறுதல் பரிசுகள்

மரதன் ஓட்டம் - பெண்கள்: 1ம் பரிசு - ரூ 20,000; 2ம் பரிசு - ரூ 15,000; 3ம் பரிசு - ரூ 10,000; மற்றும் ஆறுதல் பரிசுகள்

மற்றும் முட்டி உடைத்தல், தலையனை சண்டை, கயிறு இழுத்தல், கிறீஸ் மரம் ஏறுதல், உள்ளிட்ட பாரம்பரிய கலாச்சார சித்திரை விளையாட்டுக்களில் கலந்து கொண்டு பெறுமதியான பணப்பரிசுகளை வெல்லுங்கள். !!!

ஏற்பாட்டு உதவி : மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் - கரவெட்டி நெல்லியடி - பொலிஸ் நிலையம்

MASS CREATION


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org